Registered as a News Paper in Sri Lanka

பக்கம் 24 ரூபா 30.00

දිනමුරසු වාරමලර්

செப்ரெம்பர் 08 - 14, 2011

# வாரமலர் தினமுரசு

THINAMURASU SRI LANKA'S NATIONAL TAMIL WEEKLY முரசு 927

## மர்ம மனிதர்கள் பொறுப்பு யார்?





துரோகத்தனம் தாண்டவமாடிய தருணம்

புலித் தளபதியின் வாக்குமூலம்

## தலைநகரில் தேர்தல்

## முக்கோணப் போட்டி

## ஆன்மாவின் செயல்களின் விளைவு

"உள்ளம் பெருங்கோயில் ஊனு டம்பு ஆலயம்" என்னும் திருமூலரின் வாக்கை எண்ணும் பொழுது உள்ள மென்னும் கோயிலில் குடி கொண்டி ருக்கும் ஆன்மாவானது தெய்வநிலை பெற்றிருப்பதால், நன்மை, தீமைகள் நடந்தேறுகின்றன. மனச்சாட்சியே இல்லாத மனிதன், இறைவனைப் பிரார்த்திப்பதில் பயனில்லை என்பதனை திருமூலர் குறிப்பிடுகின்றார்.

நாம் மலையளவான உயர்ந்த தானத்தைச் செய்தாலும் இறைவனே இவற்றிற்கெல்லாம் காரணமானவன் என்று உணராதவனுக்கு எந்தக் கொடையாலும் பயனில்லை.

எமது மனமானது எப்பொழுதும் கடவுளையே நினைக்குமானால் அது இறைவனையே அடையும் என்று கூறப்பட்டுள்ளது.

எஸ்.பிரதா-கிளிநொச்சி.

## புதுமையும் பழமையும்

ஆன்மீகம்

புதிய துணியில் பழைய ஆடையை ஒட்டுப்போடுவதில்லை. அதுபோல, புதிய திராட்சை மதுவை பழைய போத்தல்க்ளில் அடைப்பதில்லை. பழைய திராட்சை மதுவைச் சுவைத்தவர், புதிதை விரும்புவதில்லை. சில பொருள்கள் பழையவை ஆகும்போது நல்ல குணமுடையவையாக மாறக் கூடும். ஆனால் பழைய பொருள்கள் எல்லாமே நல்லவையாக இருப்பதில்லை. திராட்சை மது எவ்வளவு பழையதாக இருக்கிறதோ அவ்வளவு தரத்திலும் சுவையிலும் சிறந்ததாக இருக்கும் என்பது அனுபவ உண்மை வழியாக இயேசு கடவுளாட்சி பற்றிய ஆழ்ந்த கருத்தினை எடுத்துரைக்கிறார். பழைய ஏற்பாட்டின் நிறை வாக புதிய உடன்படிக்கையின் அடையாளமாக வந்தவர் இயேசு. பழைய கட்டளைகளைக் கடந்து புதிய அன்புக் கட்டளைக்குள் நுழைய அழைப்பு விடுத்தவரும் அவரே. ஆனால், பலரும் பழைய சிந்தனைகளிலேயே இருப்பதை உணர்ந்து இந்த உவமையைச் சொன்னார். நாம் இன்று புதிய யுகத்தில் வாழ்ந்து கொண்டிருக்கிறோம். புதுமையான தொழில்நுட்ப முன்னேற்றங்களை ஏற்றுக்கொண்டிருக்கிறோம், பயன்படுத்திக்கொண்டிருக்கிறோம். இருப்பினும், சமூக உறவுகள், மானிட உறவுகள், மதிப்பீடுகள் போன்றவற்றில் இன்னும் பழையவற்றையே பற்றிக்கொண்டிருக்க வேண்டும் என்று விரும்புகிறோம். பழையதே நல்லது என்ற சிந்தனை நம்மில் பலருக்கும் இன்னமும் இருக்கிறது. மானிட வாழ்வுக்குப் பொருள் தராத, இறைவனது பார்வையில் ஏற்கப்படாத பழமையைப் பற்றிக்கொண்டு வாழ்வதில் என்ன இருக்கிறது. பழமை என்பதற்காக அல்ல, நல்லது, நேர்மையானது என்பதற்காக மட்டுமே மதிப்பீடுகள் ஏற்கப்பட வேண்டும் என்னும் சிந்தனைக்குள் நாம் புக வேண்டும்.

ஜெ.அலெக்ஸ், ஆனைக்கோட்டை.

## ஹிதாயத் என்றால் என்ன?

'ஹிதாயத்' என்பது உள்ளத்தில் உண்டாகும் ஓர்வெளிச்சத்திற்குக் கூறப்படும். அந்த வெளிச்சம் இருந்தால் தான் அல்லாஹ்வின் பயமும் மறுமை யின் சிந்தனையும் உண்டாகி மரணத்திற்குப் பின்னுள்ள வாழ்க்கைக்கு வேண்டிய சாதனங்களைத் தேடுவதற்கு ஆர்வமுண்டாகும்.

'ஹிதாயத்' என்ற செல்வம் இவ்வுலகிலுள்ள அனைத்துச் செல்வங்களைவிட மிகவும் உயர்ந்த செல்வம். "யார் நம்முடைய பாதையில் முயற்சி செய்வார்களோ, அவர்களுக்கு நாம் ஹிதாயத் (என்னும் பேரொளியைக்) கொடுப்போம்" என்பது குர் ஆனின் வாக்குறுதியாகும்.

வட்டி வாங்குவது, பொய் கூறுவது, மோசடி செய்வது, சரக்குகளில் கலப்படம் செய்வது, வீண்விரயம் செய்வது குடிப்பது, விபச்சாரம் இவைகள் யாவும் கூடாத விஷய மென்று தெரிந்திருந்தும் செய்வதற்குக் காரணம் உள்ளத்தில் 'ஹிதாயத்' என்ற வெளிச்சம் இல்லாததுதான். இத்தகைய காரியங்களைச் செய்யக் கூடியவர்களை "அகக்கண் குருடர்கள்" என்று கூறப்படும். ஹிதாயத் கிடைத்தால்தான் அகக்கண்பார்வை கிடைக்கும்.

முஹம்மது ஹஸனி, கல்முனை-07

# வாசகர் சாலை

### ஆத்மார்த்தமானவை

பல்சுவை அம்சங்களை அற்புதமாகவும் சிறப்பாக வெளியிடுகின்றாய். எல்லாப் பக்கங்களுமே எனக்குப் பிடித்தவைதான். ஆனாலும் சில பிழைகளையும் சுட்டிக்காட்ட விரும்புகின்றேன். எழுத்துப் பிழைகள் சில இடங்களில் வருகின்றது. இதைத் தவிர்க்க வேண்டும் என்பதே கட்டாயமான வேண்டுகோள். அதைவிட அனைத்துப் பகுதிகளும் சிறப்பு வாய்ந்தவை. தேன்கிண்ணம், தீண்டும் இன்பம், மனதுக்கு நிம்மதி என்பவை ஆத்மார்த்தமானவை.

சி.இளங்கோ, மன்னார்.

### அசர வைத்தாய்

அசர வைத்துவியக்க வைக்கும் முரசே! நானிலமெங்கும் புகழ்பொங்க வலம் வருகிறாய். நானிலத்தில் உள்ள வாசகர்களில் நானும் ஒருவர். படைப்புக்களின் பிரம்மா போலவே புதிதாய் உருப்பெறும் ஆக்கங்களோ, கவிதையோ எழுதுபவர்களுக்குப் புத்துயிர் அழிக்கின்றாய். அந்த வகையில் எனது ஆக்கம் இடம்பெற்றமைக்கு நன்றிகள். மதியூகியின் "அதிகரிக்கிறது அமெரிக்க தலையீடு" எனும் கட்டுரை மிகவும் பாராட்டப்படத்தக்கது.

ம.சிந்து, புத்தளம்.

### நியாயமான தீர்ப்பு!

கலக்கலான முகப்புடன் துலக்கமான தகவல்கள் பலவற்றை அள்ளித் தருகின்றாய். 24 ஆம் பக்கத்தில் வரும் தகவல்கள் சுவாரசி யமாக உள்ளது.

ஒவ்வொரு கட்டுரைகளையும் துணிவுடனும், மிடுக்குடனும் சொல்வதில் உனக்கு நிகர் நீயே. எனக்கு நீ சுமந்துவரும் அரசியல் கட்டுரைகள் மிகவும் பிடிக்கும். 926 முரசில் வெளிவந்த "நீதிக்காகக் காத்திருக்கிறார்கள் அரசியல் கைதிகள் ஆக்கம் உண்மையை உண்மையாகவே கூறியுள்ளது. நியா யமான தீர்ப்பும் கூட.மேலும் வளர வாழ்த்துக்கள்.




எஸ்.தியா,யாழ்ப்பாணம்.

# கவிதைப் போட்டி இல.927



எண்ணத்தில் தோன்றும் கவிதைகளை வார்த்தைகளின் எண்ணிக்கை அதிகமில்லாமல், தபாலட்டையில் மட்டும் பதிவு செய்து அனுப்பி வையுங்கள். அனுப்பவேண்டிய கடைசித் திகதி 18.09.2011

கவிதைப் போட்டி இல. 927 தினமுரசு வாரமலர், த.பெ.இல. 167, யாழ்ப்பாணம்.

இல. 373, பிரதான வீதி, யாழ்ப்பாணம்.

### அடுத்த வேளைக்கு..?

கிடைத்ததை
உண்போம் அடுத்ததை
பார்ப்போம்.
இவ்வேளை இது போதும்
அடுத்தவேளை யார்
தருவார்?

G.K.யோகச்சந்திரன்,
அக்கரைப்பற்று-07

### விதியா சதியா??

ஆண்டவனே -நீ
படைத்தது போதும் - உன்னுடன்
வாழ்ந்தது போதும்-இவர்களின்
தாய், தந்தையை - நீ
எழுந்தது போதும்.
பசியின் கொடுமையைப் பார்
தாயைத் தேடும் பசுக்கன்று போல
இந்த பிஞ்சு முகத்தைப் பார்- இது
விதியா...?
அல்லது உங்கள் சதியா...?

வீ.அன்னராசா-கொம்மாந்துறை

### அநாதைகள்

கண்மணிகளே!
உங்களை...
கண்ணாய் வளர்த்த
தாய், தந்தையரை பலிகொண்ட
எறிகணையின்-கூவல்
இன்னும் உம்காதில்
கேட்கிறதா?

கி.வியூகன்,
கிளிநொச்சி.

### உணவு

சுற்றுப்புறம் என்ன
ஆனாலும் என்
வழி அசையாது
ஒரு வேளை
கிடைக்கும் சோற்றை
உண்பதே என் இலக்கு.

சுமித்தி, மருதடி.

### புண்ணியம்

உண்பதற்கு
ஒருவேளை
உணவின்றி வறுமையால்
வாடிய இந்த ஏழைச்
சிறார்களுக்கு
உணவளித்த அந்தப்
புண்ணியவான் யாரோ?

சு.ஜெயரூபன்,
பருத்தித்துறை.

### மறந்துவிட்டோம்

எத்தனையோ நாட்கள்
உணவின்றி வாடினோம்
உணவைப் பார்த்ததும் உலகம்
மறந்துவிட்டதே!

சி.பைரவி,
காலி.

## கவிதைப்போட்டி இல.924

### பாராட்டுக்குரியது



### வலதும் இடதும்

வலக்கரமொன்று
இடக்கரம் மற்றது
அள்ளிப் புசிக்க
பசியாறும்.
வலதும் இடதும்
ஒன்று கூடினால்
நாட்டிலும்
மலருமே சபீட்சம்.

அ.சந்தியாகோ
கண்டி.

மடல்கள் மற்றும்
ஆக்கங்கள் உட்பட சகல
தொடர்புகளுக்கும்
தினமுரசு வாரமலர்
த.பெ.இல:- 1772,
கொழும்பு,
த.பெ.இல:- 167,
யாழ்ப்பாணம்.
தொலைபேசி :-0212221811
தொலை நகல்
(Fax): 0212221811
ஈ-மெயில்:
(E-mail):- thinamurasu@live.com

# உங்கள் பக்கம்

## கொழகாமம் சந்தை ஒழுங்கை திருத்துவது எப்போது?

யாழ்ப்பாணத்தில் தென்மராட்சிப் பிரதேசம் முக்கியமான வியாபார மையங்களில் கொடிகாமம் ஒன்றாகும். கொடிகாமம் சந்தைக்குப் பின்புறமாக அமைந்திருக்கின்ற சந்தை ஒழுங்கையினை பல இடங்களிலிருக்கும் மக்கள் போக்குவரத்துக்காக பயன்படுத்தி வருகின்றனர்.

மிக நீண்ட காலமாக செப்பனிடப்படாது மணற்தரையாகக் காணப்படுகின்ற தாழ்வான இந்தப் பாதை, மழை காலங்களில் மிகவும் மோசமான நிலை யில் சீரழிந்து காணப்படுகின்றது. சந்தைக் கழிவுப் பொருட்களும், இவ் ஒழுங்கையால் மழைநீருடன் சேர்ந்து செல்கின்றமையால் துர்நாற்றம் வீசுகின்றது.

அத்துடன் இவ் ஒழுங்கையினால் இப்பிரதேச மழைநீர் செல்கின்றது. ஆகவே மழை காலங்களில் இந்த ஒழுங்கையினூடாக மக்கள், மாணவர்கள் ஆகியோர் செல்ல முடியாத துர்ப்பாக்கிய நிலைக்கு உள்ளாகின்றனர். இங்குள்ள மக்களுக்கு இந்த பாதை மட்டுமே இருப்பதால் மழை காலங்களில் தண்ணீருக்குள்ளால் சென்றுதான் தங்கள் தேவைகளைப் பூர்த்தி செய்ய வேண்டியுள்ளது. இதனால் இங்குள்ள மக்கள் மிகவும் சிரமத்திற்கு உள்ளாகின்றனர்.

தேர்தல் காலங்களில் இப்பாதையைத் திருத்தி தருவதாக வாக்குறுதி அளிக்கின்ற அரசியல்வாதிகளும் இதுவரையில் செப்பனிடுவது பற்றி ஆக்கபூர்வமான நடவடிக்கைகளை எடுக்கவில்லை. மழை காலம் நெருங்குவதால் மக்கள் மிகவும் சிரமத்திற்கு ஆளாக வேண்டிய துர்ப்பாக்கிய நிலை உருவாகியுள்ளது. ஆனால் இதுவரை எதுவித நடவடிக்கையும் எடுக்கவில்லை.

எனவே மீண்டும் இப்பிரச்சினையை முன் வைத்தாயினும் குறித்த பாதையை பயன்படுத்துகின்ற மக்களின் அவலங்களுக்கு முடிவைப் பெற்றுக் கொள்ள முடியும் என்ற நம்பிக்கையோடு இதனை உரிய அதிகாரி களின் கவனத்திற்கு கொண்டுவர விரும்புகின்றேன்.

சி.வரன், சந்தை ஒழுங்கை, கொடிகாமம்.

# கூட்டமைப்பின் தலைமைத்துவம் தமிழ் மக்களுக்கு வேண்டாம்

## இலண்டனில் தமிழ் மக்கள் சீற்றம்

லண்டனில் அண்மையில் நடைபெற்ற தமிழ் தேசியக் கூட்டமைப்பு நாடாளுமன்ற உறுப்பினர்கள் ஞா.சிறிதரன் மற்றும் மாவை சேனாதிராஜா கலந்து கொண்ட பொதுக் கூட்டம் ஒன்றிலே பயங்கொண்ட அரசியல் தலைமைத்துவம் தமிழ் மக்களிற்கு வேண்டாம் எனக் கலந்து கொண்ட ஒருவர் தெரிவித்தார்.

யாழ்ப்பாணம் மற்றும் மட்டக்களப்பில் கிறீஸ் மனிதர்களுக்கு எதிராக தமிழ் மக்கள் கிளர்ந்தெழுகின்றனர். இராணுவம் மற்றும் பொலிசாருக்கு எதிராக குரல் போராட்டங்களை நடத்துக்கின்றனர். இது தொடர்பாக தமிழ் தேசியக் கூட்டமைப்பு ஆக்கபூர்வமான எந்த நடவடிக்கையையும் எடுக்கவில்லை. அறிக்கைகள் விடுவதுமட்டும் எமது மக்களுக்கு அரசியல்வழிகாட்டலாக இருக்கமுடியாது என்றும் பலரும் கருத்துத் தெரிவித்தனர். இலண்டன் வாழ் தமிழ் மக்களால் தாயக மக்களின் மறுவாழ்வு தொடர்பான கலந்துரையாடல் கூட்டமாக அறிவிக்கப்பட்டிருந்த இக்கூட்டம் ஹரோ நகரப்பகுதியில் அமைந்துள்ள மண்டபம் ஒன்றில் நடைபெற்றது. தாயக மக்களின் அவலநிலைகள் தொடர்பாக நாடாளுமன்ற உறுப்பினர்கள் சிறிதரனும் மாவை சேனாதிராஜாவும் மதில் கலந்து கொண்டனர். இங்கு உரையாற்றிய மாவை சேனாதிராஜா, தந்தை செல்வாவினால் முன்வைக்கப்பட்ட தமிழ் மக்களின் சுயநிர்ணய உரிமைக் கோட்பாட்டிற்காக தாம் தொடர்ந்து செயற்பட்டுவருவதாக தெரிவித்ததோடு, அதற்காக தாம் தொடர்ந்து உழைக்க விருப்பதாக தெரிவித்தார். ஒஸ்லோ உடன்படிக்கை தொடர்பாக கருத்து தெரிவித்த மாவை, 51 நாடுகள் உதவிபுரிவதாக உறுதியளித்த உடன்படிக் கையை ஏற்று அமுல் படுத்தாது இருந்தது தமிழ் மக்களின் பிரதிநிதிகள் செய்த தவறு என்று சாரப்பட கருத்து வெளியிட்டிருந்தார். அங்கு கருத்துத் தெரிவித்த ஒருவர் யாழ்ப்பாணம் மற்றும் மட்டக்களப்பில் கிறீஸ் மனிதர்களுக்கு எதிராக தமிழ் மக்கள் கிளர்ந்தெழுகின்றனர். இராணுவம் மற்றும் பொலிசாருக்கு எதிராக குரல் எழுப்புகின்றனர். ஆனால் தமிழ் தேசியக் கூட்டமைப்பு எந்தவொரு நடவடிக்கையிலும் ஈடுபடவில்லை எனவும் வெறுமனவே அறிக்கைகளை விட்டுவிட்டு இருக்கின்றனர் என்ற குற்றச்சாட்டு அக் கூட்டத்தில் கலந்து கொண்டவர்களால் முன்வைக்கப்பட்டது. இதற்கு கருத்து தெரிவித்த மாவை தமிழ் தேசியக் கூட்டமைப்பு எடுக்க விருக்கும் நடவடிக்கைகளை பொறுத்திருந்து பார்க்குமாறு தெரிவித்தார். மாவை சேனாதிராஜாவின் கருத்தைத் தொடர்ந்து பேசிய மற்றுமொருவர் தமிழ் தேசியக் கூட்டமைப்பு சுயநிர்ணயக் கோட்பாட்டை ஒரு வெற்றுக் கோஷமாகவே பயன்படுத்துவதாக குறித்த கூட்டத்தில் கலந்து கொண்டவர்களால் குற்றஞ்சாட்டப்பட்டது. தேர்தல் கால விஞ்ஞாபனங்களிலும் மேடைப் பேச்சுக்களில் மட்டுமே தமிழ் தேசியக் கூட்டமைப்பு சுயநிர்ணயக் கோட்பாடு பற்றி தெரிவிப்பதாகவும் இராஜதந்திரிகள் மற்றும் பேச்சுவார்த்தை மட்டங்களில் அதைக் கைவிட்டுவிட்டதாகவும் குற்றஞ்சாட்டப்பட்டதோடு, அண்மையில் இந்தியாவில் நாச்சியப்பன் தலைமையில் ஒழுங்கமைக்கப்பட்டு நடத்தப்பட்ட மாநாட்டில் கூட்டமைப்பு சுயநிர்ணய உரிமை கோட்பாட்டுப் பிரச்சினை எழுந்த போது, சுயநிர்ணயக் கோட்பாட்டை நிராகரித்த ஆனந்தசங்கரி பக்கம் சார்ந்து கருத்து வெளியிட்டதை சுட்டிக்காட்டி கூட்டமைப்பின் மீது குற்றஞ்சாட்டப்பட்டது. இதற்கு பதிலளித்த மாவை குறுகிய கால அவகாசத்தால் தமக்கு ஆராய்ந்து ஒரு முடிவுக்கு வரமுடியாது போன-தாக நழுவல் போக்கில் பதிலளித்திருந்தார்.

## உறுதிகளைத் தொலைத்தவர்களுக்கு பிரதிகள் வழங்கப்பட்டன

கிளிநொச்சி மாவட்டத்தின் தமது காணிகளின் உறுதிகளைத் தொலைத்தவர்களுக்கு காணி உறுதிப் பத்திரத்திற்கான பிரதிகள் வழங்கி வைக்கப்பட்டிருந்தது.

கடந்த செவ்வாய்க்கிழமை கிளிநொச்சி மாவட்ட செயலகத்தில் நடைபெற்ற இந்நிகழ்வில் கலந்துகொண்ட காணி அமைச்சர் ஜானக பண்டார தென்னக்கோன் அவர்களினால் இந்த உறுதிப்பத்திரங்களின் பிரதிகள் வழங்கி வைக்கப்பட்டது.

பூநகரி, கரைச்சி, கண்டாவளை ஆகிய பகுதிகளைச் சேர்ந்த 150 குடும்பங்களுக்கு இவ்வாறான உறுதியின் பிரதிகள் வழங்கப்பட்டுள்ளன. இவை கொழும்பு காணித் திணைக்கள ஆணையாளர் நாயகத்தின் உறுதிப்படுத்தலுடன் வழங்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

## சம்பளத்தினை குறைக்க அனுமதியளிக்க கூடாது

### ஜே.வி.பி சந்திரசேகரன்

பெருந்தோட்டத் தொழிலாளர்களின் சம்பளத்தினை குறைக்கும் முயற்சிக்கு அனுமதியளிக்க கூடாது என அகில இலங்கை தோட்டத் தொழிலாளர் ஒன்றியம் கோரிக்கை விடுத்துள்ளது.

பெருந்தோட்டத் தொழிலாளர்களும் தனியார் மற்றும் பொதுத் துறை ஊழியர்களுடன் இணைந்து போராட்டம் நடத்த வேண்டுமென குறித்த கட்சியின் சார்பில் முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் சந்திரசேகரன் கோரிக்கை விடுத்துள்ளார்.

அதேவேளை, மத்திய கிழக்கில் நிலவி வரும் அரசியல் குழப்ப நிலைமையினால் தேயிலை ஏற்றுமதியை பெரிதும் பாதிக்கப்பட்டுள்ளதாகத் தெரிவித்து தற்போதைய கூட்டு ஒப்பந்தத்தை ரத்து செய்வது குறித்து முதலாளி மார் சம்மேளனம் கவனம் செலுத்தி வருவதாகத் தெரிவிக்கப்படுகிறது. அதன்படி, அண்மையில் அதிகரிக்கப்பட்ட நாள் சம்பளத்தில் 100 ரூபாவினை தற்காலிகமாக குறைப்பது குறித்தும் கவனம் செலுத்தப்பட்டு வருவதாகவும் அதற்கு யாரும் இணக்கம் தெரிவிக்கக் கூடாது எனவும் குறித்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## மனித உரிமை கவுன்ஸில் இலங்கைக்கு எதிராக தீர்மானம்?

சுவிட்சர்லாந்தின் ஜெனீவா வில் நடைபெறவுள்ள மனித உரிமை கவுன்ஸில் கூட்டத்தில் இலங்கைக்கு எதிராக தீர்மானம் நிறைவேற்ற சில அரச சார்பற்ற நிறுவனங்கள் முயற்சி செய்து வருவதாக திவயின பத்திரிகை செய்தி வெளியிட்டுள்ளது. உள்நாடு மற்றும் வெளிநாடுகளைச் சேர்ந்த 46 அரச சார்பற்ற நிறுவனங்களும், 262 நபர்களும் இலங்கைக்கு எதிராக குற்றச்சாட்டுக்களை சுமத்தி வருவதாகக் குறிப்பிடப்படுகிறது. இந்த அரச சார்பற்ற நிறுவனங்களில் 95 வீதமானவை மேற்குலக நாடுகளைச் சேர்ந்தவை. இந்த நிறுவனங்களுக்காக குரல் கொடுக்கும் உள்நாட்டு முகவர்கள் பற்றியும் விசாரணைகளின் மூலம் தெரியவந்துள்ளது என அரசாங்கத் தகவல்கள் தெரிவிக்கின்றன. கடந்த ஜனாதிபதித் தேர்தலுக்கு முன்னதாக குறித்த அரச சார்பற்ற நிறுவனங்களில் ஒன்று 200 மில்லியன் ரூபா பணத்தைப் பெற்றுக் கொண்டுள்ளது.

## பேச்சுவார்த்தைகளின் இடைநடுவில் நிபந்தனைகளை விதிப்பது நியாயமானதா?

தேசிய இனப்பிரச்சினைக்கு தீர்வு காணும் நோக்கி லேயே தமிழ்த் தேசியக் கூட்டமைப்புடன் பேச்சுவார்த் தைகள் ஆரம்பிக்கப்பட்டதாக சிரேஷ்ட அமைச்சர் நிமால் சிறிபால டி சில்வா தெரிவித்துள்ளார். பேச்சுவார்த்தைகளின் இடைநடுவில் நிபந்தனை களை விதிப்பது எந்தளவிற்கு நியாயமானது? தீர்வுத் திட்டத்தை எட்டுவது தொடர்பில் அரசாங்கத்தின் சார்பிலான அர்ப்பணிப்புக் களில் மாற்றமில்லை. காணி மற்றும் காவல்துறை அதிகாரங்களை மாகாண சபைகளுக்கு வழங்குவது எந்தளவிற்கு பொருத்த மானது என்பது ஆராயப்பட வேண்டியது அவசியமானது. இந்தியாவில் மாநிலங் களுக்கு வழங்கப்பட்டுள்ள அதிகாரங்கள் தொடர்பில் சர்ச்சை ஏற்பட்டுள்ளது. குறிப்பாக கிழக்கில் தமிழ், சிங்கள மற்றும் முஸ்லிம் மக்கள் வாழ்ந்து வருவதாகவும் அனைவரினதும் உரிமைகளை உறுதிப்படுத்த வேண்டியது அரசாங்கத்தின் பொறுப்பாகும் எனவும் அவர் குறிப்பிட்டுள்ளார். பூரணமான அரசாட்சி ஒன்று உலகில் எந்தவொரு நாட்டிலும் கிடையாது, எல்லா நாட்டு ஆட்சிகளிலும் குறைபாடுகள் காணப்படு கின்றன. 100 வீதம் சிறந்த ஆட்சி எந்த நாட்டிலும் கிடையாது. தேசிய



இனப் பிரச்சினைக்கு தீர்வு காணும் நோக்கில் அமைக்கப்படவுள்ள நாடாளுமன்றத் தெரிவுக் குழுவில் அனைத்து கட்சிகளும் பங்கேற்கும் என எதிர்பார்ப்பதாகக் குறிப்பிட்டுள்ளார்.

## ஒப்பந்தம் கைச்சாத்து

திருகோணமலை சம்பூரில் அமைக்கப்படவுள்ள இலங்கையின் இரண்டாவது அனல் மின்சார மையம் தொடர்பான உடன்படிக்கை கைச்சாத்திடப்பட்டுள்ளது. இவ் உடன்படிக்கையில் இந்திய என்.டி.பி.சி. நிறுவனத்தின் தலைவர் அருப் ரோய் மற்றும் இலங்கை மின்சார சபையின் தலைவர் விமலதர்ம அபேவிக்கிரம ஆகியோர் கைச்சாத்திட்ட னர். 500 மில்லியன் டொலர் ஒதுக்கீட்டில் 2016 ஆம் ஆண்டு நிறைவுறும் நோக்கில் இந்த திட்டம் முன்னெடுக்கப்படவுள்ளது. இந்த அனல் மின்சார மையத்தின் உற்பத்திக்காக வருடம் ஒன்றுக்கு 1.4 தொன் நிலக்கரி பயன்படுத்தப்பட வுள்ளது. அதேவேளை குறித்த திட்டம் காரணமாக தமது பூர்வீக பிரதேசங் களை இழந்த மக்கள் உரிய தீர்வின்றி அகதி முகாம்களிலும் உறவினர் வீடுகளிலும் தங்கியிருப்பது குறிப்பிடத்தக்கது.

**தினமுரசு வாரமலர்**

த.பெ.இல:-1772, கொழும்பு.
த.பெ.இல:-167, யாழ்ப்பாணம்.
தொலைபேசி: -021 222 1811
தொலைநகல்(Fax):- 021 222 1811
ஈ-மெயில்(E-mail):- thinamurasu@live.com

# முரசம்

## இரண்டு வருடங்களில் துயரம் தொடர்கிறது

**அன்புள்ள உங்களுக்கு, வணக்கம்.**

இன்னும் ஒரு மாதத்தில் மழை காலம் தொடங்குகின்றது. வன்னியில் அகதி முகாம்களிலிருந்து சொந்த இடம் திரும்பியிருக்கும் பெரும்பாலான மக்கள் பெரும் அவலப்படப்போகின்றார்கள். சொந்தக்காணி இல்லாததாலும், இந்திய வீட்டுத்திட்டம் தாமதப்படுவதாலும், பலருக்குச் சொந்த வீட்டில் வாழும் கனவு தகர்ந்து போயுள்ளது. வீட்டுத்திட்டம் கிடைக்கப்போகின்றது என்று சொந்த இடம் வந்தவர்கள் இன்று அநாதரவாகி நிற்கின்றனர். சனல்-4, மனித உரிமை குற்றச்சாட்டு என்றெல்லாம் கூறுகின்றவர்கள் மக்களின் அவலங்களைப் பற்றி மூச்சுக்காட்டுவதாக இல்லை. இவர்கள் எல்லாம் அவலமும், உரிமை மீறல்களும் நடக்கப்போகின்றது என்ற போதும், நடந்துகொண்டிருந்த போதும் மௌனமாக இருந்து வேடிக்கை பார்த்தவர்கள்தான். தவறு நடக்கும் வரை காத்திருந்துவிட்டு, தவறு நடந்ததும் வந்து குற்றம் சுமத்தும் காவல்துறையினர் போல் செயற்பட்டிருக்கின்ற கூச்சநாச்சம் கொஞ்சமும் இல்லாத இவர்களால் எமக்கு நன்மை ஏதும் இல்லை என்ற ஆதங்கங்கள் மக்களிடம் உண்டு.

எல்லாப் பொழுதுகளிலும் தம்மையும் தமது அவலங்களையும் ஒரு கருவியாகவே உலக நாடுகளும், அரசியல் தலைமைகளும் கருதிச் செயற்படுகின்றனவே தவிர உருப்படியானதும் உதவிகரமானதுமாக எதுவும் இல்லை. குரல்வளை நெரிக்கப்பட்ட ஒரு ஊமைச் சமூகமாக வாழ வேண்டியதான புறச் சூழல் உருவாக்கப்படுகின்றது. துயரங்களைச் சுமந்துவாழும் மனோநிலையோடு தமிழ் மக்கள் வாழ்ந்து கொண்டிருக்கிறார்கள் என்பதை மறுக்க முடியவில்லை. யுத்தம் முடிந்து இரண்டு வருடங்கள் ஆகிவிட்டபோதும், பாதிப்புக்களைச் சுமந்த மக்களின் வாழ்வில் நல்ல மாற்றம் ஏற்படவில்லை. ஏற்படுத்தப்படவில்லை என்பது ஏமாற்றத்துக்குரிய விடயம்தான். பாரபட்சமும், கவலையீனமும் பொறுப்பற்ற அணுகுமுறையுமே இந்தப் பின்னடைவுக்குக் காரணம் என்று கருத இடமுண்டு.

மீண்டும் மறுமடலில் வந்து கலக்கும்வரை

என்றென்றும் அன்புடன்,
ஆசிரியர்.




# மர்ம மனிதர்கள் பொறுப்பு யார்?

இலங்கையில் மர்ம மனிதர்கள் அல்லது கிறீஸ் மனிதர்கள் விவகாரம் விஸ்பரூபம் எடுத்துள்ளது.

ஆரம்பத்தில் மலையகத்தில் பெண்களின உள்ளாடைகளை நீண்ட நாட்களாகத் திருடி வந்த ஒருவரை பொலிஸார் கைது செய்தனர். சுமார் 35 வயது மதிக்கத்தக்க அந்த நபர் மன நோயாளி என்று பின்னர் விடுவிக்கப்பட்டார்.

அந்தச் சம்பவத்தைத் கூறிவந்தனர். மக்கள் பிடித்துக்கொடுத்த சந்தேக நபர்களை, மன நோயாளிகள் என்றும், வழி தெரியாமல் வந்தவர்கள் என்றும் கூறி விடுவிக்கப்பட்டனர்.

இதனால் மக்கள் தமது பாதுகாப்பைத் தாமே கையில் எடுத்துக்கொண்டு செயற்படத் தொடங்கினர்.

ஆண்கள், பெண்கள் என்ற பேதம் பார்க்காமல், கையில் கிடைத்ததை தூக்கிக்கொண்டு, ஊருக்குள் நடமாடும் மர்ம மனிதர்களை துரத்திப் பிடிக்க முற்பட்டனர்.

இந்த முயற்சிகள் பின்னர் கிழக்கு மாகாணத்தில் இருந்ததைப் போல் யாழ்.மாவட்டத்திலும் கூர்மையடைந்தது.

மக்கள் துரத்திச் செல்லும் மர்ம நபர்கள் படைமுகாம்களுக்குள் ஓடுவதும், துரத்திச் சென்ற மக்கள் படையினரால் தாக்கப்படுவதுமான படையினர் பலாத்காரமாக வெளியில் இழுத்துச் சென்று தாக்கினர் என்றும் சுமார் 102 பேரை இவ்வாறு தாக்கியதோடு பொலிசாரிடம் ஒப்படைத்துள்ளனர்.

இவ்வாறு தாக்கப்பட்டவர்கள் மீது பயங்கரவாதச் சட்டத்தின் கீழ் நடவடிக்கை எடுக்கப்படும் என்றும் தகவல் தெரிவிக்கின்றன.


படையினரின் முகாம்களை மக்கள் தாக்குவதற்கு எத்தனித்ததாகவும், அத்தகையவர்கள் மீது கடுமையான நடவடிக்கை எடுக்குமாறு படையினருக்கு உத்தரவுகள் வழங்கப் பட்டுள்ளதாகவும் தெரியவருகின்றது.

பயங்கரவாதப் பிரச்சினைகளை இரத்தமும் சதையுமாக அனுபவித்த இலங்கை மக்களுக்கு, இருக்குமா?

அது எந்தளவு சாத்தியம்? இலங்கையில் போரின் அனர்த்தங்களை அனுபவித்த மக்கள் இவ்வாறு முயற்சிப்பார்களா? என்பதை யாரும் சிந்திப்பதாகத் தெரியவில்லை.


அரசியல் தலைமைகளும், சமூக அமைப்புக்களும், ஏன் சர்வதேச சமூகமும் வேடிக்கை பார்த்துக்கொண்டிருக்கும் சூழலில், மக்களுக்குத் தமது பாதுகாப்பு வழங்க முடியாத தரப்புக்கள் தமது வாழ்விடங்களில் நிலைகொண்டிருப்பது தம்மை அச்சுறுத்தவும்,

> **மக்கள் ஏன் படை முகாமை நோக்கி ஓடிவந்தார்கள், யாரைத் துரத்திக்கொண்டு ஓடிவந்தார்கள், இதன் மூலகாரணம் என்ன, அல்லது யார் என்பதைப் பற்றிய ஆழமான விசாரணைகள் இதுவரை ஏன் நடத்தப்படவில்லை. குற்றவாளிகள், சட்டத்தின் முன்னால் நிறுத்தப்படவில்லை. தாக்கப்பட்ட மக்களின் வாக்குமூலங்களும், குரல்களும் வலிமையற்று மக்கள் நாதியற்று நிற்கும் நிலைக்கு யார் காரணம் என்பதைச் சிந்திக்க யாரும் இல்லாத நிலையே காணப்படுகின்றது.**





நாவாந்துறை சம்பவத்தையடுத்து பாதிக்கப்பட்டவர்கள் வைத்தியசாலையில் அமர்ந்திருப்பதை முதலாவது படத்திலும், அவர்களை விடுவிப்பதற்காக நீதிமன்ற வளாகத்தில் மக்கள் காத்திருப்பதை இரண்டாவது படத்திலும் காணலாம்.



கோண்டாவிலில் மர்ம மனிதனைப் பிடித்து வைத்திருக்கும் மக்களும் இராணுவத்தினரும்.

தொடர்ந்து அடுத்து வந்த செய்திகள் கவனத்தைத் திசை திருப்புகின்ற விதமாக அமைந்திருந்தது.

"பெண்கள் குளிக்கும் போது, பெண்கள் உறங்கும்போது மறைந்திருந்து பார்க்கின்றார்கள், பெண்களை திடீரென்று கட்டிப்பிடிக்கின்றார்கள், மார்பங்களில் கீறிவிடுகின்றனர், மார்பகங்களை வெட்டுகின்றனர்.

இப்படிப் பல்வேறு கதைகளை காட்டுத்தீ போல் பரவியது. சில சம்பவங்கள் நடந்துள்ளன. மலையகத்திலிருந்து கிழக்கு மாகாணத்துக்கு இந்தச் சம்பவங்கள் நகர்ந்தன.

ஆரம்பத்தில் உள்ளூர் திருடர்கள் தமது கை வரிசையினைக் காட்டுகின்றார்கள் என்று அனைவரும் நம்பினார்கள். பின்னர் நிலைமை மோசமடைந்தது. அடை யாளம் தெரியாத நபர்கள் நடமாடுவது உறுதி செய்யப்பட்டது.

இவற்றை அரசும், பாதுகாப்புத் தரப்பும் வெறும் வதந்தி என்றே சம்பவங்களும் நடந்தன. கிழக்கில் அம்பாறை மட்டக்களப்பு, கிண்ணியா வடக்கில் யாழ்ப்பாணத்தில் நாவாந்துறை, குருநகர், கொக்குவில் வடமராட்சி ஆகிய பகுதிகளில் படையினர் மக்களைத் தாக்கியதான சம்பவங்கள் நடந்துள்ளன.

கிண்ணியாவில் மர்ம மனிதன் கடற்படை முகாமுக்குள் ஓடியதாகவும் அவனை துரத்திச் சென்ற மக்கள் முகாமுக்குள் நுழைந்தனர் என்றும் அப்படி நுழைந்தவர்களை கடற்படையினர் தாக்கியதாகவும் சிலரைக் கைது செய்ததாகவும் வந்த செய்திகள் போலவே,

யாழ்ப்பாணம் நாவாந்துறையில் மர்மமனிதனை துரத்திச் சென்ற மக்கள் அவன் இராணுவ முகாமுக்குள் ஓடியதாகவும் மக்களும் முகாமுக்குள் ஓடியுள்ளனர்.

அப்படிச் சென்ற மக்களை இராணுவம் மூர்க்கத்தனமாகத் தாக்கியதோடு, வீட்டில் இருந்த ஆண்களையும், படைமுகாம் ஒன்றைத் தாக்குவதற்கு எவ்வாறு சம்பவம் நடக்கும். தவறுதலாக உணர்ச்சிவசப்பட்ட மக்கள் படை முகாமுக்குள் நுழைவது எவ்வாறு நிகழும் என்பதை இந்த நாட்டு மக்கள் நன்கு அறிவார்கள்.

எனவே மக்கள் ஏன் படைமுகாமை நோக்கி ஓடிவந்தார்கள், யாரைத் துரத்திக்கொண்டு ஓடிவந்தார்கள், இதன் மூலகாரணம் என்ன, அல்லது யார் என்பதைப் பற்றிய ஆழமான விசாரணைகள் இதுவரை ஏன் நடத்தப்படவில்லை. குற்றவாளிகள், சட்டத்தின் முன்னால் நிறுத்தப்படவில்லை. தாக்கப்பட்ட மக்களின் வாக்குமூலங்களும், குரல்களும் வலிமையற்று மக்கள் நாதியற்று நிற்கும் நிலைக்கு யார் காரணம் என்பதைச் சிந்திக்க யாரும் இல்லாத நிலை-யே காணப்படுகின்றது.

சிலபேர் பொல்லு களுடன் சென்று ஆயுதங்களுடன் நிற்கும் படையினரைத் தாக்கவும், படைமுகாமை அழிக்கவும் முற்படக்கூடியதாக தாக்கவும்தானா என்று கேட்பது கேட்கின்றது.

மர்மமனிதன் விவகாரமானது யாரால் ஆரம்பிக்கப்பட்டதோ தெரியவில்லை. ஆனால் அவர்களின் நோக்கம் வெற்றிகரமாக வெல்லப்பட்டிருக்கின்றது.

அதாவது அரசுக்கும், படையினருக்கும் எதிராக மக்களைச் சந்தேகம் கொள்ள வைப்பதும், மக்கள் மத்தியில் பயம், பீதியை ஏற்படுத்த வும் செய்து முடிக்கப் பட்டிருக்கின்றது.

கிறீஸ் மனிதன், மர்ம மனிதன் பிரச்சினைக்கு முகம்கொடுத்தவர்கள் தமது சுட்டுவிரலை அரசு பக்கம் நீட்டுகின்றனர்.

வேறு தரப்புக்களை நோக்கி மக்கள் குற்றம் சுமத்தவில்லை. அப்படியா யின் மக்களிடத்தில் குற்றச்சாட்டையும், அவப் பெயரையும் ஏற்படுத்தும் காரியத்தை அரசுசெய்ய வேண்டிய அவசியம் இல்லை. அத்தகைய தேவை அரசுக்கு இருக்க எந்த நியாயமும் இல்லை. அது தனது தலையிலேயே மண் அள்ளிப்போடும் வேலையாகிவிடும்.

(தொடர்ச்சி 22ஆம் பக்கம்)

# போராட்டத்தின் இறுதி நேரத்தில்

# துரோகத்தனம் தாண்டவமாடிய தருணம்

**இசைப்பிரியா** கொலைக்கும் இவன்தான் சூழ்ச்சிசெய்து கொடுத்தான் என்பது ஒரு சிலருக்கே தெரிந்த உண்மை.

இவளை பழிவாங்க நினைத்த பாப்பா கும்பல் திட்டமிட்டு ஒரு நாடகம் ஆடினார்கள். ஆம் இலங்கை இராணுவத்துக்கு இப்படி ஒரு பெண்ணின் தலைமையில் நான்கு பெண்கள் முன்னரங்க நிலைகளில் மருத்துவ முதலுதவி செய்வதுமட்டுமல்ல புகைப்படத் தகவல்களையும் சேகரிக்கின்றனர்.என இலங்கை இராணுவத்திற்கு சொல்லப்பட்டது. அதற்கு இராணுவம் வகுத்த நாடகம் தங்களுடைய இருவரை வீதியில் காயப்பட்டு துடிப்பவர்கள் போல நடிக்கவைத்து இவர்களை அந்த பக்கம் வரவழைத்து சூழ்ச்சி செய்தனர். இவளுடன் சென்று தப்பிவந்த பாரதி என்ற போராளி எமக்கு சொன்ன தகவல் இது. ஆனால் இப்பொழுது அந்த பாரதியும் உயிருடன் இல்லை.

ஆனால் நாம் அப்பொழுது நினைத்தது இசைப்பிரியா சுடப்பட்டு அந்த இடத்திலேயே இறந்துவிட்டதாகத்தான்.

ஆனால் இப்போது அறியும் தகவல் நெஞ்சை உறையவைத்துள்ளது. இதைவிட இராணுவம் அமைத்துக் கொடுத்து மக்களை வந்து பாதுகாப்பாக இருக்கும்படி சொன்ன பாதுகாப்பு வலயங்களுக்குள் எல்லாம் மக்கள் சென்று தஞ்சமடைந்த பொழுது அங்கு போராளிகள் பலர் தமது குடும்பத்துடன் சேர்ந்திருந்தனர். அதைக்கூட இவர்கள் சொல்லிக்கொடுத்தனர். புலிகள் தலைவர்கள் சிலர் பாதுகாப்பு வலயத்துக்குள் வந்து மக்களுடன் தஞ்சம் அடைந்து இருக்கின்றார்கள் என்பதனை. இதை பயன்படுத்திய இராணுவம், விமானம் மூலமும் எறிகணை மூலமும் அந்த பாதுகாப்பு வலயங்களையும் துல்லியமாகத் தாக்கி எம் மக்களைக் கொன்றுகுவித்தது.

பாருங்கள் எப்படி எல்லாம் நாம் அழிக்கப்பட்டோம் என்று.. சரி இறுதிப் போரின் இறுதி நாட்களில் இந்தியாவுக்கும், நமது தலைமைக்கும் நடந்த பேச்சுக்களில் கலந்து கொண்ட பாதிரியார் காஷ்பார் போரை நிறுத்த புலிகளிடம் சில நிபந்தனைகளை முன்வைத்தார். எமக்கு 48 மணி நேரத்துக்குள் யுத்தநிறுத்தம் செய்யப்படும் என்று சொல்லப்பட்டது. அதுமட்டுமல்லாது தமிழ் மக்களுக்கு நிரந்தரமான தீர்வு வரும்பொழுது ஆயுதங்களை ஒப்படையுங்கள் என்றும் சொல்லப்பட்டது. இந்த நிபந்தனை விதியோடு ,

தலைவர் (பிரபாகரன்) சரணடைய வேண்டும், பொட்டு அம்மான் சரண டைய வேண்டும். இன்னும் முக்கிய புலிகள் உறுப்பினர்கள் தம்மிடம் சரணடைய வேண்டும் என்ற நிபந்தனையும் அப்போது விதிக்கப் பட்டது.

பின் உடனடியாக ஆயுதங்களை ஒப்படைக்கத் தயாராக இருங்கள் என்று வற்புறுத்தி னார்கள். இவர்களது இந்த நிபந்தனைகளை நம் தலைமைப் பீடம் ஏற்றுக்கொள்ளவில்லை. இதற்கு காரணம் அந்த நெடியவன், காஸ்ரோவினுடையதுமான ஐரோப்பிய நாட்டு உதவியுடன் கப்பல் அல்லது ஆகாய மூலமாக தலைவர்கள் காப்பாற்றப்படுவார்கள் என்ற அதீத நம்பிக்கைதான்.

ஆனால் இலங்கை அரசு எந்தவிதமான சமாதானத்துக்கும் முன்வரு வதாக சிதம்பரத்துடன் பேசி போர் நிறுத்த நடவடிக்கைக்கு இலங்கையை வற்புறுத்தியுள்ளதாகவும் இதனால் புலிகளின் அப்போதைய அனைத்துலகப் பொறுப்பாளர் கே.பி கொழும்பிலுள்ள இந்தியத் தூதுவரிடம் நாம் ஆயுதங்களை ஒப்படைக்கத் தயார் என்று எழுத்துமூலமாக உடனே கொடுக்கவேண்டும் என்றும் மற்றைய அனைத்தையும்



> இவளை பழிவாங்க நினைத்த பாப்பா கும்பல் திட்டமிட்டு ஒரு நாடகம் ஆடினார்கள். ஆம் இராணுவத்துக்கு இப்படி ஒரு பெண்ணின் தலைமையில் நான்கு பெண்கள் முன்னரங்க நிலைகளில் மருத்துவ முதலுதவி செய்வதுமட்டுமல்ல புகைப்படத் தகவல்களையும் சேகரிக்கின்றனர்.என சிங்களபடைக்கு சொல்லப்பட்டது. அதற்கு இராணுவம் வகுத்த நாடகம் தங்களுடைய இருவரை வீதிய-ில் காயப்பட்டு துடிப்பவர்கள் போல நடிக்கவைத்து இவர்களை அந்த பக்கம் வரவழைத்து சூழ்ச்சி செய்தனர். இவளுடன் சென்று தப்பிவந்த பாரதி என்ற போராளி எமக்குச் சொன்ன தகவல் இது. ஆனால் இப்பொழுது அந்த பாரதியும் உயிருடன் இல்லை.

இல்லை என்று எமக்கு நமது நாடுளுமன்ற உறுப்பினர் ஒருவர் சொன்னார். உண்மையில் கடைசிநாளில் தலைவர் பிரபாகரனும், அதிமுக்கிய தளபதிகள் சிலரும் களத்தை விட்டு அகன்றபின் காயமடைந்த போராளிகளை அப்புறப்படுத்திக் காப்பாற்றும் முடிவை எடுத்து அதற்காக புலிகளின் கடற்படைத் தளபதி சூசை மதுரை நபர் சு.வீயைத் தொடர்பு கொண்டார் கனிமொழியின் உதவியோடு இந்தியா மேற்கொள்ளும் என்றும் அந்த முடிவு எடுக்கப்பட்டுள்ளதாக பாதிரியார் எமக்கு அறிவித்தார். மக்களின் நலனுக்காகவும் போராளிகளின் பாதுகாப்புக்காகவும் நமது புலம்பெயர் தேச தலைவர்களின் நகர்வுகளின் நம்பகம் இல்லாமையாலும் நமது தலைமை உலகத்தின் இந்த நிபந்தனையை ஏற்றது.

**(தொடரும்...)**

**புலிகளின் மூத்த தளபதி வழங்கிய ஒப்புதல் வாக்குமூலம்**

**நன்றி : இணையம்**

---

# தமிழகத்தின் புதிய ஆட்சி விழுந்தது முதல் அடி

**தமிழக அரசியல்**



பிரபல பிரெஞ்ச் கார் தயாரிப்பு நிறுவனம் தமிழகத்தின் ஸ்ரீபெரும்புதூருக்கு அருகிலுள்ள வல்லம் வடகால் என்ற இடத்தில் அமைக்க திட்டமிட்டிருந்த கார் தயாரிப்பு தொழிற்சாலையை குஜராத் மாநிலத்துக்கு கொண்டு சென்றுள்ளது. வெளிநாட்டு முதலீடு மற்றும் தொழில் வாய்ப்பு விஷயத்தில் புதிய தமிழக அரசின் முதலாவது இழப்பாக இந்தச் சம்பவம் அமைந்துவிட்டது.

ஸ்ரீபெரும்புதூருக்கு அருகே கார் தொழிற்சாலை அமைப்பதற்கு தேவையான நிலத்தை வழங்குவதில் சில சிக்கல்களை எதிர்நோக்கியது தமிழக அரசு. உரிய நேரத்தில் அப்பகுதியில் தேவையான நிலத்தைப் பெற்றுக் கொடுக்க தமிழக அரசால் முடியவில்லை. அதையடுத்து, தமிழகத்தின் வேறு ஒரு பகுதியில் பொருத்தமான நிலத்தை வழங்குவதாக பிரெஞ்ச் நிறுவனத்தை தமிழக அரசால் கன்வின்ஸ் பண்ணவும் முடியவில்லை.

இதனால் ஏற்பட்ட காலதாமதம் காரணமாக இந்தத் திட்டத்தை தட்டிச் சென்றுள்ளது குஜராத் அரசு. பிரபல பிரெஞ்ச் கார் தயாரிப்பு நிறுவன மான Peugeot Citroen (உச்சரிப்பு பேர்ஜோ சித்ரோ) இந்தியாவில் தமது தொழிற்சாலை ஒன்றை அமைப்பதற்கு மிகவும் பொருத்தமான இடமாகத் தேர்ந்தெடுத்ததே தமிழகத்தைத் தான்.

ஜூன் 29ஆம் திகதி பேச்சுவார்த்தையில் தமிழக முதல்வர் தமிழகத்தில் தொழிற்சாலை அமைக்க ஸ்ரீபெரும்புதூர் வரை அவர்களது ஆய்வுக் குழு வந்து பார்வையிட்டுச் சென்றது. அதையடுத்து ஜூன் 29ஆம் திகதி முதல்வர் ஜெயலலிதாவை கார் தயாரிப்பு நிறுவனத்தின் குழுவி னர் சந்தித்துப் பேசியிருந்தனர்.

இந்தத் திட்டத்துக்கு தமிழக அரசு முழுமையான ஒத்துழைப்பு வழங்கும் என்று முதல்வரால் கூறப்பட்டிருந்தது. தொழிற்சாலை அமைப்பதற்கு 450 முதல் 600 ஏக்கர் நிலத்தை வழங்க தமிழக அரசு சம்மதித்திருந்தது. இவ்வளவும் நடந்த நிலையில் இந்தத் திட்டம் தமிழகத்துக்கு வரப்போகின்றது என்ற நிலைமை இருந்தது.

தமிழகத்தில் இந்தத் தொழிற்சாலை இயங்கத் தொடங்கினால் கார் உதிரிப் பாகங்களுக்கான dye தயாரிப்பு பிளான்ட் டிசைனுக்கான R&D லேப், body-building shop ஆகிய மூன்றிலும் முதல் கட்டமாக 5500 பேருக்கு வேலைகள் கிடைக்கும். அதைத் தவிர மறைமுகமாக 4,000 பேருக்கு வேலைகள் கிடைக்கும் என்பது தமிழகத்துக்கு சாதகமான அம்சங்களாக இருந்தன.

ஆனால் உரிய நேரத்தில் நிலத்தைக் கொடுக்க முடியாமல் திணறியது தமிழக அரசு.

அப்போதுகூட பிரெஞ்ச் நிறுவனம் தமிழகத்திலேயே தமது தொழிற்சாலையை அமைக்க விரும்பியிருந்தது. பாரிஸ் பிரான்ஸிலுள்ள பேர்ஜோ சித்ரோ நிறுவன ஊடக தொடர்பு அதிகாரி Cécile Damideit என்பவரை தொடர்பு கொண்டபோது "எமது முதன்மை தெரிவு தமிழகம்தான். ஆனால் குஜராத் அரசுடனும் பேச்சுக்கள் நடைபெறுகின்றன. தமிழகத்தில்

**ரிஷி**

தொழிற்சாலை அமைக்க முடியாத நிலை ஏற்பட்டால் வெளி மாநிலம் ஒன்றுக்கு செல்லும் திட்டம் நிச்சயம் எமது கார்ட்களில் உள்ளது" என்றார்.

இப்படியிருந்த நிலையில் தமிழக அரசு வேகமாகச் செயற்படவில்லை. பிரெஞ்ச் நிறுவனம் தமிழகத்துக்கு "நன்றி. வணக்கம்" கூறிவிட்டு குஜராத் சென்றுவிட்டது.

செப்டெம்பர் 1ஆம் திகதி வெற்றிக் களிப்பில் குஜராத் முதல்வர் பிரெஞ்ச் நிறுவனம் குஜராத் அரசுடன் இதற்கான ஒப்பந்தத்தில் வியாழக்கிழமை (1ஆம் தேதி) கையொப்பமிட்டது.


(22 ஆம் பக்கம் தொடர்ச்சி...)

Welcome லேடீஸ் ஸ்பெஷல்

பெண்கள் பக்கம்...







ஜீன்ஸுக்கான 'ரொப்' டிசைன்ஸ்



**உங்கள்** குழந்தை தினமும் ஓய்வெடுத்துக் கொள்வது என்பது மிக அவசியம். எதையாவது படித்தல், ஓய்வு எடுத்தல் அல்லது தொலைக்காட்சியை ஒரு வரையரைக்குள் பார்க்கலாம்.

பல தொலைக்காட்சிகள் குழந்தைகளுக்கான நல்லனவற்றை கொடுப்பதில்லை. குழந்தைகள் ஒருநாளைக்கு நான்கு மணி நேரம் தொலைக்காட்சி பார்க்கின்றனர். குழந்தைகளின் மனவளர்ச்சி தொலைக்காட்சியை அதிக நேரம் பார்ப்பதால் குறையும்.

# குழந்தைகள் தொலைக்காட்சி பார்ப்பது நல்லதா?

துணைக்கோள் தொலைக்காட்சி . வழிகளும் குழந்தைகளை வீட்டில் சிறை வைத்து விடுகின்றன. அவர்கள் மாலையில் தொலைக்காட்சியைப் பார்க்கத் தொடங்கினால் இரவு வெகு-நேரம் வரை கண்விழித்து தொடர்ந்து தொலைக்காட்சியைப் பார்த்து, பின்னர் தூங்கச் செல்கிறார்கள். அவர்கள் வெளியே சென்று விளையாடுவதுமில்லை. இதற்கு பதில் வீட்டில் உட்கார்ந்து வீடி-யோ விளையாட்டு விளையாடுகிறார்கள்.

சில குழந்தைகள் தொலைக்காட்சி பார்ப்பதையே பைத்தியமாகச் செய்வார்கள். மேலும் குறைந்த நேரம் பார்க்கும் குழந்தைகளின் ஞாபக சக்தி நிறைவாகவும், முன்சொன்ன குழந்தைகளுக்கு குறைந்தும் போய்விடும்.


குழந்தைகள் நீண்ட நேரம் தொலைக்காட்சி பார்ப்பதால் தங்கள் பள்ளிப் படிப்பைப் படிக்க நேரமின்றி விட்டு விடுகின்றனர். அவர்கள் வெளியே சென்று விளையாடுவதிலும் கவனம் செலுத்துவதில்லை. குழந்தைகள் கற்பனை சக்தி ஏதுமின்றி, மந்தமான மூளையுடனே வளர்வார்கள். மேலும் தொலைக்காட்சி பார்ப்பது குழந்தைகளின் ஒருமுகப்படுத்தும் திறனை குறைக்கிறது. அவர்கள் வெகு வாகவே களைப்படைகிறார்கள். மற்றும் அவர்களின் மனங்கள் நல்ல பயன்படும் வழியில் பணி செய்வதில்லை.

தொலைக்காட்சிகள் யாவும் கேளிக்கைக்காகவே என்பதை மறந்துவிடக் கூடாது. தங்கள் குழந்தைகள் இக்காட்சிகளை உண்மையென நம்பிவிடக்கூடாது. தொலைக்காட்சியில் வரும் திரை யுலக பிரபலங்களின் தனிப்பழக்கம் ஆகியவற்றை போலச் செய்து பழகுவார்கள். இவை யாவும் இவர்களின் உடல், மன, வளர்ச்சிக்கான செயல்களை மட்டந் தட்டிவிடும்.

எனவே பெற்றோர்கள் குழந்தைகளைக் கட்டுப்படுத்த வேண்டும். தொலைக்காட்சி பார்ப்பது பள்ளிப் படிப்பை எவ்வளவு பாதிக்கிறது என்றும் கண்களுக்கு எவ்வாறு கேடு விளைவிக்கிறது என்பதையும் அவர்கள் புரிந்துகொள்ளுமாறு விளக்க வேண்டும்.

குழந்தைகளின் ஆளுமை எல்லா துறைகளிலும் சிறப்பாக வளர்க்கப்பட வேண்டும். உங்கள் குழந்தைகள் புத்தகங்களைப் படிக்கட்டும். தொலைக்காட்சியை விட புத்தகங்களைப் படிப்பது என்பது மிகச் சிறப்பான செயலா கும். குறிப்பாக கற்பனையான கேலியான கதைகள் யாவும் குழந்தையின் மனதில் நீங்கா இடம்பெறும். தேவதைக் கதை கள் அவர்களின் கற்பனா சக்தியை மேம்படுத்தும். குழந்தைகள் தங்கள் மனங்கள் மற்றும் முறைகளுக்கு ஏற்ற பயிற்சிகளைப் பெறும். குழந்தைகள் பின்னர் செயலாக்க சிந்தனையுடையவர்களாக மாறுவார்கள்.

# காய்கறிகள் வாங்கும்போது கவனியுங்கள்...!



*முருங்கைக்காய் மேலிருந்து கீழ்வரை ஒரே சீராக இருக்க வேண்டும்.

*அவரையில் விதைகள் புடைத்து வெளியே தெரிந்தால், அது முற்றல்.

*வெண்டிக்காய் நுனிப்பகுதி ஒடித்தால் பட்டென்று ஒடிய வேண்டும்.

*கீரை மஞ்சள் பூத்திருந்தால் அருகில்கூட செல்லாதீர்கள். அரைக்கீரை, முளைக்கீரை போன்றவற்றில் தண்டுகள் பெருத்திருந்தால் சுவையாக இருக்காது.

*வெங்காயம், வாழைக்காய், மாங்காய் போன்றவற்றை வாங்கும்போது விரல்களால் அழுத்திப் பார்க்கவும். அழுந்தினால் வாங்கக் கூடாது. முள்ளங்கி, சுரைக்காய், பீர்க்கங்காய் போன்றவை அழுந்தினால் நல்லது என்று பொருள்.

*சிவப்பு நிறத்தில் இருந்தால் மட்டும் அது நல்ல கருணைக்கிழங்கு என்று அர்த்தம். சீக்கிரமாக வெந்து சுவையாகவும் இருக்கும்.

* நன்றாகப் பழுத்த தக்காளிகளைவிட, பாதி பழுத்த கெட்டியான தக்காளிகளே சுவையானவை.

# பிரகாசமான முகம் பெற...



**கரட் மாஸ்க்:**

மூன்று பெரிய கரட்டுகளை எடுத்துக் கொண்டு நன்கு வேக வைக்கவும். பின் மிக்ஸியில் அடித்துக் கொள்ளவும். அதனுடன் ஐந்து தேக்கரண்டி தேன் கலந்து பசையாக்கிக் ஆக்கவும். பின்பு அதை முகத்தில் நன்றாகத் தேய்த்து 10 நிமிடங்கள் வைத்திருந்த பின் குளிர்ந்த நீரில் கழுவினால் பட்டுப் போல பளபளக்கும் உங்கள் முகம்.

**தேன் மாஸ்க்:**

கரட் சேர்த்துக் கொள்ள விரும்பாதவர்கள் தேனை மட்டும் கொண்டும் மாஸ்க் தயாரிக்கலாம்.

சுடுதண்ணீரில் ஒரு துணியை நனைத்து முகத்தை நன்கு கழுவவும். இதன் மூலம் முகத்திலுள்ள அழுக்குகள் அகற்றப்பட்டு துளைகள் திறக்கப்படும். தேனை முகத்தில் தேய்த்து 15 முதல் 30 நிமிடங்கள் வைத்திருக்கவும். பின் சற்று சூடான தண்ணீரில் கழுவினால் சருமம் பளபளக்கும். அதைத் தொடர்ந்து குளிர்ந்த நீரில் முகத்தைக் கழுவிவிடவும்.

**தயிர் ஒரேஞ்சு மாஸ்க்:**

ஒரேஞ்சுப் பழத்தின் கால் பகுதியை சாறாக்கிக் கொண்டு அதனுடன் ஒரு தேக்கரண்டி தயிரை சேர்க்கவும். விரல்களால் நன்கு கலக்கவும். பசை போல் ஆனதும் முகத்தில் தேய்த்துக் கொள்ளவும். 5 நிமிடங்கள் கழித்து முகத்தைக் கழுவுங்கள். முகத்தில் சூடு குறைந்து குளிர்மையை உணர்வீர்கள். இவற்றைக் கடைப்பிடித்தால் முகத்தில் தோல் சுருக்கம் இல்லாமல் இளமையாக இருப்பீர்கள்.

# மயக்கம் வந்தால் ஏற்படும் அறிகுறிகள்!

**அறிகுறிகள்**

திடீரென்று உணர்ச்சியற்றுப்போவார். தலை கிறுகிறுக்கும், தடுமாற்றம் ஏற்படும். முகம் வெளுத்துப் போகும், தோல் குளிர்ச்சியடைந்து, பிசுபிசுப்பாகும், நாடித் துடிப்பு பலவீன மாகவும், மெதுவாகவும் இருக்கும், மூச்சு லேசாக இருக்கும்.

**உடனடிச் சிகிச்சை முறைகள்:**


ஒருவருக்கு மயக்கம் ஏற்படுவதைப் போலத் தோன்றினால் சீக்கிரமாய் தலையைக் கீழே குனிய வைக்க வேண்டும். குறிப்பிட்ட நபர் உட்கார்ந்திருந்தால் முழங்கால்களுக்கு இடையே தலையைத் தாழ்த்தி வைக்க வேண்டும். அல்லது தாழ்த்திப் படுக்க வைக்க வேண்டும்.

போதுமான தூய காற்றுப் படும்படி செய்ய வேண்டும்.

கழுத்திலும், இடுப்பிலும், மார்பிலும் சுற்றியுள்ள ஆடைகளைத் தளர்த்திவிட வேண்டும்.

மயக்கம் அடைந்தவர் மறுபடி தன்னிலைக்கு வரும்போது அவரை நிமிர்த்தி தண்ணீர் அல்லது ஏதாவது ஒரு பானத்தை சிறிது சிறிதாகக் கொடுக்க வேண்டும்.

# அழகுக்காக அதிக செலவிடும் இங்கிலாந்து பெண்கள்



இங்கிலாந்து பெண்கள் தங்கள் வாழ்நாளில் அழகு சாதனப் பொருட்களுக்கு மட்டும் ரூ. 70 லட்சம் செலவிடுகின்றனர் என்று ஆய்வறிக்கை ஒன்று தெரிவித்துள்ளது.

இங்கிலாந்து பெண்கள் தங்கள் வாழ்நாளில் அழகு சாதனப் பொருட்களுக்காக எவ்வளவு செலவிடுகின்றனர் என்று ஒரு ஆய்வு நடத்தப்பட்டது. இதில் சுமார் 2 ஆயிரத்து 200 பெண்களிடம் கேள்விகள் கேட்கப்பட்டது.

இங்கிலாந்து பெண்கள் வாரத்திற்கு ரூ. 2 ஆயிரத்து 889 க்கு அழகு சாதனப் பொருட்கள் வாங்குகின்றனர். இந்த கணக்கெடுப்பில் கலந்து கொண்டவர்களில் 57 சதவீதம் பேர் மேக்-அப் இல்லாமல் வெளியே வருவதை விரும்பவில்லை.

தங்களிடம் உள்ள அழகுசாதனப் பொருட்களை மாற்ற ரூ. 40 ஆயிரத்தில் இருந்து ரூ. 50 ஆயிரம் வரை செலவு செய்கின்றனர். சராசரி இங்கிலாந்து பெண்ணிடம் 54 வகையான அழகு சாதனப் பொருட்கள் உள்ளது. இதன் மதிப்பு ரூ. 40 ஆயிரம். இந்த பொருட்கள் 12க்கும் மேற்பட்ட நாடுகளில் தயாரிக்கப்பட்டவை.

ஒவ்வொரு பெண்ணும் தனது கைப்பையில் வைத்திருக்கும் அழகு சாதனப் பொருட்களின் விலை மட்டுமே ரூ. 10 ஆயிரம். இங்கிலாந்து பெண்களில் 56 சதவீதம் பேர் அழகு சாதனப் பொருட்கள் எவ்வளவு விலை யானாலும் வாங்கத் தயங்குவதில்லை.

## வாரம் ஒரு அதிர்ஷ்டசாலி

**பரிசுப் போட்டி இல :- 285**

கேள்வி : எந்த நாட்டுப்பெண்கள் தம்மை அழகுபடுத்திக் கூடுதலான பணத்தைச் செலவிடுகின்றனர்?

பரிசு 1000/- ரூபா.

விடையைப் பக்கத்திலுள்ள கூப்பனில் எழுதி, தபாலட்டையில் அனுப்பி வைக்கவும்.

அனுப்பி வைக்க வேண்டிய முகவரி:

**வாரம் ஒரு அதிர்ஷ்டசாலி, பரிசுப் போட்டி இல : 285**

**தினமுரசு வாரமலர், த.பெ.இல : 1772, கொழும்பு, த.பெ.இல - 167, யாழ்ப்பாணம்.**

அனுப்ப வேண்டிய கடைசித் திகதி:- **18.09.2011**

சரியான விடையை எழுதியவர்களில் ஒருவர் குலுக்கல் முறையில் தெரிவு செய்யப்படுவார்.

**பரிசுப் போட்டி இல:- 283 இற்கான விடை:- ஹரி எஸ்.ட்ரூமன்.**

**பரிசு பெறும் அதிர்ஷ்டசாலி:-** ர.ஜெயசுதா, நீர்வேலி வடக்கு, நீர்வேலி.

285

பெயர் : ......................................

முகவரி : ......................................

......................................

......................................

தே.அ. அட்டை இல : ......................................

விடை : ......................................

கையொப்பம் : ......................................

# முக்கோணப் போட்டி
# தலைநகரில் தேர்தல்

**இலங்கையில்** மூன்றாவது கட்டமாக உள்ளூராட்சி சபைத் தேர்தல்கள் எதிர்வரும் ஒக்டோபரில் நடைபெறவுள்ளன.

முதலாம் கட்டத்தேர்தல், இரண்டாம் கட்டத்தேர்தல் என்ற இரண்டுமே அரசாங்கத்துக்கும் எதிர்க்கட்சிக்கும் இடையில் பலப்பரீட்சையாக அமைந்திருந்தன. எனினும் தமிழ்ப்பிரதேசங்களில் எதிர்க்கட்சிகளும் ஏனைய பிரதேசங்களில் அரசாங்க கட்சியும் இந்த தேர்தல்களில் பெரும்பான்மையான சபைகளில் வெற்றிப்பெற்றன.

தற்போது மூன்றாம் கட்ட உள்ளூராட்சி தேர்தல் நடைபெறப்போகிறது. இதில் கொழும்பு மாநகரசபை, தெஹிவளை - கல்கிசை நகரசபை மற்றும் நுவரெலிய மாநகரசபை என்பன முக்கிய போட்டிக்களங்களாக கருதப்படுகின்றன.

தெஹிவளை - கல்கிசை மற்றும் நுவரெலிய மாநகரசபை என்பன மூன்று இன மக்களின் வாக்குகள், வெற்றிதோல்வியை தீர்மானிக்கும் செல்வாக்கை கொண்டிருக்கின்றன.

எனினும் கொழும்பு மாநகர சபையின் வெற்றிதோல்வி தனித்து தமிழ்பேசும் மக்களின் வாக்குகளிலேயே தங்கியுள்ளது என்று கூறலாம். கடந்த காலங்களிலும் கொழும்பு மாநகரசபையின் அதிகாரம் தமிழர்களால் தீர்மானிக்கப்பட்ட ஒன்றாகவே இருந்து வந்தமை யாவரும் அறிந்த விடயம்.

அதாவது ஐக்கிய தேசியக்கட்சி, கொழும்பை பொறுத்தவரையில் தமிழ் - முஸ்லிம் மக்களின் ஆதரவை பெற்ற கட்சி என்றவகையில் அந்தக் கட்சி கொழும்பு மாநகர சபையின் அதிகாரத்தை கொண்டிருந்தது.

இறுதி மாநகரசபை தேர்தலின் போதும் ஐக்கிய தேசியக் கட்சியின் வேட்புமனு நிராகரிக்கப்பட்ட நிலையில் அந்தக்கட்சிக்கு ஆதரவாக சுயேட்சையாக போட்டியிட்ட தமிழர் சார்ந்த கட்சி கொழும்பு மாநகரசபையின் ஆட்சியை கைப்பற்றியது. எனவே இங்கு தமிழ்பேசும் மக்களின் வாக்குபலம் நிரூபிக்கப்பட்டுள்ளமையை காணக்கூடியதாக இருக்கிறது.

கொழும்பை பொறுத்தவரை வட மற்றும் மத்திய கொழும்பில் தமிழர்கள் பெரும்பான்மையினராகவும் முஸ்லிம்கள் இரண்டாவது பெரும்பான்மையினராகவும் வாழ்கின்றனர்.

மூன்றாவது இடத்திலேயே சிங்களவர்கள் உள்ளனர். ஏனைய கொழும்பு தேர்தல் தொகுதிகளில் தமிழர்கள் இரண்டாம் இடத்தில் இடம்பெறுகிறது.

> **தமிழர்களின் வாக்குகளை கவருவதற்காக ஆளும் கட்சி, தமிழ் மக்கள் மத்தியில் அதுவும் வர்த்தகர்கள் மத்தியில் ஓரளவு செல்வாக்கை கொண்டுள்ள முன்னாள் அமைச்சர் மிலிந்த மொறகொடவை பிரதான வேட்பாளராக நிறுத்தியுள்ளது. அதனை தவிர கொழும்பு மாநகர சபையின் முன்னாள் முதல்வராக இருந்த கணேசலிங்கத்தின் மனைவியை தமிழ் மக்களின் வாக்குகளை கவருவதற்காக சேர்த்துள்ளது. அத்துடன் முஸ்லிம் பிரதிநிதி ஒருவரையும் களத்தில் இறக்கியுள்ளது. மறுபுறத்தில் ஐக்கிய தேசியக் கட்சி முன்னரைப்போலவே விவேகமற்ற வகையில் தமது முதன்மை வேட்பாளர் மற்றும் ஏனைய வேட்பாளர்களின் தெரிவை மேற்கொண்டுள்ளது.**



ஆளும் ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணி, ஐக்கிய தேசியக் கட்சி என்ற இரண்டு தேசியக் கட்சிகளுக்கு மத்தியில் மனோ கணேசனின் ஜனநாயக மக்கள் முன்னணியும் போட்டியிடுகிறது.

இதில் தமிழர்களின் வாக்குகளை கவருவதற்காக ஆளும் கட்சி, தமிழ் மக்கள் மத்தியில் அதுவும் வர்த்தகர்கள் மத்தியில் ஓரளவு செல்வாக்கை கொண்டுள்ள முன்னாள் அமைச்சர் மிலிந்த மொறகொடவை பிரதான வேட்பாளராக நிறுத்தியுள்ளது.

அதனை தவிர கொழும்பு மாநகரசபையின் முன்னாள் முதல்வராக இருந்த கணேசலிங்கத்தின் மனைவியை தமிழ் மக்களின் வாக்குகளை கவருவதற்காக சேர்த்துள்ளது. அத்துடன் முஸ்லிம் பிரதிநிதி ஒருவரையும் களத்தில் இறக்கியுள்ளது.

மறுபுறத்தில் ஐக்கிய தேசி யக் கட்சி முன்னரைப் போலவே விவேகமற்ற வகையில் தமது முதன்மை வேட்பாளர் மற்றும் ஏனைய வேட்பாளர்களின் தெரிவை மேற்கொண்டுள்ளது.

குறிப்பாக முஸம்மில் முஸ்லிம் மக்கள் மத்தியில் செல்வாக்கை பெற்றிருந்தாலும் தமிழர்கள் மத்தியில் எந்தளவுக்கு செல்வாக்கை ... கட்சியினால் கொழும்பு மாநகரசபையை கைப்பற்றமுடியும்

இதற்கு காரணம். மனோ கணேசன், போரின் போதும் அதற்கு பின்னரும் தமிழர்கள் மத்தியில் ஆற்றிய சேவை, வடக்கு - கிழக்கு தமிழர்கள் மத்தியில் அவருக்கு உள்ள மதிப்பு. அதற்கு மேலாக தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு மனோ கணேசனுக்கு கொழும்பு மாநகரசபைத் தேர்தலில் ஆதரவளிக்கின்றமை என்பவற்றை காட்டமுடியும்.

மறுபுறத்தில் போரின்போதும் அதற்கு பின்னரும் அரசாங்கம் இன்னும் தமிழ் மக்களுக்கு நன்மையான விடயங்களை தொட்டுக்கூட பார்க்காமை அதன் செல்வாக்கின்மைக்கான காரணமாகும்.

சமூக சேவையில் ஈடுபட்டு வருகிறார் என்பதற்காக முன்னாள் முதல்வர் கணேசலிங்கத்தின் மனைவியை களத்தில் இறக்கியமை எந்தளவுக்கு தமிழ் மக்கள் மத்தியில் நம்பிக்கையை ஏற்படுத்தும் என்பதில் சந்தேகம் உள்ளது.

**அமலன்**

அதேநேரம் கொழும்பை அழகுபடுத்தும் திட்டத்தின் மூலம் தாம் பாதிக்கப்படுவதாகவே பரம்பரையாக கொழும்பில் வாழும் தமிழ் - முஸ்லிம் மக்கள் உணருகின்றனர்.

எனவே அவர்களை அரசாங்கத்தின் வழிக்கு கொண்டு வரமுடியுமா? என்பது சந்தேகமே. எனவே கொழும்பு மாநகரசபை தேர்தலில் மனோ கணேசனின் கட்சியின் செல்வாக்கை அரசாங்கத்தினால் உடைக்கமுடியாது என்றபோதும் ஐக்கிய தேசியக் கட்சிக்கு வாக்குகள் செல்வதை தடுக்ககூடியதாக இருக்கும்.

இதற்கு அரசாங்கத்தின் போர் வெற்றி என்ற பெருமை சிங்களவர்கள் மத்தியில் இருந்து இன்னும் அகலாமை, மற்றும் ஐக்கிய தேசியக் கட்சிக்குள் உள்ள பிளவு என்பனவும் காரணமாக அமையலாம்

எனவே எதிர்பார்க்கப்படும் பிரசாரங்கள் இந்த அனுமானங்களை மாற்றுமா என்பதை பொறுத்திருந்தே பார்க்கவேண்டும்.

உள்ளனர்.


எனவே மொத்தத்தில் கொழும்பு மாநகரசபைப் பிரதேசத்தில் தமிழர்களே பெரும்பான்மையினராக வாழ்கின்றனர். எனவே அவர்களின் வாக்குகள் இந்த முறை மாநகரசபை தேர்தலில் வெற்றிதோல்வியை தீர்மானிக்கும் என்பதில் ஐயமில்லை. இந்தநிலையில் கொழும்பு மாநகரசபைக்கு இந்தத் தடவை மும்முனைப்போட்டி

அவருக்கு வாக்களிப்பார்களா? என்பது சந்தேகமே.

மறுபுறத்தில் ஆளும்கட்சியுடம் மஹ்ரூப் போன்றவர்களை களத்தில் இறக்கியுள்ளமையால் முஸ்லிம் வாக்குகள் பிரிந்துபோகும் நிலை உள்ளது.

ஆனால் தனித்து நின்று பார்க்கும் போது தமிழர்கள் சிந்தித்து செயற்பட்டால் மனோ கணேசனின்

# தூக்குக் கயிற்றை எதிர்நோக்கும் அராஜகத்தின் எச்சங்கள்



**உலகத்திலேயே** மிகப் பெரிய கொடுமையாக மரணத்தையும் தாண்டி அதன் நிகழ்வு நாளை முன்கூட்டியே அறிந்து வைத்திருப் பதைத்தான் சொல்லலாம். இன்றைய நாளில் நம்மவர் மத்தியில் தமது மரணத்தின் திகதி நிர்ணயிக்கப்பட்ட மனிதர்களாக ராஜீவ் காந்தி கொலையுடன் தொடர்புபட்ட பேரறிவாளன், சாந்தன் மற்றும் முருகன் ஆகியோரே உள்ளனர். முன்னாள் இந்திய பிரதமர் ராஜீவ் காந்தி கடந்த 1991ஆம் ஆண்டு மே மாதம் 21 ஆம் திகதி தேர்தல் பிரசாரத்திற்காக தமிழகம் சென்றிருந்த வேளை சிறீபெரும்புதூர் பொதுக்கூட்ட மேடை அருகே வைத்து புலிகளின் பெண் மனித வெடிகுண்டுதாரியால் படுகொலை செய்யப்பட்டார்.

உலகையே உலுக்கிய இந்த படுகொலை தொடர்பாக முருகன், நளினி, சாந்தன் மற்றும் பேரறிவாளன் உட்பட 26 பேர் கைது செய்யப்பட்டதும் இந்த வழக்கை விசாரணை செய்த சென்னை, பூந்தமல்லி தடா நீதிமன்றம் 26 பேருக்கும் தூக்கு தண்டனை விதித்ததும் அதை எதிர்த்து டெல்லி உச்ச நீதிமன்றத்தில் செய்யப்பட்ட மேல்முறையீட்டில் முருகன், நளினி, சாந்தன் மற்றும் பேரறிவாளன் ஆகிய 4 பேருக்கு தூக்கு தண்டனை உறுதி செய்யப்பட்டு, 3 பேருக்கு தூக்குதண்டனை ஆயுள்தண்டனையாக குறைக்கப் பட்டு மற்ற 19 பேரும் விடுதலை செய்யப்பட்டதும் நாடறிந்த வரலாறு. தூக்குத்தண்டனை உறுதி செய்யப்பட்டவர்களில் முருகனும், சாந்தனும் இலங்கை தமிழர்கள். நளினியும் மற்றும் பேரறிவாளனும் தமிழ்நாட்டைச் சேர்ந்தவர்கள். புலிகள் அமைப்பைச் சேர்ந்த முருகன் சென்னையில் தங்கியிருந்த போது நளினியை திருமணம் செய்து கொண்டார். கொல்லப்பட்ட ராஜீவ் காந்தியின் மனைவியார் சோனியா காந்தியின் சிபார்சின் அடிப்படையிலும் ஒரு தாயார் என்பதனாலும் சென்னை உயர் நீதிமன்றம் நளினிக்கு மட்டும் தூக்கு தண்டனையை, ஆயுள் தண்டனையாக குறைத்திருந்தது.

இந்த நிலையில் கடந்த 11வருடமாக ஜனாதிபதி அலுவலகத்தில் கிடப்பில் போடப்பட்டிருந்த தூக்குத் தண்டனை கைதிகள் 3 பேரின் கருணை மனுக்களும் தற்போது தூசுதட்டி எடுக்கப்பட்டு மூவருக்கும் தூக்குத்தண்டனைக்கு (மரணத்திற்கு) நாள் குறிக்கப்பட்டு பின்னர் ஒத்திவைக்கப்பட்டுள்ளது.

20 ஆண்டுகளுக்கும் மேற்பட்ட காலத்தை சிறையில் கழித்த இந்த மூவரையும் தூக்கிலிடக் கூடாது என்று மனித உரிமை அமைப்புக்கள் கோரிக்கை விடுக்க, தமிழர்கள் தூக்கிலிடப்படுவதை தமிழக பார்த்துக் கொண்டிருக்கப் போகிறதா..? என தமிழகத்தின் புலி ஆதரவு அரசியல் தலைவர்கள் இனவாதக்கோசம் எழுப்பி வருகின்றனர்.

இலங்கைத் தமிழ் மக்கள் மத்தியிலோ குறிப்பாக முன்னாள் புலிகளின் பினாமி அரசியல்வாதிகளான தமிழ் தேசியக் கூட்டமைப்பினரோ இதுபற்றி பெரிதாக அலட்டிக் கொண்டதாத் தெரியவில்லை. குறிப்பாக அண்மையில் இடம்பெற்ற இந்திய பாராளுமன்றக்குழுவின் மனித உரிமைகள் மாநாட்டில் கலந்து கொள்ள புதுடில்லி சென்ற தமிழ் தேசியக் கூட்மைப்பின் பா.உ.க்களோ அன்றி ஏனைய இலங்கைத்தமிழ் கட்சிகளின் தலைவர்களோ இந்த மூவரின் தூக்குப் பற்றி கருத்துக்கூட தெரிவிக்காமல் மௌ-னம் காத்து 100 க்கும் மேற்பட்ட நாடுகளில் மரண தண்டனை என்பதே ஒழிக்கப்பட்டுள்ள நிலையில், இந்தியாவில் இதுபோன்ற பழிக்கு பழி சட்டம் அவசியம் தானா......? என்ற வாதங்களும் மீண்டும், வலுக்கத் தொடங்கி உள்ளன. அதே வேளை 2 வருடங்கள் கழித்து இவர்களுக்கான மரண தண்டனையை நிறைவேற்றும் அவசியம் தற்போது ஏன் ஏற்பட்டது, இதுவரை காலமும் இது ஏன் கிடப்பில் போடப்படிருந்தது என்கின்ற கேள்விகளும் எழுகின்றன. மரண தண்டனை குறித்ததான தீர்ப்புகள் செய்திகளில் வரும் போது மட்டும் மரண தண்டனை தேவையா......? என்பது குறித்த விவாதம் பல நாடுகளிலும் உருவாகி பின்னர் மறைந்து விடுகிறது. தண்டனைகள் என்பது குற்றவாளிகள் தமது குற்றங்கள் குறித்து மனம் வருந்துவதற்கான வாய்ப்பாகவும், அவன் திருந்தி வாழ்வதற்கான வழியினை உருவாக்குவனவாகவும் இருக்க வேண்டுமே தவிர, மரணத்தின் பெயரால் குற்றவாளிகளை பழிவாங்குவதாக இருக்க முடியாது என்பதே வாதம்.

> **மரண தண்டனை குறித்ததான தீர்ப்புகள் செய்திகளில் வரும் போது மட்டும் மரண தண்டனை தேவையா......? என்பது குறித்த விவாதம் பல நாடுகளிலும் உருவாகி பின்னர் மறைந்து விடுகிறது. தண்டனைகள் என்பது குற்றவாளிகள் தமது குற்றங்கள் குறித்து மனம் வருந்துவதற்கான வாய்ப்பாகவும், அவன் திருந்தி வாழ்வதற்கான வழியினை உருவாக்குவனவாகவும் இருக்க வேண்டுமே தவிர, மரணத்தின் பெயரால் குற்றவாளிகளை பழிவாங்குவதாக இருக்க முடியாது என்பதே வாதம்.**
>
> **கோவை.நந்தன்**

ஒரு குற்றத்தை செய்வதற்கு முன்னதாக அதற்கான அதிகபட்ச தண்டனை தனக்கு கிடைக்கும் என்று பயந்து ஒருவன் குற்றத்தைச் செய்ய தயங்கச் செய்வதாக, தண்டனைகள் இருக்க வேண்டும் என்பதும், தண்டனைகளுக்கான மற்றொரு முக்கியத்துவம். தண்டனைகளால் இந்தச் சமூகத்தில் குற்றங்கள் குறையும் என்ற ஒரு நம்பிக்கையை சட்டம் கொண்டுள்ளது. ஆனால் ஒரு மனி தனை சட்டம் நீதியின் பெயரால் கொல்வது என்பதை எந்தவிதத்திலும் நியாயப்படுத்த முடிவதில்லை. மரண தண்டனைக்கு எதிரானவர்கள் மட்டுமல்ல அனைத்து மானிடரும் முதலில் இந்தச் சட்டத்தை அரசியல் அமைப்பிலிருந்து நீக்க முயற்சிக்க வேண்டும். கண்டதும் சுடும் உத்தரவுகள், தூக்குமேடைகள், என்கவுண்டர்கள் இவைகளால் குற்றத்தின் போக்கை எந்நாளும் அடக்கிவிட முடியாது.

தற்போது மரண தண்டனைக்கு நாள் குறிக்கப்பட்டுள்ள மூவரும் எவ்விதத்திலும் குற்றமற்றவர்கள் என்கின்றனர் சிலர். வேறு சிலர் 'இது ஒரு துயர நிகழ்வு' என இந்த கொலையைச் செய்த புலிகளின் தலைவரே தெரிவித்த ராஜீவ் காந்தி கொலை வழக்கை விசாரணை செய்த புலனாய்வுத் துறை, மற்றும் தண்டனை வழங்கிய இந்திய நீதித்துறை, ஆகியவை மீது குற்றச்சாட்டுகளை முன்வைக்கின்றனர். கிட்டத்தட்ட கால் நூற்றாண்டு காலம் இவர்கள் சிறைக்குள் இருந்தமையே மிகப்பெரிய தண்டனை. அதன்பின்னர் தூக்கு என்பது ஒரே குற்றத்துக்கு இரு தண்டனை ஆகும் எனவும் சட்டவாதங்கள் முன் வைக்கப்படுகின்றன.

நான்கு முறை தூக்குத் தண்டனை ஒத்திவைக்கப்பட்ட ஒரு குற்றவாளிக்கு அத்தண்டனை ரத்துச் செய்யப்பட்ட தீர்ப்பின் போது அந்த நீதியரசர்கள் சொன்ன காரணம்- "நான்கு முறையும் அவர் அடைந்த மன வலியையே ஒரு தண்டனையாக எடுத்துக்கொண்டு அவருக்கு தூக்குத்தண்டனை ரத்து செய்யப்படுகிறது" என. அதே நிலை இம்மூவருக்கும் பொருந்த வாய்ப்பு உள்ளதாகவும் சொல்லப்படுகிறது. எது எப்படியாயினும் முருகன், சாந்தன் மற்றும் பேரறிவாளன் ஆகிய மூவருக்குமான தூக்குத் திகதி நீதியால் நிர்ணயிக்கப்பட்டு அதற்கெதிரன சட்டவாதங்களின் அடிப்படையில் தற்போதைக்கு ஒத்தி வைக்கப்பட்டுள்ளது. இது நிறைவேறலாம் அல்லது இறுதிநேர அரசியல் அதிரடி அறிவிப்புக்கள் அல்லது தற்போதைய சட்ட முன்னெடுப்புக்கள் போன்றவற்றால் தூக்குக் கயிற்றிலிருந்து இவர்கள் காப்பாற்றப்படலாம். ஆனால் இந்த விவகாரத்தில் உறங்கிக் கொண்டிருக்கும் . உண்மைகள் தட்டி எழுப்பப்பட வேண்டியவையே.

ராஜீவ் காந்தி கொலையை நிகழ்த்தியவர்கள் புலிகளே என சட்டம் மட்டும் நிரூபிக்கவில்லை. அவர்கள் தரப்பிலும் ஒப்புக் கொள்ளப்பட்டு அதன் முக்கிய சூத்திரதாரிகள் எனச்சொல்லப்பட்ட பிரபாகரன், பொட்டு அம்மான் சிவராசன், மனித வெடிகுண்டாகப் பயன்படுத்தப்பட்ட சுதா, உட்பட்ட அவர்கள் அனைவரும் முற்றிலுமாக அழிக்கப்பட்ட நிலையில் இந்தியாவின் காங்கிரசு அரசு திடீரென இந்தத்தண்டனையை நிறைவேற்ற முனைவதன் காரணம் என்ன....? குறிப்பாக 2008ஆம் ஆண்டு புலிகளுடனான இறுதிப் போரின் போது ராஜபக்ச அரச இராணுவம், மேற்கொண்ட போர்க்குற்றங்கள் விசாரிக்கப்பட வேண்டுமென்ற குரல் சர்வதேச அளவில் எழும்பியுள்ள நிலையிலேயே, நிலுவையில் இருந்த இந்தத் தூக்கு விவகாரம் தூசு தட்டப்பட்டுள்ளது கவனிக்கப் படவேண்டியது.

சில சமயம் இலங்கை அரசுமீது சர்வதேச போர்க்குற்ற விசாரணை முன்னெடுக்கப்பட்டால், வன்னிப் போர் முன்னெடுப்பின் சர்வதேச பின்னணிகள் அம்பலமாகலாம் என்கின்ற நினைப்பிலும், புலிகளின் அராஜகங்களில் முக்கியமானது முன்னிறுத்தப் பட்டிருக்கலாம். எதிர்க்கட்சியான இந்துத்துவ பா.ஜ.க.வின் வாயை அடைக்க வேண்டுமென்பதற்காக, பாகிஸ்தான் தீவிரவாதி அப்சல் குருவை தூக்கில் போடவேண்டும் என்று நினைக்கும் காங்கிரசு அரசு அதற்கு முன்னதாக முன்வரிசையில் உள்ளவர்களையும் தூக்கிலேற்ற வேண்டும் என்பதற் காகவும், இவர்கள் மூவரையும் தூக்கிலேற்ற முடிவெடுத்திருக்கலாம் எனவும் மற்றொரு காரணம் கூறப்படுகிறது. அப்சல் குரு ஒரு அப்பாவி என அருந்ததி ராய் தொடங்கி பல்வேறு மனித உரிமை அமைப்புக்கள் ஆதாரத்துடன் நிரூபித்திருந்தும், தூக்குக்கயிறு அவனுக்கு தயாராகவே உள்ளது.

அடுத்து வரிசையாக ஊழல் குற்றச்சாட்டுகளில் சிக்கித் திணறும் காங்கிரசு அரசு தேசத்தின் நிகழ்ச்சி நிரலை அல்லது எழுச்சியை மாற்றுவதற்காகவும் இதை முன்னெடுத்திருக்கலாம் என்பதற்கும் வாய்ப்பு இருக்கிறது. அண்ணா ஹசாரேவை வைத்து ஊடகங்கள் எழுப்பும் ஜனநாயகக் கூச்சல் காங்கிரஸ் அரசை திக்கு முக்காட வைக்கிறது.

**(தொடர்ச்சி 22ஆம் பக்கம்)**

# அவலம் சுமந்த அகதிகள்

அவலம் 46

அத்திமுகத்தோன்

அவரவர்கள் ஏதோ உணவுக்காகப் போராடிய வண்ணம் இருந்தனர். சில மக்களால். குறிப்பாக நாட்கூலியாக வாழ்ந்தவர்கள் ஒருநேர உணவுக்காக மிகவும் கஷ்டப்பட்டவர்களாக மதியநேரம் தமிழர் புனர்வாழ்வுக்கழகம் வழங்கும் பச்சையரிசிப் பால்க் கஞ்சியை நம்பியே வாழ்க்கையை நடத்திக்கொண்டிருந்தார்கள். நிவாரணப் பொருட்களாக வழங்கப்படும் சிறுதொகை அரிசி. மா மற்றும் சீனி தேங்காய் எண்ணெயை மட்டும் வைத்துக்கொண்டு அவர்களால் வாழ்க்கையை நகர்த்த முடியவில்லை. இடம்பெயர்வு அவலத்தோடு. அவர்கள் பசி. பட்டினியான போராட்டத்தையும் எதிர்கொள்ள வேண்டியிருந்தது.

**அவன்** இளைய சகலனின் கரத்தைப் பிடித்துக்கொண்டு பக்கத்துத் தரப்பாள் வீடுகளுக்கு இடைவழியாக ஓடத் தொடங்கினான். அவர்கள் ஓடுவதைப் பிக்கப்பில் இருந்த ஒருவன் கண்டு விட்டான் போலும். வேகமாக வந்து கொண்டிருந்த வாகனம் திடீரென அவர்கள் ஓடிய இடத்தினருகில் புழுதிபறக்க பிரேக் அடித்து நின்றது. வாகனத்தில் இருந்த சிலர், கீழே குதித்து அவர்கள் ஓடிய பாதையூடாக துரத்தத் தொடங்கினார்கள்.

"அண்ணை! கண்டிட்டாங்கள் அண்ணை துரத்திராங்கள்" இளைய சகலன் பதற்றத்துடன் கூறியபடி... • அவனுக்குப் பின்புறமாக ஓடிக்கொண்டிருந்தான்.

"திரும்பிப் பார்க்காமல் எனக்குப் பின்னால ஓடி வா..." அவன் கூறிவிட்டு கூடியளவு தனது ஓட்டத்தில் தீவிரத்தைக் காட்டினான்.

மிக நெருக்கமாக அமைக்கப்பட்டிருந்த தரப்பாள் வீடுகளின் இடைவெளிகளூடாக அவர்கள் ஓடிக்கொண்டிருந்தார்கள். சில இடங்களில் கும்பிமணல்களில் கால்களை மிதித்து ஓடுவது மிகக் கஷ்டமாக இருந்தது. இவர்கள் ஓடுவதைக் கண்ட பொதுமக்கள் நிலைமையை உணர்ந்து கொண்டார்கள். இளம் வயதினர் மெதுவாகத் தங்களை வீடுகளுக்குள் உள்ளிளுத்துக் உருமறைப்புச் செய்துகொண்டார்கள்.

"நாசமாய் போவார் இண்டைக்குத் துவங்கியிட்டாங்கள்."

தரப்பாள் வாசலில் இருந்தபடி... ஒரு கிழவி முன்னால் கிடந்த மண்ணை அள்ளித் திட்டிச்சாபம் போட்டாள்.

"டேய்... நில்லுங்கோடா... இல்லை சுட்டிடுவன்..." துரத்துகின்ற ஒருவனிடமிருந்து குரல் எழுகிறது. அவர்கள் இருவரும் ஓடிக்கொண்டே இருந்தார்கள்.

திடீரென துரத்திக்கொண்டு வந்தவன் தனது 'பிஸ்டலை' எடுத்து வானத்தை நோக்கி 'சத்தவெடி' வைத்தான்.

அவர்கள் நிற்கவுமில்லை; திரும் பிப் பார்க்கவுமில்லை. ஓடிக் கொண்டிருந்தார்கள். நிலத்தில் மூலைக்கு மூலை தறப்பாளை இழுத்துக் கட்டிய கயிறு ஒன்றில் அவன் தடக்கப்பட்டுவிழ, அவனுக்குப் பின்பாக ஓடிவந்த இளைய சகலன் இதைச் சற்றும் எதிர்பாராத நிலையில் அவன் மீது விழுந்து குத்துக்கரணம் அடித்தபடி... அருகில் உள்ள ஒரு தரப்பாள் வீட்டின் அருகோரம் போய் விழுந்தான். விழுந்தவர்கள் இருவரும் எழுவதற்கிடையில்,

அவர்களைத் துரத்திக்கொண்டு வந்த பிஸ்டல்காரன் அவர்களுக்கருகில் வந்து குத்துக்கரணம் அடித்துவிழுந்த இளைய சகலனின் பிடறி மயிரைப் பிடித்துத் தூக்குவதைக் கண்ட அவன், பட்டென காலடியில் கிடந்த குருகு மணலை அள்ளி பிஸ்டல்காரனின் முகத்தை நோக்கி அடித்தான். பிஸ்டல்காரன் இதைக் கொஞ்சம்கூட எதிர்பார்க்காத நிலையில் கையில் இருந்த பிஸ்டலைக் கீழே விட்டிட்டு இரண்டு கைகளாலும் முகத்தைப் பொத்த, அவன் பட்டென பிஸ்டலை எடுத்து இடுப்பினில் செருகிக் கொண்டான். இந்தச் சந்தர்ப்பத்தைப் பயன்படுத்திக்கொண்ட இளையசகலன், திடீரென எழுந்து தனது வலது கையை முட்டி மடக்கி பிஸ்ரல்காரனின் முகத்தில் ஓங்கி ஒரு குத்துக் குத்தினான். சகலனது அந்தப்பலமான ஒரு குத்தில் பிஸ்டல்காரனுக்கு மூக்கும் முன்வாய்ப்பல்லும் உடைந்து இரத்தம் வழியத் தொடங்கிவிட்டது.

அவன் திரும்பவும் மண்ணை அள்ளி முகத்தில் அடித்துவிட்டு, சகலனை இழுத்துக்கொண்டு, வேறுவழியாக ஓடாமல் வேகமாக நடக்கத் தொடங்கினான்.

"அண்ணை ஓடிப்போவம், இனித்தான் நிலைமை விபரீதமாகப் போகுது..."

"சீச்சி... ஓடினால்தான் இனிப் பிரச்சினை. எல்லோரும் சந்தேகமாப் பாப்பினம். காட்டியும் குடுத்திடுவினம்... அதால பதற்றத்தைக் காட்டாமல் "நோமலாகவே நடப்பம்..." என்று கூறியவன்... திரும்ப வேறு ஒரு பாதையைப் பிடித்து நடக்கத் தொடங்கினான். சுமார் பதினைந்து நிமிடங்கள் வரை நடந்து திரிந்தவர்கள், ஒருவாறாக மீண்டும் மாத்தளன் சந்திக்கு அருகாக வந்து சேர்ந்தார்கள்.

"அண்ணை உதில மாமா வீட்டை கொஞ்சத்துக்கு இருந்திட்டுப் போவம்..." என்று கூறினான் இளைய சகலன். அவனுக்கும் அது சரியெனப்படவே இருவருமாக மாமா வீட்டை நோக்கி நடந்தார்கள்.

சாலையோரப் படலையை வாசலில் மாமாவின் மைத்துனர் கடல் தொழிலுக்குச் செல்வதற்காக வந்து நின்றார்.

"எங்கை துலையாலையோ வாறியள். முகமெல்லாம் வேர்த்துக் களைச்சமாதிரித் தெரியுது..." மாமாவின் மைத்துனர் சிரித்தபடி கேட்டார்.

"விதானை வீடுட்டை போட்டு வாறம்...." அவன் முகத்தில் சிரிப்பை வலிய வரவழைத்தபடி... கூறினான்.

"சரி உள்ள போங்கோ... வீட்டை சின்னத்தங்கை நிற்கிறாள். நான் தொழிலுக்குப் போட்டுவாறன்..." என்று கூறியபடி அவர் படலையைத் திறந்தபடி சாலையில் ஏறி கடற்கரைப்பக்கம் நடக்கத் தொடங்கினார்.

வீட்டினுள்ளே ஐயாவுக்குச் சின்னத்தங்கை ரொட்டி ஊட்டிக் கொண்டிருந்தாள்.

"என்ன ரேசன் துண்டு எடுத்திட்டியளே...?"

"ஓமோம்..."

"நடவுங்கோ வீட்டை சாப்பிட்டிட்டுப் பிறகு வந்து ரேசனை எடுப்பம்."

இளைய சகலன் அவனைத் திரும்பிப் பார்த்தான்.

"சாப்பாட்டை இஞ்சை கொண்டு வா பிள்ளை..." அவன் கூறினான்.

வெளியில நிலைமை கொஞ்சம் சிக்கலாக்கிடக்குது. எப்பனுக்கு ஆறி இருந்திட்டு ரேசனை எடுத்துக்கொண்டு வாறம். நீ போய் வரேக்கை உரப்பாய்க்குகளை எடுத்துக்கொண்டு வா..."

"என்ன ஆட்களைப் பிடிக்கிறாங்களே...?" மாமா கேட்டார்.

"ஓம் மாமா... எங்களைவிட்டுத் துரத்தினாங்கள். ஓடி வந்திட்டம்..."

"ஐய்யய்யோ..." சின்னத்தங்கை பதகளிப்பட்டாள்.

"பிள்ளை! சும்மா பதறாதை, எங்கட தலையெழுத்தை மீறி எதுவும் நடக்கப் போறதில்லை. எது நடக்க இருக்குதோ அது நன்றாகவே நடக்கத்தான் செய்யும்.

மாமாவும், சின்னத்தங்கையும் எதுவும் கூறவில்லை. மாமாவின் முகத்தில் கவலை தெரிந்தது. மருமகளுக்கு ஏதாவது ஒன்று ஆகிவிட்டால்... தனது பிள்ளைகளின் எதிர்கால நிலைமை..."

"நீங்கள் இப்ப ஒருடமும் போகவேண்டாம். வீட்டில இருங்கோ..." மருமக்கள் இருவரும் எதுவும் கூறவில்லை. மௌனமாக நின்றார்கள். சின்னத்தங்கை தனது வீட்டிற்குப் போவதற்கு ஆயித்தமாகிய போது அவளைத் தடுத்து அவன் கூறினான்.

"பிள்ளை எங்கட பிரச்சினை குறித்து கொக்காட்டை எதுவும் சொல்லிப் போடாதை. பயந்து போயிடுவாள். சங்கக்கடைப் பக்கத்தில இருக்கிறதால நிற்கிறமெண்டு சொல்லு. வரேக்கை சாப்பாட்டையும் உரப்பையையும் எடுத்துக்கொண்டு வா..."

"சரி அத்தான். நான் போட்டு வாறன். கவனமா இருங்கோ..." சின்னத்தங்கை கவலையுடன் கூறிவிட்டு வெளியேறினாள்.

அன்றைய பொழுதுக்குரிய நிகழ்வுகள் வழமை போலவே இயங்கிக் கொண்டிருந்தன. அவரவர்கள் ஏதோ உணவுக்காகப் போராடியவண்ணம் இருந்தனர். சில மக்களால், குறிப்பாக நாட்கூலியாக வாழ்ந்தவர்கள். ஒரு நேர உணவுக்காக மிகவும் கஷ்டப்பட்டவர்களாக மதிய நேரம் தமிழர் புனர்வாழ்வுக்கழகம் வழங்கும் பச்சையரிசிப் பால்க் கஞ்சியை நம்பியே வாழ்க்கையை நடத்திக் கொண்டிருந்தார்கள். நிவாரணப் பொருட்களாக வழங்கப்படும் சிறுதொகை அரசி, மா மற்றும் சீனி தேங்காய் எண்ணெயை மட்டும் வைத்துக்கொண்டு அவர்களால் வாழ்க்கையை நகர்த்தமுடியவில்லை. இடம்பெயர்வு அவலத்தோடு, அவர்கள் பசி, பட்டினியான போராட்டத்தையும் எதிர்கொள்ள வேண்டியிருந்தது.

இராணுவத்தின் எறிகணை வீச்சுக்கள், இயக்கத்தின் பலவந்தமான ஆட்பிடித்தல், உறவுகளைப் பலிகொடுத்த வேதனை, சுகாதாரமற்ற வாழ்க்கை, சுத்தமான குடிநீர் இன்மை, நோய்க்குரிய மருந்துகள் அற்ற நிலை... போன்ற பல்வேறு தாக்கங்களால் அனைவரும் பாதிக்கப்பட்டு இருந்ததோடு, வசதியுள்ளவர்கள் ஏதோ தாக்குப் பிடித்து வாழ்க்கையை நகர்த்திக்கொண்டிருந்தார்கள்.

சாப்பாடு எடுத்துவரச் சென்ற சின்னத்தங்கையைக் காணாததால், அவன் குடிசையைவிட்டு வெளியே வந்தான்.

"ஏன் வெளியில் போறியள்... அவங்கட கண்ணில அகப்பட்டாலும்..." மாமாவின் குரல் அவனை மீண்டும் குடிசைக்குள் இழுத்துக் கொண்டு வந்து இருத்தியது.

"இவள் பிள்ளையை இன்னும் காணேல்லை. சாப்பாடு எடுத்து வாறன் எண்டு சொல்லிப்போட்டுப் போனவள்..."

"ஏன்பசிக்குதே...? நேரத்தோடை வெளிக்கிட்டுப் போனதெண்டு சின்னவள் சொன்னாள்.

"இல்லை மாமா... ரேசன் எடுக்க வேணும். பிறகு ஆட்கள் நிறைய வந்து குவிஞ்சிடுவினம்..." அவன் கூறிக்கொண்டிருக்கையில், திடீரென பிஸ்டலின் ஞாபகம் வந்தது. மடியைத் தடவிப் பார்த்தான். அது பத்திரமாக இருந்தது. அவன் போராட்டத்துக்காக இயக்கத்தில் எல்லைப்படையாகவோ அன்றி முழுநேரத் தொண்டனாகவோ இணைந்து பயிற்சி எடுத்தவன் அல்ல. ஆன்மீக விடயங்களில் அவன் அதிகநாட்டமும் பயமும் கொண்டிருந்ததால், துவக்குத் தூக்கி அடிபடுகிறது; சுடுபடுகிறது தனக்குச் சரிப்பட்டு வராது என்பதை உணர்ந்துகொண்டு அவன் இயக்கப் போராட்டத்துக்கான பங்களிப்பிலிருந்து விடுபட்டுக்கொண்டிருந்தான். எதைத் தொடக்கூடாது என்று அவன் விலகி நடந்தானோ அது இன்று அவனது மடியில் கனத்துக்கொண்டிருந்தது. அவனுக்குச் சிரிப்பு வந்தது. தனக்குள் சிரித்துக்கொண்டான். திரும்பி இளைய சகலனைப் பார்த்தான். இருந்த நிலையில் குடிசைக்குள் அடுக்கி வைக்கப்பட்டிருந்த வலைகளுக்கு மேல் சரிந்தபடி நல்லதூக்கத்தில் இருந்தான். சகலனைப் பார்க்க அவனுக்கு மனதில் ஒரு பரிதாப உணர்வு தோன்றியது. பிஸ்டலை இடுப்பிலிருந்து மெதுவாக வெளியே எடுக்க முனைந்தபோது மாமா இருமுவது தெரிந்தது. அவன் திரும்பிப் பார்த்தான். அவர் முதுகு காட்டிக்கொண்டு படுத்திருப்பது தெரிந்தது.

இடுப்பிலிருந்து பிஸ்டலை வெளியே எடுத்தான். மெதுவாக அடுக்கிக் கிடந்த வலைகளுக்குக் கீழே வைத்துவிட்டுத் திரும்பியபோது. இளைய சகலன் விழித்துக் கொண்டான்.

"என்னண்ணை...?"

"ஒண்டுமில்லை! வலைசரிஞ்சமாதிரிக் கிடந்தது. அதுதான் சீர்ப்படுத்தி விட்டனான்.

வெளியே தெருவோரப் படலை தட்டி திறபடும் சத்தம் கேட்டு இருவரும் திரும்பிப் பார்த்தார்கள். உள்ளே உரபாய்க்குடன் சின்னத்தங்கை வந்துகொண்டிருந்தாள். அவள் குடிசைக்குள் வந்து அவர்கள் இருவரையும் ஒரு மாதிரிப் பார்த்தாள்.

"என்ன பிள்ளை...? முகம் ஒரு மாதிரிக் கிடக்குது...?அவன் கலக்கத்தோடு கேட்க, இளைய சகலன் வலைக்கும்பியில் இருந்து எழுந்துகொண்டான்.

அவனது கேள்விக்கு சின்னத்தங்கை கூறிய விடயம் அவர்களை அக்கணம் அதிர்ச்சிக்குள்ளாக்கியது...

**(அவலம் தொடரும்...)**



**உன்னை நீயே பலவீனன் என்று நினைத்துக் கொள்வது மிகப் பெரிய பாவம்.**

சுவாமி விவேகானந்தர்

## வாரம் ஒரு திருக்குறள்




**வாய்மை**

**"பொய்யாமை அன்ன புகழில்லை எய்யாமை**
**எல்லா அறமும் தரும்"**

ஒருவனுக்குப் பொய் இல்லாமல் வாழ்தலைப் போன்ற புகழ்நிலை வேறொன்று இல்லை; அ்.து அவன் அறியாமலே அவனுக்கு எல்லா அறமும் கொடுக்கும்.

குறள்:296



## குட்டிக் கிரகங்கள்

செவ்வாய்க்கும், வியாழனுக்கும் இடையே ஒரு குப்பை போன்ற பெல்ட் வளையம் சுற்றிக் கொண்டிருக்கிறது. 'அஸ்டிரோயட்கள்' என்று அழைக்கப்படும் குட்டிக் கிரகங்கள்தான் இவை. இதுவரை சுமார் 2 ஆயிரத்து 500 அஸ்டிரோய்ட்களைக் கணக்கிட்டிருக்கிறார்கள். இவற்றில் மிகப்பெரியது ஸிரிஸ். இது 1000 கிலோமீற்றர் விட்டம் உடையது. சுமார் 100 மீற்றர் விட்டம் கொண்டதுதான் மிகச் சிறியது. இவை எல்லாம் செவ்வாய்க்கும், வியாழனுக்கும் இடையே உள்ள இடைவெளியில்தான் சுற்றிக் கொண்டிருக்கின்றன. சிலநேரங்களில், இவை பாதை மாறி பயணித்து, மற்ற கிரகங்களுடன் மோதிவிடுகின்றன. சனிக் கிரத்தைச் சுற்றியிருக்கும் வளையங்களையும் பொடிப்பொடியான ஐஸ் வடிவ அஸ்டிரோய்ட்கள் தான் என்கின்றனர் விஞ்ஞானிகள்.




# பாசம்

**இயற்கை** எழில் சூழ்ந்த அழகான கிராமம், பூஞ்சோலை. அங்கு ஆற்றங்கரையில் வாத்துக்கள் ஓடும். மீன்கள் துள்ளி விளையாடும்.

ஆற்றங்கரை ஓரத்தில் உள்ள ஒரு வீட்டில் கோழி ஒன்று குஞ்சு பொரித்தது. அதில் ஐந்து கோழி குஞ்சுகளும், ஒரு வாத்துக்குஞ்சும் இருந்தன. அந்த வீட்டில் இருந்த சிறுமி ஒரு வாத்து முட்டையையும், கோழி முட்டைகளோடு சேர்த்து வைத்து இருந்தாள். அதனால்தான் வாத்துக்குஞ்சும் கோழிக்குஞ்சோடு சேர்ந்துவிட்டது.

ஆற்றங்கரையில் கோழியுடன் சேர்ந்து குட்டி வாத்து இரை தேடும் போது, அதை அடையாளம் கண்டுகொண்டு, ஆற்றில் நீந்திச் சென்ற வாத்துக்கள் அழைத்தன.

"என் அம்மா கோழிதான். நான் வரமாட்டேன்" என்றது, வாத்துக்குஞ்சு. பல நாட்கள் சென்றன. கோழிக்குஞ்சுகளும், வாத்துக்குஞ்சும் வளர்ந்துவிட்டன. அதனால் தன் குஞ்சுகளையும், வாத்தையும் கொத்தி விரட்டியது கோழி. கோழிகள் சொந்தக் காலில் நின்று இரை தேடித்தின்ன ஆரம்பித்தன. வாத்து மட்டும் என்ன செய்வது என்று தெரியாமல் தவித்தது.

ஒருநாள், கவலையுடன் ஆற்றோரம் வந்தது, குட்டி வாத்து. அப்போது அங்கு ஆற்றில் உல்லாசமாக நீந்தி வந்த வாத்துக்கள் குட்டி வாத்தைப் பார்த்து மீண்டும் அழைத்தன. குட்டி வாத்துக்கு இப்போது அவர்களுடன் சேர்ந்து செல்ல வேண்டும் என்ற எண்ணம் ஏற்பட்டது. உடனே அவற்றுடன் சேர்ந்து செல்ல சம்மதித்து, மெதுவாக ஆற்றில் இறங்கியது. குட்டி வாத்துக்கு மற்ற வாத்துக்கள் நீந்தக் கற்றுக் கொடுத்தன. ஆற்றில் நன்றாக நீந்தப் பழகியது, குட்டி வாத்து. இருந்தாலும், அதனால் தன்னை வளர்த்தக் கோழியைப் பார்க்காமல் இருக்க முடியவில்லை.

ஒருநாள் கோழியைப் பார்க்க மீன்களைப் பிடித்துக் கொண்டு சென்றது குட்டி வாத்து. அப்போது தாய்க்கோழியுடன் மற்ற கோழிகள் பேசிக் கொண்டிருந்தன. வாத்தைப் பார்த்ததும் கோழிகள் வரவேற்றன.

"வாத்து எவ்வளோ பாசமாக, நமக்காக மீன்பிடித்துக் கொண்டு வருது?! நீங்க எதுக்கும்மா, வாத்தை விரட்டுனீங்க?" எனக் கேட்டன கோழிக்குஞ்சுகள்.

"உங்களை எப்படி பாசமா வளர்த்தேனோ, அதே மாதிரித் தான் வாத்தையும், வளர்த்தேன். வாத்துக்கு தண்ணீர்தான் வசதி. நாம் பாசமாக இருந்தால், வாத்து ஆற்றுக்கு போக மறுத்து இங்கேயே தங்கிக் கஷ்டப்படும். பிறருக்கு ஒருபோதும் கஷ்டத்தை நாம் கொடுக்கக் கூடாது. அதனால்தான் அதை விரட்டிவிட்டேன்" என்றது தாய்க்கோழி.


இதைக் கேட்ட குட்டி வாத்து, "நான் உங்களுடைய பாசத்தை ஒருநாளும் மறக்கமாட்டேம்மா" என்று சொல்லி, மீன்களைக் கொடுத்த சந்தோஷத்துடன் விடைபெற்றது.

## வண்ணத்துப்பூச்சி



**வண்ணத்துப்பூச்சியின்** சிறகில் இருந்துவரும் வண்ண வண்ண நிறங்கள் எப்படி இருக்கின்றது என்பது தெரியுமா? பொதுவாக வண்ணத்துப்பூச்சியின் உடலில் இருந்து நைட்ரஜன் கழிவுகளாக வெளியேறுகிறது. இந்த கழிவுகள் அதன் செதில்களில் படிப்படியாக படிந்துகொள்கிறது. பெரியளவில் உள்ள வண்ணத்துப்பூச்சியில், ஒரு மில்லியனிலிருந்து இருந்து ஒன்றரை மில்லியன் வரை செதில்கள் இருக்குமாம். இவை முப்பட்டக கண்ணாடி போல இருந்து வேலை செய்கிறது. அதாவது அதன் மேல் படும் ஒளியை சிதறடிக்கின்றது. அதனால் தான் நமக்கு வண்ணத்துப்பூச்சியின் சிறகுகள் பல வண்ணங்களில் தெரிகிறது.

இந்த நிறங்களால் வண்ணத்துப்பூச்சிக்கு இன்னொரு நன்மையும் உண்டாம். அதாவது, இரையைக் கவ்வி பிடிச்சு சாப்பிடும் விலங்குகளிடமிருந்து பூக்களுக்கு இடையே நைசாக மறைந்து உட்கார்ந்து கொண்டு தன்னைப் பத்திரமாக பாதுகாக்கிறது.



## கூடு கட்டுமா குயில்?

நல்லா பாடும் குயிலுக்கு வீடு கட்டத் தெரியவில்லை. இது ஏன் என்று உங்களுக்கு தெரியுமா? பயம்தான் இதுக்கு காரணம். நாம் கூடுகட்டி, முட்டையிட்டு அதைப் பத்திரமாக பாதுகாக்கும்போது, வேறு ஏதாவது பறவை, பாம்புகள் வந்து தூக்கிக் கொண்டு போனால் என்ன செய்வது நினைக்குமாம். அதனால்தான் இந்த பயம். பாவம். அதனால்தான், காகத்தின் கூட்டுக்குள் முட்டையிட்டு விட்டுப் போய்விடும். எப்படியும் பத்திரமாக தன்னுடைய முட்டையை பாதுகாத்துக் கொள்ளும் என்று நினைக்குமாம், குயில்.

## 7 வித்தியாசங்கள்




இந்த இரண்டு படங்களுக்கும் இடையே குறைந்தபட்சம் ஏழு வித்தியாசங்கள் உள்ளன. அவற்றை கண்டுபிடியுங்கள்.



## தகவல் களஞ்சியம்

* சிறிதளவு மதுபானத்தை தேளின் மீதுவிட்டால் போதும், உடனே அது மயக்கமடைந்து இறந்துவிடும்.
* உலகில் பயன்படுத்தப்படும் பெற்றோலில் 29 சதவீதம் அமெரிக்காவில் பயன்படுத்தப்படுகிறது. அதுபோல உலகில் பயன்படுத்தப்படும் மின்சாரத்தில் 33 சதவீதம் பயன்படுத்தப்படுவதும் அமெரிக்காவில்தான்.
* ஒரு மணிநேரம் காதில் இயர்போன் அணிந்து பாட்டு கேட்கும் போது, காதில் உள்ள பக்ரீரியாக்களின் எண்ணிக்கை பலமடங்கு அதிகரிக்கிறது.
* டைட்டானிக் கப்பலைத் தயாரிக்கவெறும் 7 மில்லியன் டொலர் மட்டும்தான். ஆனால், டைட்டானிக் படம் எடுக்க எவ்வளவு செலவானது என்று தெரியுமா? 200 மில்லியன் டொலர்.

## சிறந்த வர்ணத்திற்கு பரிசு தரும் வண்ணம்!



போட்டியில் கலந்துகொள்பவர்கள் தாம் கல்வி கற்கும் தரத்தினை கட்டாயம் குறிப்பிட வேண்டும்.

மேலே உள்ள படத்தினை வர்ணம் தீட்டி தபாலட்டையில் ஒட்டி அனுப்புங்கள். சிறந்த வர்ணம் ஒன்றிற்கு புத்தகமொன்று பரிசாகக் காத்திருக்கிறது. அனுப்ப வேண்டிய கடைசித் திகதி 18.09.2011

**வர்ணம் தீட்டும் போட்டி இல.906**

தினமுரசு வாரமலர்

த.பெ.இல:1772, கொழும்பு. த.பெ.இல:167, யாழ்ப்பாணம்.

**வர்ணம் தீட்டும் போட்டி இல: 904**

**பரிசுக்குரியவர்: க.சைந்தவி, மாப்பளாவத்துற வீதி, கண்டி.**

**பாராட்டுக்குரியவர்கள்**

01. எச்.எவ்.ஷபா, புதியவீதி, கல்முனை-07.
02. எஸ்.நிகல்யா, புதிய சோனகத்தெரு, திருகோணமலை.
03 க.மயூரன், பஸல்ஸ் லேன், வெள்ளவத்தை.
04. ப.கார்த்திகா, பிறீமன் றைவ், மட்டக்களப்பு.
05. டெ.ஆன்சிலீன், தோணிக்கல், வவுனியா.
07. கே.அபிஷலா, ஜெயபுரம் தெற்கு, பல்லவராயன்கட்டு.
08. கே.ரகுநாத், சிறுப்பிட்டி தெற்கு, நீர்வேலி.
09. ர.நவீன், கோம்பாவில், புதுக்குடியிருப்பு.

## வாரம் ஒரு நாடு




### இந்தியா

**தலைநகர்:** புதுடெல்லி
**பரப்பளவு:** *32 இலட்சத்து 87 ஆயிரத்து 590 சதுர கிலோமீற்றர்*
**மக்கள் தொகை:** *121 கோடியே ஒரு இலட்சத்து 93 ஆயிரம்*
**எழுத்தறிவு:** *65.38 சதவீதம்,* **மொழி:** இந்தி, தமிழ், ஆங்கிலம், உருது உட்பட 22 அங்கீகரிக்கப்பட்ட மொழிகள்
**மதங்கள்:** இந்து, இஸ்லாம், கிறிஸ்தவம், புத்த மதம், சமணம்.
**அமைவிடம்:** இந்தியா, தெற்காசியாவில் அமைந்துள்ள நாடு. தெற்கில் இந்தியப்பெருங்கடலும், மேற்கில் அரபிக்கடலும், கிழக்கில் வங்காள விரிகுடாக் கடலும் அமைந்துள்ளன. மூன்று புறங்களிலும் கடலால் சூழப்பட்டுள்ளதால், இந்தியா ஒரு தீபகற்ப நாடு. மேற்கில் பாகிஸ்தானும், வடக்கில், சீனா, நேபாளம், பூடான் போன்ற நாடுகளும், கிழக்கே பங்களாதேஷ் மியான்மார் ஆகிய நாடுகளும் எல்லைகளாக உள்ளன.
**அங்கீகரிக்கப்பட்டுள்ள மொழிகள்:** அசாமீஸ், பெங்காலி, போடோ, டோக்ரி, குஜராத்தி, இந்தி, கன்னடா, காஷ்மீரி, கொங்கனி, மைதிலி, மலையாளம், மணிபுரி, மராத்தி, நேபாளி, ஒரியா, பஞ்சாபி, சமஸ்கிருதம், சண்டாலி, சிந்தி, தமிழ், தெலுங்கு, உருது ஆகிய 22 மொழிகளும் இந்திய அரசியல் சட்டத்தின் 8வது பிரிவின் கீழ் அங்கீகரிக்கப்பட்டவை.
**கனிம வளம்:** நிலக்கரி, இரும்பு, மாங்கனீசு, பாக்ஸைட், மைக்கா முதலியவை. **தொழில்:** தகவல் தொழில்நுட்பம், மோட்டார் வாகனங்கள் தயாரிப்பு, எண்ணெய் மற்றும் இயற்கை வாயு கண்டுபிடிப்பு, சுத்திகரிப்பு மற்றும் இதர துணைப் பொருட்கள், தொலைபேசி மற்றும் தகவல் துறை, நெசவுத்துறை மற்றும் விண்வெளி ஆராய்ச்சி போன்ற துறைகளில் வளர்ந்த நாடுகளுடன் போட்டி போடும் அளவிற்கு வளர்ச்சி அடைந்துள்ளது. **விவசாயம்:** நெல், கோதுமை, தானியங்கள், பருப்பு வகைகள், கரும்பு, எண்ணெய் வித்துக்கள், கோப்பி, தேயிலை, இறப்பர், வாசனைத் திரவியங்கள், பருத்தி, சணல்.

## தாய்மொழி!

**தாய்மொழியைப் போற்றுவோம்**
**அது தழைக்கத் தொண்டு**
**ஆற்றுவோம்!**
**தாயைப் போல எண்ணியே**
**தாங்கி நெஞ்சில் வாழ்த்துவோம்!**


**அன்னை மொழியில் படிப்பதால்**
**அனைத்தும் எளிதில் புரியுமே!**
**கண்ணில் தெரியும்**
**வெளிச்சம்போல்**
**கருத்து முழுதும் விளங்குமே!**

**உள்ளக் கருத்தை**
**உணர்த்தவும்,**
**உணர்ச்சி பொங்க விளக்கவும்,**
**சொல்லும் கருத்தைச்**
**சுவைக்கவும்,**
**வல்ல மொழியே தாய்மொழி!**

**வேறு மொழியில் படிப்பதால்**
**விரிந்த அறிவு வளரலாம்!**
**தூரமான நாட்டுடன்**
**தொடர்பு கொள்ள**
**உதவலாம்!**

**ஆனபோதும் தாய்மொழி**
**அறிவு சேர்க்க நல்வழி**
**மானம் நமக்குத் தாய்மொழி**
**மனதில் கொண்டு நீ செழி!**

# தலைவலி இளமைக்கு சவால்!



(சென்ற வாரத் தொடர்ச்சி)

வலி போகும் வரை தூக்கம் வராது. மதுப் பழக்கம் உள்ளவர்களுக்கு இது போன்ற தலைவலி வரும்.

நாள்பட்ட நித்தம் நித்தம் தலைவலி அறிகுறிகள் என்ன?

பரபரப்புத் தன்மையால் ஏற்படும் தலைவலி, ஒற்றைத் தலைவலி ஆகியவை காரணமாக தினந்தோறும் மருந்து சாப்பிடும் பழக்கத்தை சிலர் மேற்கொள்வர். ஒரு கட்டத்தில் மருந்துக்குக் கட்டுப்படாத தலைவலியாக மாறி நித்தம் நித்தம் தலை வலி வரக்கூடும். இத்தகைய வலி வருவோருக்கு வலி வருவதற்கு முன்பே தலைவலி மாத்திரையைச் சாப்பிடும் பழக்கம் இருக்கும்.

பிடரியில் (தலையில் பின்புறம்) வலி வந்தால் கழுத்தில் பிரச்சினை எனக் கொள்ள வேண்டுமா?

கழுத்தில் ஏழு எலும்புகள் உள்ளன. இதில் மேல் புறம் உள்ள முதல் மூன்று எலும்புகளுக்கும் தொடர்பு உண்டு. இந்த எலும்புகளில் பிரச்சினை ஏற்படும் நிலையில் தலையின் பின்புறம் வலி ஏற்படும். இந்நிலையில் கழுத்தைத் திருப்புவதும் சிரமமாக இருக்கும். எக்ஸ்ரே உட்பட பரிசோதனைகள் செய்துகொண்டு சிகிச்சை பெறுவது அவசியம். ஏனெனில் ஒற்றைத் தலைவலி காரண-மாகவும் பிடரியில் வலி ஏற்பட வாய்ப்பு உண்டு.

தலைவலி சிகிச்சையில் முக்கியமாகக் கருத்தில்



கொள்ளப்படுவது என்ன?

ஒருவருக்கு எவ்வளவு கால இடைவெளி விட்டு தலைவலி வருகிறது என்பதைப் பொறுத்து சிகிச்சை தேவையா என்பது தீர்மானிக்கப்படுகிறது. ஒரு சிலருக்கு ஒரு மாதத்துக்கு ஒரு முறை தலைவலி வரலாம். ஒரு சிலருக்கு மூன்று நாளுக்கு ஒரு முறை மூன்று மணி நேரம் தலைவலி வந்து போகலாம். ஒரு சிலருக்கு ஆறு மாதத்துக்கு ஒரு முறை தலைவலி வரலாம். ஒரு சிலருக்கு தினந்தோறும் தலைவலி வரலாம். ஒரு சிலருக்கு தொடர்ந்து மூன்று அல்லது நான்கு நாள்களுக்குத் தலைவலி இருக்கலாம்.

எப்போதாவது ஒரு முறை வரும் தலைவலிக்குச் சிகிச்சை தேவை இல்லை. பசி, நேரம் கழித்துச் சாப்பிடுதல், போதிய தூக்கம் இல்லாமை உட்பட பொதுவான தலைவலிகளுக்கு அவற்றுக்கு உரிய காரணங்களை நோயாளிகள் தாங்களாக தவிர்த்துவிடுவதே எளிய சிகிச்சையாகும். குறிப்பாக அதிக அலைச்சலால் ஏற்படும் தலைவலிக்கு ஓய்வு எடுத்தாலே சரியாகிவிடும். ஆனால் ஒற்றைத் தலைவலி உட்பட அடிக்கடி வரும் தலைவலிக்கு மருத்துவப் பரிசோதனை செய்து உரிய காரணத்தைக் கண்டுபிடித்துச் சிகிச்சை அளிப்பது அவசியம்.

சிகிச்சை தேவையா என்பதைக் கண்டறிவது எப்படி?

பாரம்பரியத் தன்மை உட்பட நோய் குறித்து நோயாளி கூறுவதை (Patient History) முதலில் கேட்க வேண்டும். பின்னர் நோயாளியின் இரத்த அழுத்தத்தைப் பரிசோதிப்பது அவசியம். இதையடுத்து மூளையின் அதிக அழுத்தம் இருந்தால் வெளிப்படுத்தக்கூடிய 'ஆப்தல்மஸ்கோப்' கருவி மூலம் கண்களைப் பரிசோதனை செய்ய வேண்டும். இப்பரிசோதனையில் மூளைக்குச் செல்லும் பார்வை நரம்பு வீக்கம் அடைந்திருந்தால் (Papill-oedema) தெரிந்துவிடும். இதனால் மூளையில் அழுத்தம் அதிகமாக இருக்கும். இதுபோன்ற நிலையில் மேற்கொண்டு சி.டி. ஸ்கேன், எம். ஆர்.ஐ. ஸ்கேன் போன்ற மருத்துவப் பரிசோதனைகள் செய்ய வேண்டியிருக்கும்.

தலைவலிக்கான நிவாரண மருந்துகளை நெற்றியில் தடவிக் கொள்வது நல்லதா?

தவறில்லை. எப்போதாவது வரும் தலைவலிக்கு இந்த நிவாரண மருந்துகள் பலன் அளிக்கக் கூடியவை. இதே போன்று துணி கைக்குட்டையால் தலை-யை இறுகக் கட்டிக் கொள்வதிலும் தவறில்லை. துணியால் கட்டும் போது இரத்தக் குழாய்கள் விரி-வடையாமல் தடுக்கப்பட்டு நிவாரணம் கிடைக்கிறது. ஒற்றைத் தலைவலி ஏற்படும் நிலையிலும் இது போன்ற நிவாரண நடவடிக்கைகளை மேற் கொள்ளலாம்.

அடிக்கடி தலைவலி வரும் நிலையில் காரணத் தைக் கண்டறிந்து, வராமல் தடுப்பதற்குச் சிகிச்சைசெய்து கொள்வது அவசியம். அடிக்கடி தலைவலி வரும் நிலையில் தடுப்புக்கு மட்டுமே மாத்திரைகள் உதவும். அப்போது வலியிலிருந்து நிவாரணம் பெறுவதற்கு மேலே சொன்ன கை வைத்திய முறைகள் பலன் அளிக்கும். (முற்றும்)

நன்றி-இணையம்

# 70 திருப்பங்கள் நிறைந்த பூலான்தேவியின் வாழ்க்கை வரலாறு



எல்லோருக்கும் – அவள் பயங்கரக் கொள்ளைக்காரி, படு பயங்கரக் கொலைகாரி என்று தான் தெரியும். அவள் அதுவும் ஒரு பெண் – ஏன் அப்படி மாறினாள் என்று எத்தனை பேருக்குத் தெரியும்? பூ ஒன்று புயலான கதை. ஏற்கனவே முரசில் புரட்டப்பட்ட இப்பக்கங்கள், வாசகர்களின் வேண்டுகோளுக்கிணங்க மீண்டும் புரட்டப்படுகின்றன.

"வேறு யார் முடிவு செய்ய வேண்டும்?" என்று கேட்டார் பூல்சிங்.

சட்டென்று மல்லா சொன்ன பதில் பூல்சிங்கை ஆடச்செய்துவிட்டது.

"நான் முடிவு செய்ய வேண்டும்! ஏனென்றால் நான் அவள் கணவன்!" என்றான் மல்லா.

பூல்சிங் முகத்தைப் பார்க்கும் தைரியம் இல்லாமல் நான் குனிந்தபடியே நின்றேன். அங்கே சில நொடிகள் அமைதி நிலவியது. பூல்சிங் என்னையும் எதிர்பார்க்கவில்லை.

அங்கு நிலவிய அமைதி என்னை வதைத்தது. எப்போதடா உள்ளே ஓடிப்போகலாம் என்று தவிப்பாக இருந்தது.

மல்லாதான் அந்த அமைதியைக் கலைத்தான்.

"இந்தாருங்கள் உங்கள் பணம், இதில் முப்பதாயிரம் ரூபாய் இருக்கிறது. நீங்கள் பூலானுக்காக கட்டிய பிணைப் பணம்!" என்றான் மல்லா.

எனக்கு நெஞ்சுக்குள் பால் வார்த்தது போல இருந்தது. மல்லாவை நினைக்க நினைக்க பிரமிப்பாக இருந்தது.

சே... என் மல்லாவைப் போய் இப்படியெல்லாம் நினைத்துவிட்டேனே! கவலையாக இருந்தது.

"எனது பணம் இருபத்தையாயிரம்." என்றார் பூல்சிங். மல்லா மீதிப் பணத்தை வாங்க மறுத்துவிட்டார்.

பூல்சிங் புறப்பட முன்னர் என் அருகே வந்தார். நான் நிமிர்ந்து பார்க்கவில்லை. காலடியை வைத்து வைத்து அவர் என்னருகே வந்து நின்றதைப் புரிந்துகொண்டேன்.

என் தலையை ஆதரவாகத் தொட்டு மென்மையான குரலில்,

"அம்மா பூலான். நீ என் மகள் மாதிரி! நல்லாயிரு அம்மா! உனக்கு அந்த துர்க்கையம்மா ஒரு குறையும் வைக்கமாட்டாள்! எப்போதாவது முடிந்தால் இந்தக் கிழவனை வந்து பாரம்மா. நான் வாரேன் அம்மா! நல்லாயிரு! நல்லாயிரு!" அவர் குரல் நடுங்கியது.

அதற்குமேலும் என்னால் கட்டுப்படுத்த முடியவில்லை. அவர்மேல் அப்படியே சரிந்துவிழுந்து அழுதேன். காலில் விழுந்து வணங்கினேன். என்



"இந்தாருங்கள் உங்கள் பணம், இதில் முப்பதாயிரம் ரூபாய் இருக்கிறது. நீங்கள் பூலானுக்காக கட்டிய பிணைப் பணம்!" என்றான் மல்லா. எனக்கு நெஞ்சுக்குள் பால் வார்த்தது போல இருந்தது. மல்லாவை நினைக்க நினைக்க பிரமிப்பாக இருந்தது.
"எனது பணம் இருபத்தையாயிரம்." என்றார் பூல்சிங். மல்லா மீதிப் பணத்தை வாங்க மறுத்துவிட்டார்.

கண்ணீர் அவர் கால்களில் பட்டது. என் நன்றிக்காக என் கண்ணீரால் அவர் கால்களை கழுவிவிட்டேன் என்று திருப்தி ஏற்பட்டது.

பூல்சிங் விடைபெற்றார். மறுபடியும் அவரைச் சந்திக்க முடியாமல் போகலாம் என்ற நினைப்பினால் அழுகை அழுகையாக வந்தது.

மிருகங்கள் மத்தியில் நான் கண்ட மனிதத் தெய்வம் அவர்.

அதோ...அதோ...அந்த மனித தெய்வம் போகிறது. போய்க்கொண்டே இருக்கிறது. என் பார்வையில் இருந்து மறையும் வரை கண்களில் திரையிட்ட நீருடன் நின்று பார்த்துக்கொண்டே இருந்தேன்.

இரவுவரை யாருடனும் எதுவும் பேசவில்லை. மல்லாவும் என்னிடம் எதுவும் பேசவரவில்லை. இரவாகியும் வெகு நேரத்தின் பின் தான் மல்லா உள்ளே வந்தான். வந்ததும் "ஏன் சாப்பிடவில்லை?" என்றுதான் கேட்டான்.

"பசிக்கவில்லை!" என்றேன்.

"சாப்பாடு மீது கோபத்தைக்காட்டாதே! என்மீது கோபம் என்றால் திட்டிவிடு! சாப்பிட்டுவிட்டுத் திட்டு. யாரை வேண்டுமானாலும் வருத்தலாம். ஆனால் வயிற்றை மட்டும் வருத்தக் கூடாது!" என்றான்.

நான் பேசாமல் இருந்தேன். அவனே என் சாப்பாட்டுத் தட்டை எடுத்துக்கொண்டு என் முன்பாக அமர்ந்தான்.

"எனக்கு பேய்ப் பசி. வயிறு பயங்கரமாக கோபிக்கிறது!" என்று சொல்லிக்கொண்டே சப்பாத்தியைப் பிய்த்துக் கறியில் தொட்டு என் வாயருகே நீட்டினான்.

அவன் செய்ததைப் பார்க்க எனக்குச் சிரிப்பாக இருந்தது.

"உங்களுக்குத்தானே பசி? எனக்கில்லை!" என்றேன் அலட்சியமாக.

மறுகையால் என் கழுத்தைப் பிடித்துத் திருகினான். "சாப்பிடடி கழுதை" என்றான்.

நான் வாயைத் திறந்தேன். குழந்தைக்கு ஊட்டிவிடுவது போல சப்பாத்தியை எனக்கு ஊட்டிவிட்டபடி தானும் சாப்பிட்டான்.

கைகழுவிக்கொண்டு வந்தபோது பின்பக்கம் இருந்து என்னைக் கட்டியணைத்துக்கொண்டான்.

நான் திமிறிக்கொண்டு மல்லாவின் பிடியில் இருந்து விடுபட்டேன்.

மல்லாவின் சட்டைக் கொலரை என் கையால் பற்றி என்னை நோக்கி இழுத்தேன்.

மல்லாவின் கன்னம் இரண்டிலும் வெறி பிடித்தவள் போல மாறிமாறி அடித்தேன்.

மல்லா தடுக்கவில்லை. மல்லா கோபப்படவில்லை. மல்லா வருத்தப்படவில்லை.

அப்படியே சிலைபோல நின்றான். என் கண்களையே பார்த்தபடி நின்றான்.

"ஏன் ஏமாற்றினான்? என்னை ஏன் ஏமாற்றினாய்?" என்று கத்தினேன்.

"சும்மா ஒரு நாடகம்!" என்றான் கண்களால் சிரித்தபடி.

(திருப்பங்கள் தொடரும்...)

## சீயானுக்கு பிடித்த நாயகி

சீயான் விக்ரம் அண்மையில், சென்னையிலுள்ள எத்திராஜ் மகளிர் கல்லூரியில் நடைபெற்ற கலைவிழாவிற்கு, சிறப்பு விருந்தினராக சென்றிருந்தார். அங்கே கூடியிருந்த கல்லூரி மாணவிகள் சிலர் அவரிடம் சில சுவாரசியமான கேள்விகளை கேட்டனர். அதற்கு விக்ரம் பளிச் சென்று பதில் அளித்தார்.

சீயான்னா என்ன அர்த்தம்?

பெருசு, தலன்னு அர்த்தம்

பிடித்த கதாநாயக, நாயகிகள்..?

பிடித்த கதாநாயகர்கள் ஷாருக்கான், சல்மான் கான். கதாநாயகிகளின் லிஸ்ட் ரொம்ப பெரிசு. ஒவ்வொரு படத்துக்கு தகுந்த மாதிரி மாறும். இப்ப ரெண்டு வருஷத்துக்கு அனுஷ்காவேதான். எப்பவும் பிடிச்ச கதாநாயகி சாராதான். (தெய்வத்திருமகள் படத்தில் நடித்த குழந்தை நட்சத்திரம்தான் சாரா)

வெற்றியின் இரகசியம்?

எங்கேயும், எதற்கும் விழுந்து விடாமல் இருப்பது!



## தவிக்கிறார் நடிகை!

காதலன் பெயரை முதுகில் பச்சை குத்திய நடிகை திவ்யா இப்போது காதலில் முறிவு ஏற்பட்டுள்ளதால் பச்சையை அழிக்க முடியாமல் தவித்துக் கொண்டிருக்கிறாராம். இவர் வெளிநாட்டு தொழில் அதிபர் ஒருவரை காதலித்து வந்தார். காதல் விஷயத்தில் இந்த ஜோடி இரகசியம் காத்து வந்தது. சமீபத்தில் பெங்களூரில் நடந்த நட்சத்திர கிரிக்கெட் போட்டியில் ஜோடியாக வந்த போது இரகசியம் அம்பலமானது.

தனது காதலரின் பெயரை நடிகை திவ்யா தன் முதுகில் பச்சை குத்தியிருப்பதுடன். ரமேஷை என் காதலராக பெற்றது இறைவன் கொடுத்த வரம் என்று ட்விட்டரில் கூறியிருந்தார். இந்நிலையில் சமீப காலமாக இந்தக் காதலில் பிரச்சினை முளைத்திருப்பதாகக் கூறப்படுகிறது. முன்பெல்லாம் திவ்யாவை அடிக்கடி தொடர்பு கொள்ளும் ரமேஷ் இப்போதெல்லாம் பேசுவதே இல்லையாம். இதனால் கோபமடைந்த திவ்யா முதுகில் குத்திய பச்சையை அழிக்க முடியாமல் தவித்துக் கொண்டிருக்கிறாராம்.

## மனதை

அண்மையில் ந
வெளிவந்திருக்கு
திட்டம் குறித்தும்
ஜீவாவுடன் நான்
படத்தில் எனது
ஏற்காதது. அடக்
அதனால் நடனக்
இல்லாமல் இய
அமைக்கப்பட்டிரு
படங்களில் எனக்
கொடுத்திருக்கிற
பிடித்திருந்ததால்
அது எவ்வளவு
கவலைப்படுவதி
சினிமாவில் ஒரு
விரும்புகிறேன்.
தனது கதாபாத்தி
காட்டப்படுகிறது
தொடங்கிவிட்டா
உருவாக்க முடிய
சிறந்த படத்தை
என்றார்.



## மார்பழகு மட்டுந்தான் கவர்ச்சியா?: ஆதங்கப்படும் இலியானா

இலியானாவிடம் கவர்ச்சியைப் பற்றி கேட்டால் சீறி விழுகிறாராம் இதற்கென தனியே தத்துவம் ஒன்றை உதிர்க்கிறாராம். அப்படி என்னதான் தத்துவம், அதை அவர் உதிர்க்கிறார் என்பதை அவருடைய பதிலில் கொள்ளலாம். இனி அவருடைய கவர்ச்சித் தத்துவ மட்டுமே 'செக்ஸி' என்று நினைத்தால் அது தப்பான கண்களிலும், வாளிப்பான உடல் அழகிலும்தான் உ வசீகரமும் இருக்கிறது." என்கிறார் இலியானா. ஏன் இவர் உதிர்க்கிறார் என்று புரிந்துகொண்டீர்களா..?

## வருகிறார் செக்ஸ் தொழிலாளி ரீ

இட் ஸ்ரீகாந்தா என்ற வங்க மொழிப் படத்தில்தான் ரீமா விலைமாதுவாக நடித்திருக்கிறார். இப்படத்தின் கதைப்ப வறுமையின் காரணமாக பெற்றோர்களால் விலைக்கு விற்கப்பட்டு, ஒரு ஜமீன்தாரால் தாசிப் பட்டம் சுமக்கிறார் அதன்பிறகு அவள் விலைமாதுவாக மாற்றப்பட்டு, பணத்திற்காக பல ஆண்களுடன் உறவு வைத்துக் கொள்வதுபோல் கதை சொல்லப்பட்டு இருக்கிறது. இப்படத்தினை 'இளவரசி' என்ற பெயரில் தமிழில் மொழிமாற்றம் செய்திருக்கிறார்கள். வரும் செப்டெம்பர் 9 முதல் திரைக்கு வர இருக்கிறது.



# ... திறக்கிறார் ஸ்ரேயா

நடிகை ஸ்ரேயா நடிப்பில்
...கும் ரௌத்திரம் பற்றியும், இவரது
...ம் இவர் கூறியதாவது,
...ன் நடித்த ரௌத்திரம்
... வேடம் இதுவரை
...க்கி வாசிக்கும் வேடம்.
...க்காட்சிகளில்கூட மிகை
...பல்பான அசைவுகளாக
...ருந்தது. பொதுவாகவே
...க்கு எவ்வளவு முக்கியத்துவம்
...றார்கள் என்று பார்ப்பதில்லை.
...ல் நடிக்க ஒப்புக்கொள்கிறேன்.
... சிறிய பாத்திரம் என்றாலும்
...தில்லை.
...ந அங்கமாக இருக்க
... ஒவ்வொருவரும்
...திரம், படத்தில் எப்படி
... என்று கணக்கு பார்க்கத்
...ால் யாராலும் நல்ல படத்தை
...யாது. கூட்டுமுயற்சியால்தான்
... திரையில் காட்டமுடியும்.




# இந்தியில் இயக்குநர் அவதாரம்

தமிழ் திரையுலகில் நடிகராகவும், இயக்குனராகவும் இருப்பவர் அக்ஷன் கிங் அர்ஜுன். இவர் தற்போது பிற இயக்குனர்களின் படங்களில் நடித்து வந்தாலும், அவ்வப்போது தானே படங்களை இயக்கி நடிக்கவும் செய்கிறார். தற்போது ஓம், மெய்க்காண், வனயுத்தம், காட்டுப்புலி ஆகிய படங்களில் நடித்து வருகிறார். விரைவில் இவர் இந்தியில் இயக்குனராக அறிமுகமாக இருக்கிறார். அக்ஷன் படமாக உருவாக இருக்கும் அப்படத்திற்கான திரைக்கதை எழுதும் வேலையை முடிக்கும் தறுவாயில் இருக்கிறாராம் அர்ஜுன்.




# உற்சாகப்படுத்தும் கரண்

அறிமுக இயக்குனர் பாலு நாராயணனின் "சூரன்" படத்தில் நாயகன் கரண், இவருடன் நகைசுவை வேடத்தில் "அயன்" ஜெகன், "விகடகவி" சதீஷ் ஆகியோரும் முக்கிய வேடங்களில் நடித்துள்ளார்கள். நகைசுவை வேடங்களில் நடிக்கும் இருவருக்கும் இந்த படம் நிச்சயம் நல்ல திருப்பம்தரும். ஜெகன், சதீஷ் இரண்டு பேரும் நன்றாக சூரனில் நடித்துள்ளார்கள். நான் நாயகன் பாத்திரத்தில் நடித்தாலும் மற்ற நடிகர்கள் மெனக்கெட்டு நடிப்பதை பார்த்துள்ளேன். அவர்களின் கஷ்டத்தை புரிந்துள்ளேன். அவர்களின் கதாப்பாத்திரம் ரசிகர்கள் மத்தியில் பேசப்படும் போது அவர்கள் கஷ்டப்பட்டு நடித்ததுக்கு நல்ல பலன் கிடைத்திருப்பதை எண்ணி நான் மகிழ்ச்சியடைவேன் என்கிறார் சூரன் பட நாயகன் கரண்.

# மயிரிழையில் உயிர் தப்பினார் மம்முட்டி!

'வெனிஸில் வியாபாரி' என்ற படத்தில் நடித்து வருகிறார் மம்முட்டி. இப்படத்தின் படப்பிடிப்பு ஆலப்புழையில் நடந்து வருகிறது. இதில் கலந்து கொண்டுவிட்டு தனது வீட்டுக்குக் கிளம்பினார் மம்முட்டி. எர்ணாகுளத்தில் அவரது கார் போய்க் கொண்டிருந்தபோது அரூர் கோவில் சந்திப்புப் பகுதியில் கார்மீது பின்னால் வந்த தனியார் பேருந்து பலத்த சப்தத்துடன் மோதியது. இதில் காரின் பின்பகுதி நொறுங்கிப் போனது. இதைப் பார்த்த பொதுமக்கள் வேகமாக காரை நோக்கி ஓடி வந்தனர். உள்ளே பார்த்தபோது அங்கு மம்முட்டி சிக்கிக் கொண்டிருந்தது தெரியவந்து அதிர்ந்தனர். உடனடியாக மம்முட்டியை பத்திரமாக வெளியே கொண்டு வந்தனர். அதிர்ஷ்டவசமாக மம்முட்டிக்கு காயம் ஏதும் ஏற்படவில்லை.

...றயும்
...த எதற்குத்தான்
...் இருந்தே நீங்கள் ஊகித்துக்
...ம். "மார்பழகு இருந்தால்
...ன எண்ணம். ஒரு பெண்ணின்
...ண்மையான கவர்ச்சியும்
... இந்த மார்பழகு தத்துவத்தை

## ...ரீமா சென்

... சென்
...டி
...ர்.





# காதலில் சொதப்புவது எப்படி?

சின்னத்திரையில் 'நாளைய இயக்குனர்' நிகழ்ச்சியில் ஒளிப்பரப்பான 'காதலில் சொதப்புவது எப்படி?' என்ற படைப்பிற்காக பலரின் பாராட்டை பெற்றவர் பாலாஜி. இவர் கொலிவூட்டில் படம் பண்ண களமிறங்கியுள்ளார். நூற்றெண்பது படத்தில் நாயகனாக நடித்த சித்தார்த், மைனா புகழ் அமலா பால் இருவரும் இணைந்து நடிக்க உள்ள புதுப்படத்தை இயக்கி கொலிவூட்டில் இயக்குனராக அறிமுகமாகிறார் என்கிறது பட வட்டாரம்.

தனுஷ் உடன் இணைந்து '3' படத்தில் நடிப்பதாக இருந்த அமலா பாலும், நாயகன் சித்தார்த்தும் முதன் முதலாக "காதலில் சொதப்புவது எப்படி" என்ற படத்தின் மூலமாக இணைகிறார்கள். தமிழ் சினிமாவின் பிரபல பட நிறுவனம் தயாரிக்கும் இப்படத்தில் இசையமைப்பாளர் தமன் மற்றும் பலர் பணியாற்றுகின்றனர் என்று கூறியுள்ளார்கள்.



# தேன் கிண்ணம்



## தாங்க முடியாத சிகரம்

சின்னச் சின்ன ஆசைகளை
சிந்தாமல் சிதறாமல் ஓடவிட
சிந்தனையின் ஓடத்தில்
சிகரமாக மாறியது என் மனதில்.

பார்த்தவுடனே அவளைத் தொடர
பார்வைகள் எதிரெதிரே சந்திக்க
பழகிய முகம்தானே என்று-என்
பார்வையில் வைத்தேன் முகச் சிகரத்தை.

பார்த்தது பார்த்ததுதான் என்று
படபட என இதயம் பதற
பக்குவமாய் வார்த்தை சொல்ல முடியாது
பயந்தவனாய் பரிதவித்து நின்றேன்.

பின் தொடர சற்றுத் தயக்கம்தான்-ஆனால்
பின்வாங்கிய நிலையில் சற்று முன்னேற
பின்பு அவள் தன் இன்முகத்தைக் காட்ட
பின்னடிக்காமல் முன்னேறினேன் அவளின்
சிகரத்தால்

தாய்க்குப் பின்பு தாரம்தானே -என்று
தயக்கமின்றி பின் செல்ல
தயங்காமல் தன் முடிவைச் சொல்ல
தலைமேல் விழுந்தது தாங்க முடியாத சிகரம்.

அரட்டை அடித்துச் சிரித்து
புரட்டிப் புத்தகம் படித்து
பெண்களின் பியூட்டிக்கு
ஆண்களே டியூட்டியாய்ச் போச்சு.

ஜெயம் கிறிஸ்துராசா,
வவுனியா

## மனிதமற்ற என் மங்கையிற்காய்...

நீ வருவாய் என...
பார்த்திருந்த என் விழிகளில்
நீர்தான் வந்தது
நீ வரவில்லை...

விழிகள் விழித்திருந்து
விதியை நொந்தது
நீ இங்கு வராததால்...

அழுகின்ற என் குரலுக்கு
ஓசை இல்லை
அதனால் யாருக்கும்
என்நிலை தெரியவில்லை
ஏன் உனக்கும்
புரியவில்லை...
எனக்கு மட்டுமே நீ
என்பது புரிந்தும்
என் மனதுக்கு
என்னால் உரைக்க முழயவில்லை
அது என்னைக் கொல்கிறது.

உன்னைத் தினம்
எண்ணி எண்ணி
என் உயிரே
கரைகிறது
கண்ணீரில்...

உயிருக்கு உறுதி கூறும் மனமே...
கொலை வால்
ஏந்தியதால்...
என்னுயிர்
இறந்து கொண்டிருக்கின்றது...

மகே மேனன்

## இன்றைய காலத்தின் நாயகி

பெண்ணே!
நீ, அச்சம், மடம், நாணம்
என்னும் சட்டத்தினுள்
அடங்கிய சாயப்படம் அல்ல
வீட்டில் மாட்டி வைப்பதற்கு.

கட்டங்கள் போட்டு
வரையப்பட்ட கோலம் அல்ல
நிலத்தில் விதைபடவும்,
காலில் மிதிபடவும்...

பட்டங்கள் பெற்று, பதவிகள் பெற்று
பலராலும் போற்றப்பட வேண்டியவள்
பறை சாற்றப்பட வேண்டியவள்.

படி தாண்டாதவள் தான்
பத்தினி அல்ல.
படி தாண்டி பாண்டியன் சபையில்
நியாயம் கேட்டதினால் தான்
கண்ணகி பத்தினியானாள்
பலராலும் போற்றப்பட்டாள்
சபை ஏற்றப்பட்டாள்.


அவள் அன்றைய காப்பிய
நாயகி என்றால்
நீ இன்றைய காலத்தின் நாயகி.

இ.ஆனந்தன்-தும்பளை.

## குழப்பமான வாழ்க்கை

**வாழ்க்கையில்** இரகசியம் என்று எதுவும் கிடையாது, ஆண்டவன் உலகில் இரகசியம் என்று எதையும் வைக்கவில்லை. ஆனாலும் இந்த வாழ்க்கையை நம்மால் புரிந்து கொள்ள முடிகிறதா?

வாழ்க்கையின் ஆரம்பத்தில் நாம் அனைவரும் கற்றுக்கொண்ட பாடம் நல்லவனாக இருக்க வேண்டும், நல்ல செயலை செய்ய வேண்டும், நல்ல பேரை வாங்க வேண்டும் என்ற நல்ல விஷயங்களையே கற்றுக் கொள்கிறோம். நாம் படிக்கும் நீதி கதைகளெல்லாம், நீ நல்லதை செய்தால் நல்லது விளையும், தீயதை செய்தால் தீமை விளையும் என்ற நல்ல நீதியைத்தான் போதித்தது. ஆனால் நாம் செய்யும் நன்மைகளுக்கெல்லாம் நன்மைகளே விளைகிறதா, நல்லதை செய்து மாட்டிக்கொண்டும், தீயதை செய்து தப்பித்துக்கொண்டதுமான சந்தர்ப்பங்களையும் நாம் சந்திக்கிறோம். பூமி சுற்றுகின்றது, இரவு - பகல் ஏற்படுகின்றது, சூரியன் கிழக்கே உதித்து மேற்கே மறைகின்றது, உதிக்கும் போது பகலாகிறது, மறையும் போது இரவாகிறது. இப்படி தினமும் குழப்பமில்லாமல் செம்மையாக நடக்கும் நிகழ்வுகளை நம்மால் புரிந்து கொள்ளமுடிகிறது. அதுவே ஒரு நாள் மேற்கிலும், மறுநாள் வடக்கிலும், சில நாள் தெற்கிலும் சூரியன் உதிக்குமானால் அதை புரிந்து கொள்ள முடியாது. ஏனென்றால் அதில் ஒரு செம்மை இருக்காது. அப்படிப்பட்ட செம்மையில்லாத புதிராகவே இந்த வாழ்க்கையும் இருக்கிறது நாம் ஒரு நன்மை செய்யும் போது பதிலுக்கு ஒரு நன்மை நடப்பதையும், தீமை செய்யும் போது அதன் பதிலுக்கு ஒரு தீமை நடப்பதையும் வரிசை வரிசையாக நாம் கண்டடைகிறோமென்றால்



அதில் ஒரு செம்மை இருக்கும். அதை நம்மால் புரிந்துகொள்ள முடியும். ஆனால் ஏன் அப்படி நடக்கவில்லை, நிஜவாழ்க்கை ஏன் புதிராக இருக்கிறது. ஒருவன் வறுமையாக இருக்கிறான், ஒருவன் வசதியாக இருக்கிறான், ஒருவன் முடமாக இருக்கிறான், ஒருவன் பார்வையற்று இருக்கிறான். ஏன் இந்த வேற்றுமை! ஏன் இந்த பாரபட்சம்! ஏன் இவைகளை புரிந்து கொள்ள முடியவில்லை! வாழ்க்கை ஏன் புதிராக இருக்கிறது!

நாம் நினைப்பது போல வாழ்க்கை ஒரு புதிரும் இல்லை, சிக்கலும் இல்லை பல பாகுபாடுகளும், ஏற்ற இறக்கங்களும், நுழைந்து போக முடியாமல் முட்டி நிற்கும் சிக்கல்களும் இருக்கும் போதுதான் வாழ்க்கை, வாழ்க்கை என்ற அமைப்பை பெறுகிறது அதை புரிந்து கொள்வது மிகவும் சுலபமானது. வாழ்க்கையின் எஜமானாக வாழும் போது தான் அதன் திரைகள் விலக்கப்பட்டு மறைவுகள் அம்பலமாகும்.

நல்லதோ, கெட்டதோ கடவுளுடைய கணக்கு எப்போதும் இனிமையாகவே இருக்கிறது என்பதை மனதின் உச்சத்திலிருந்து ஒரு தலைவனைப் போல நினைத்துப் பாருங்கள். அங்கே பல புதிர்களுக்கு விடை கிடைக்கும். அவ்வாறில்லாமல் வாழ்க்கையின் வேலைக்காரனைப் போல அடி பணிந்து நடக்கும் நாள் வரையிலும் வாழ்க்கை புதிராகவே இருக்கும்.

நம் புத்திக்கு எட்டாத விஷயங்கள் உலகில் பல இருக்கின்றது. அதை புரிந்து கொள்ள ஒரு தனி மனிதனால் இயலாதென்றாலும் உலகிலுள்ள தனித்தனி திறமைகள் கொண்ட எல்லோருமே இந்த உலகத்தை புரிந்து கொண்டுதான் இருக்கிறார்கள், அதில் சில விடயங்களை அனுபவங்களாக மட்டுமே உணரமுடியும். அப்படிப்பட்ட அனுபவங்களையெல்லாம் விளக்க முடியாது. விளக்கங்களையெல்லாம் அனுபவிக்க முடியாது வாழ்க்கையை சூட்சுமமாக இயக்குங்கள்.

## சாலையோர சாஜகான்

பூவுக்கே
வாசம் கொடுப்பவள் நீ
என் இதயத்துக்கு
எப்போது
சுவாசம் கொடுப்பாய்...

சாஜகானின்
சாலையோரம்-உன்
திசைகளை விழிகளில்
ஏந்தியபடி...
காத்துக் கிடக்கின்றேன்
வருவாயா...?

நீ வராத
ஒவ்வொரு கணமும்-என்
மனது சிதையாகின்றது
உன் மௌனங்களால்...

என் இறக்கைகளை
இழந்து விட்டேன்
பெண்ணே-உன்
இரக்கமற்ற தன்மையினால்.

நான் வளர்த்த -என்
காதல் செடி
இன்று கன்னத்தில்
தாடியாகப் பூக்கிறதே...
என்ன விந்தை இது.

வருவாயா...?
விடை தருவாயா...?
அந்த நயகராவை தான்
கேட்க வேண்டும்
நயவஞ்சகமான - உன்
உள்ளத்தைப் பற்றி.

சா.ரமேஸ்குமார்,
மீசாலை கிழக்கு.

## முரண்பாடுகளின் மொத்தமாய் நீ!

எரிந்து எரியும்
தீப்பொறி போல
என்னுள்
நுழைந்து நொருங்குகின்றன
உன் ஞாபகக் கண்ணாடிகள்

ஏனென்று
கூட்டிக் கழித்துப் பார்த்தாலும்
கழித்துப் பெருக்கிப் பார்த்தாலும்
விடைகாணுவதாயில்லை மனசு.

சில புன்னகைகளின்
சங்கமங்களை
தேடி தேடி சேமித்து
திரிகிறது
இதயம்.

விதிகளும்
விதிவிலக்குகளும்
ஒன்றையொன்று போர்
செய்துகொண்டு
பயணிக்கிறது
உன் நினைவுச்சுவடுகளின்
பின்னோடு.
கறுப்பு இரவுகளின்
சில நூல்
இடைவெளிகளில்
மின்னல் கோடுகளாய்

புன்னகைக்கும்
உன்முகம்
நினைவு திரும்புமுன்
மறைந்தும் போகும்
மின்னல் மாதிரியே
உடன்பாடுகளின்
எதிர்மறை தொகுப்பில்
உன் பெயர்தான்
முதல் வரி
தொடங்கி
முற்றும் வரை
ஆயின்
முரண்பாடுகளின் மொத்தமென்று
விழிக்கலாமா
உன்னை...???

பெனாசிர் காதர்
கொழும்பு-13

# காசநோய் பற்றிய விழிப்புணர்வு



சமூக ஒன்றிணைப்பினை ஏற்படுத்தி விழிப்பு நடவடிக்கைகளை மேற்கொள்ளலாம். நோய் அறிகுறி உடையவர்களை மருத்துவ பரிசோதனைக்கு வழிகாட்டலாம்.

**காசநோய்க் கட்டுப்பாட்டில் பொது நிறுவனங்களின் பங்களிப்பு**

01.நோயாளர்களுக்கு உணவுப் பொருட்களை அன்பளிப்புச் செய்யலாம்.

02.நோயாளர்களின் போக்குவரத்திற்கு உதவலாம்.

03.இரண்டு கிழமைகளிற்கு மேல் இருமல் காணப்படின் சளிப்பரிசோதனை செய்வதற்குத் தனிப்பட்ட நுணுக்குக்காட்டி நிலையங்களை உருவாக்கலாம்.

**காசநோய்க் கட்டுப்பாட்டில் கிராமத்தில் தேவைப்படும் தலைமைத்துவப் பண்புகள்**

குறித்த இலக்கினை வைத்துச் செயற்படல் வேண்டும். உதாரணமாக குறித்த கிராமத்தில் காசநோயினை இல்லாது செய்தல் என்ற நோக்கில் செயற்படல் வேண்டும்.

இதற்குரிய ஒழுங்கமைப்புக்களாக விழிப்புணர்வு நடவடிக்கைகள்.

Dr.சி.ஜமுனானந்தா

சளிப்பரிசோதனை, மருத்துவ ஆலோசனை, மருந்து வழங்கல், மருந்தினைக் கைவிட்டவர்களைக் கண்டறிதல் எனத் திட்டமிட்டுச் செய்யக்கூடியவற்றைச் செய்யலாம்.

இதற்காக தனிப்பட்ட நலனிற்கும் சமூக நலனிற்கும் இணைக்கப்பாடு களை ஏற்படுத்தி ஒத்துழைப்பினைப் பெறல் வேண்டும். குறிப்பாக பல காசநோயாளிகள் கசிப்புச் குடிப்பவர்களாக உள்ளனர். எனவே கிராமங்களில் உள்ள பெரியவர்கள், இளைஞர்கள் இதற்கு ஒத்துழைப்பு நல்கலாம். காசநோயினைக் கட்டுப்படுத்துவதில் கசிப்புப் பாவனை யாளரிடம் விழிப்புணர்வு செய்து சளிப்பரிசோதனை செய்வது மிகவும் இன்றியமையாதது.

கிராமமட்டத்தில் காசநோய்க்கட்டுப் பாட்டில் ஈடுபடுபவர்கள் நோய் அறிகுறி அடையவர்களை நெறிப்படுத்துபவர்களாகவும் சிகிச்சையினை ஊக்கப்படுத்துபவர் களாகவும் விளங்கல் வேண்டும். இவர்கள் சுகாதார சேவைக்கும் நோயாளிக்கும் இடையே இணைப்பினை ஏற்படுத்தக் கூடியவர்களாக திகழ்தல் வேண்டும். மேலும் சுகாதார சேவையினரிற்கு உதவியாகவும் ஒத்துழைப்பவர்களாகவும் இருத்தல் வேண்டும். கிராமமட்டத்தில் காச நோயினை கட்டுப்படுத்த அதாவது காசநோய் இல்லாத சூழலை ஏற்படுத்த நடைமுறைப்படுத்த வேண்டியவற்றை அறிந்திருத்தல் வேண்டும்.

முதலில் தீர்மானிக்க வேண்டும். "எமது கிராமத்தில் காசநோய் பரவு வதைக் கட்டுப்படுத்துவோம். அல்லது எமது கிராமத்தில் காசநோயினை இல்லாது செய்வோம். அல்லது எமது கிராமத்தில் காசநோயாளிகளுக்கு உதவிபுரிவோம் என்று அடுத்து அதற்குரிய திட்டங்களைத் தயாரித்தல் வேண்டும். அதன் பின் ஆரம்பநிலை யில் சிலவற்றினை அமுல்படுத்தல் வேண்டும். உதாரணமாக இரண்டு கிழமைகளிற்கு மேல் இருமல் இருப்பின் சளிப்பரிசோதனைக்கு வழிகாட்டல், இறுதியாக முழுமை யாக அமுல்படுத்தல். உதாரணமாக கிராமத்தில் காசநோய் பரவக்கூடிய காசநோயாளராக இருக்கக் கூடிய கசிப்பு உற்பத்தியினையே இல்லாது செய்தல்.

**இவற்றிற்காக கிராமிய காசநோய்க் கட்டுப்பாட்டாளரிடம் இருக்க வேண்டிய பண்புகள்**

01.சிறந்த முகாமைத்துவம். அவர்களது செயற்பாடுகள் முன்னேற்றத்திற்கு உதவக் கூடியதாக அமைதல் வேண்டும்.

02.சிறந்த தலைமைத்துவம் காசநோய்க்கட்டுப்பாட்டில் பிரயோ சனமாக அமைதல் வேண்டும்.

03.தனிப்பட்ட வல்லமை. கிராமத்தில் காசநோய்த் தாக்கத்தினை வெளிப் படுத்தும் முறை பின்னூட்டலைப் பெறல், காசநோயாளர்கள் எதிர்கொள்ளும் பிரச்சினைகளை புரிந்து கொள்ளல்.

04.தமது பாத்திரத்தினைச் சரியாகச் செய்தல்.

05.தொடர்பாடல் திறமை, தொடர்பாடல் வழிமுறைகளை அறிந்து கருத்துக்களைக் கூறல். தொடர்பாடலுக்குத் தடையாக உள்ளவற்றை அறிதல், கூட்டாகக் கலந்துரையாடல், ஒன்றுபட்டுச் செயற்படல், நாடகங்கள் மூலம் செய்தியினைக் கூறல்.

06.ஒன்றுபட்டு ஒற்றுமையாகச் செயற்படல். குழுக்களினை அல்லது குறித்த இளைஞர் யுவதிகளை அணியாகச் சேர்த்து காசநோய்க் கட்டுப்பாட்டில் உதவுதல்.

07.சமூகத்தில் ஏனையவர்களது பங்களிப்பினையும் பெறல். இவற்றின் மூலம் காசநோய் அறி- குறி உடையவர்கள் கண்டறியப்பட்டு சிகிச்சை அளிக்கப்படும் சூழலை உருவாக்குதல் வேண்டும். காசநோய் நலன் பேணலில் அடிப்படை உரி மைகள் பேணப்பட உதவுதல்.

08.காசநோய் சிகிச்சைக்கான தேவை யினை உருவாக்கலாம்.

09.காசநோயாளர்கள் மருந்து எடுத்தலை இடையில் நிறுத்துதலைத் தவிர்க்கலாம்.

10.மக்கள் காசநோய் சிகிச்சைக்குச் செல்வதற்கு உதவுதல்.

11.உதவி வழங்கும் நிறுவனங்களில் இருந்து உதவியினைப் பெற்றுக்கொடுக்கலாம்.

12.கிராம பொதுநிகழ்வுகளில் காச நோய் பற்றிய விழிப்புணர்வுகளையும் உள்ளடக்கல்.

**காசநோய்க் கட்டுப்பாட்டில் நேர முகாமைத்துவம்**

இரண்டு கிழமைகளிற்கு மேல் இருமல் இருப்பின் சளிப்பரிசோதனை இரண்டு தடவைகளாவது செய்தல். இதில் நோய அறிகுறி உடையவர்கள் நேரமுகாமைத்துவத்தினைக் கடைப்பிடித்தால் உடனே நோயினைக் கண்டறியக்கூடியதாகவும் கட்டுப்படுத்தக் கூடியதாகவும் அமையும்.


(தொடரும்...)

# கண்ணதாசனின்

## அர்த்தமுள்ள இந்துமதம்

பாகம் - ௭

184



சனற்குமார் சிரித்தார்.

"நாரதரே! நீர் கற்றுக்கொண்ட வித்தைகள் எல்லாம் பெயரளவில் வித்தைகளே. அவற்றைவிடப் பெரிய விடயங்கள் சில உண்டு. அவற்றின் மூலமே ஆத்மாவை அறிய முடியும்" என்றார் அவர்.

"எவையெவை பெரியவை" என்று கேட்டார் நாரதர்.

"நீ சொன்ன பெயர்களை எல்லாம் விட வாக்குப் பெரியது. அந்த வாக்கைவிட மனது பெரியது. எப்படி ஒரு கைப்பிடிக்குள் இரண்டு நெல்லிக்காயோ, இலந்தைப் பழமோ அடங்கிவிடுகிறதோ, அப்படியே பெயரும் வாக்கும் மனதுக்குள் அடங்கிவிடும் மனத்தால் நினைத்த பின்தானே நீ சொல்லுகிறாய் செயலில் இறங்குகிறாய். அந்த மனதுதான் ஆர்மா. அந்த மனது தான் உலகம். அந்த மனதுதான் பிரமமம். ஆகையால் மனதை நேசிப்பாயாக. அதேநேரத்தில் இன்னொன்று, சங்கற்பம் செய்யத் தொடங்குகிறானோ, அப்போது யோசிக்கத் தொடங்குகிறான். அது மனது. உடனே பேச ஆரம்பிக்கிறான். அது வாக்கு. அந்த வாக்கு, பெயர் வடிவமாகிறது. அதில் மந்திரங்கள் ஒடுங்கிவிடுகின்றன. மந்திரங்களில் கருமங்கள் ஓங்கிவிடுகின்றன. அதே நேரத்தில் சங்கற்பத்தைக் காட்டிலும் தியானம் பெரியது. பூமி தியானம் செய்கிறது. வானம் தியானம் செய்கிறது. மலைகள் தியானம் செய்கின்றன. ஆகை யால் பெருமைக்குரிய மனிதர்கள் தியான பலத்தில் ஒரு அம்சத்தையாவது பெற்றிருக்கிறார்கள். அற்பர்களுக்கும் கலகக்காரர்களுக்கும் அது வாய்ப்பில்லை.

"தியானத்தை விடவும் பெரியது எது என்று கேட்கிறாயா? விஞ்ஞானம் பெரியது. ஆத்ம பலம் தானத்தைக் காட்டிலும் பெரியது. விஞ்ஞானம் என்பது அனுபவ விஞ்ஞானம்.

ஆத்ம பலம் படைத்த யோகி நூறு விஞ்ஞானவான்களை ஆட்டி வைக்கமுடியும்.

ஒருவன் பலமுள்ளவனாக இருந்தால் அவன் படுக்கையில் கிடக்கமாட்டான். எழுவான், நடப்பான், சேவை செய்வான்."

நாரதருக்கும் சனற்குமாரருக்கும் நடந்த இந்த விவாதத்தில் ஆத்ம பலமே பொதுவாகப் பேசப்படுகிறது.

ஆத்ம பலம் என்பது என்ன?

தன்னை உணர்தல்.

"நானே பிரம்மம்! நானே ஈஸ்வரன்" என்ற நிலையை எய்துதல்.

கடமைகளை ஒழுங்காகச் செய்தவன் மூலம் ஆத்மா பலம் பெறுகிறது.

ஒரு கதை உண்டு.

ஒரு நதியில் வெள்ளம் வந்து, பாலத்தின் இரண்டு பக்கங்களையும் அடித்துக்கொண்டு போய்விட்டது. பாலத்தின் நடுவே ஒரு குடும்பம் நின்று தத்தளித்துக்கொண்டிருந்தது. அதைப் பார்த்துப் பரிதாபப்பட்ட ஒரு பணக்காரர், ஒரு ஓடக்காரனைக் கூப்பிட்டு அவர்களைக் காப்பாற்றும்படியும் நூறு ரூபாய் தருவதாகவும் சொன்னார். ஓடக்காரன் அவர்களைக் காப்பாற்றினான். நூறு ரூபாய் எடுத்து அவர் கொடுத்தார் அவன் 'இது என் கடமை' என்று கூறிப் பணத்தை வாங்காமல் மறுத்துவிட்டேன்.

இந்தப் பலன் கருதாத கருமமே 'கடமை' என்பது.

இதைக் கருமம் என்பதைவிடத் 'தர்மம்' என்பது பொருந்தும்.

இத்தயை தர்மம் தலைமாட்டில் நின்று காப்பாற்றும்.

'நான் லண்டனுக்குப் போனேன். நான் பாரிஸுக்குப் போனேன். அனுபவித்தேன்" என்ற அகங்காரம் கடைசிக் காலத்தில் எந்த உதவியையும் செய்யாது.

முதலில் இந்த 'நான்' தன்மையை வென்றவர்கள்தான் பெரிய யோகிகளாக மாறுகிறார்கள்.

அந்த யோகிகளிடம் இறைவனே வந்து உனக்கு என்ன வேண்டும் என்று கேட்டால், "பொன்னைக்கொடு, பொருளைக்கொடு" என்று கேட்க மாட்டார்கள்; "என்னையே எனக்குக் கொடு' என்றுதான் கேட்பார்கள்.

-இப்படி தன்னை உணர்ந்து கொண்டுவிட்ட மனிதன் மரணத்தில் இருந்து விடுதலை பெற்றுவிடுவான்.

'அவன் செத்துவிட்டான்' என்று சொன்னால் 'அவன் உடம்புதான் செத்துவிட்டது, ஆத்மா சாகவில்லை' என்பது பொருள்.

'என்னையே எனக்குக்கொடு' எனும் தத்துவத்தில் ஆன்மாவே உணரப்படுகிறது. அதற்குள் இருக்கும் ஈஸ்வரன் அறியப்படுகிறான்.

துயரங்கள் தோன்றாமல், சிரித்துக்கொண்டே அவன் மரணமடைந்துவிடுகின்றான். அதாவது அவன் உடம்பு அழிந்துவிடுகிறது.

இந்த ஆன்ம யோகத்தை மிக ஆழமாக நமது சித்தர்களும், முனிவர்களும், ரிஷிகளும் சிந்தித்தார்கள்.

இமயமலையில் குடி புகுந்தவன் மாத்திரை வாங்குவதற்காக டாக்டரைப் பார்த்ததுண்டா?

ஆன்மாவை உணர்ந்துகொண்டவன் பிறரிடம் கேட்டுத் தெரிந்துகொள்ள என்ன இருக்கிறது?

அவனுக்குச் சொல்வதற்குத்தான் பிறரிடம் என்ன இருக்கிறது?

சக்திக்கும் சிவனுக்கும் நாரதர் ஒரு மாம்பழத்தை அளித்தார்.

சக்தி தேவிக்கு அதை மூத்த மகனுக்கு அளிக்க வேண்டும் என்ற ஆசை.

சிவபிரானுக்கோ இளைய மகனுக்குத் தரவேண்டும் என்று விருப்பம்.

பிள்ளைகள் போட்டியே, பெற்றோர்கள் போட்டியாகிவிட்டது.

"சரி, எதற்கு வம்பு? உலகத்தை யார் முதலில் சுற்றி வருகிறார்களோ அவர்களுக்கே இந்த மாங்கனி!" என்று கூறிவிட்டார் சிவன்.

முருகனிடம் மயில் இருக்கிறது. கணபதியிடம் மூஞ்சூறுதானே இருக்கிறது!

மயில் மீது ஏறி முருகப் பெருமான் உலகை வலம் வரத் தொடங்கினார்.

தாய்-தகப்பனை மூன்று முறை சுற்றினார்; கையை நீட்டினார் விநா யகப் பெருமான். மாங்கனி அவருக்குப் போய்விட்டது.

இது கதை!

'உலகத்தைவிட மிகப்பெரியவர்கள் தாயும் தகப்பனுமே' என்ற தத்துவத்தை இந்துக்கள் எவ்வளவு அழகாகச் சொல்லிவிட்டார்கள்!

மகாலட்சுமிக்குச் சுயம்பரம்.

சாதாரண லட்சுமிக்குத் திருமணம் என்றாலே, ஊர் எவ்வளவு அல்லோலகல்லோலப்படுகிறது?

பத்திரிகைகளில் எல்லாம் அந்தச் செய்திதானே வருகிறது.

மகாலட்சுமிக்கே சுயம்வரம் என்றால் ஏழு உலகங்களும், தேவாதி தேவர்களும் திரளக்கூடும் இல்லையா?"

முப்பத்து முக்கோடி தேவர்களும் கழுத்தை நீட்டினார்கள்.


ஆனால் மகாலட்சுமி ஒரு நிபந்தனை வைத்தாள்.


தொடரும்...

# யோகானுக்கு அடித்த யோகம்

IAAF உலக சாம்பியன் போட்டிகள் தென்கொரியாவின் டேகு நகரில் நடைபெற்று நிறைவடைந்துள்ளன. இதில் ஆரம்பத்திலேயே ஒரு நிறைவான நிகழ்வு. மகளிர் மரதன் ஓட்டப்போட்டியில் முதல் மூன்று இடங்களைப் பெற்ற நாடு கென்யா. இது எல்லோருக்கும் மகிழ்வானதொரு பதி-வாக அமைந்தது. இதேவேளை தொடர்ந்து வந்த அடுத்தடுத்த நாட்களில் அதிர்ச்சியும் ஏற்பட்டது. அதுவும் வேகமான மனிதன் யாரென்பதைத் தீர்மானிக்கும் ஆண்களுக்கான 100 மீற்றர் ஓட்டப் பந்தயத்தில் அது நடைபெற்றது. எதுவித சந்தேகமும் இல்லாமல் ஜமெய்க்கா நாட்டின் உசைன் போல்ட் இந்த நிகழ்வில் வெற்றிபெறுவார் என்று எதிர்பார்க்கப்பட்டது. இது தவறிவிடவும் சந்தர்ப்பம் இல்லை. ஆனால் தவறியது. காரணம் ஓட்டத்தை ஆரம்பித்தவேளை அவசரப்பட்டமை என்ற தவறால் உசைன் போல்ட் 100 மீற்றர் ஓட்டத்தில் இருந்து தகுதி நீக்கம் செய்யப்பட்டார். இதனால் நிச்சயமான தங்கத்தை அவர் இழக்க, அவரது நாட்டையே சேர்ந்த யொகான் பிளேக் 9.92 செக்கன்களில் ஓடித் தங்கத்தை வென்றதுடன் அடுத்த நிமிடமே பிரபல்ய மனிதரும் ஆகிவிட்டார். யொகான் தேசிய இளையோர் 100 மீற்றர் ஓட்டத்தில் சாதனையைத் தன்னகத்தே கொண்டிருப்பவர். அதோடு 100 மீற்றர் ஓட்டத்தினைப் பத்துச் செக்கனுக்குள் ஓடி முடிப்பது என்ற சாதனையைத் தன் பத்தொன்பதாவது வயதில் நிகழ்த்திக் காட்டியவர். தற்போது இவருக்கு வயது இருபத்தியிரண்டு மட்டுமே. அதோடு ஜமெய்க்காவின் உசைன் போல்ட், டானியல் பெய்லி என்பவர்களுடன் இணைந்து பயிற்சிபெறும் அளவிற்கு தகுதி நிறைந்தவர். உண்மையைக் கூறுவதாயின் உசைன் போல்ட்டின் தவறு, யொகான் பிளேக் தங்கம் வெல்லக் காரணமாயிற்று.

ஆனாலும், யொகான் லேசுப்பட்டவர் அல்ல. ஜமெய்க்கா தீவின் அதிவேகமான 100 மீற்றர் ஓட்ட வீரர்களில் நெஸ்டா கார்டர், அஸாபாபவல், உசைன் போல்ட் மூன்று ஜாம்பவான்களுடன் இவரும் ஒருவர் என்பது இவரின் சிறப்பு. இளையோர் தடகளப் போட்டிகளில் சர்வதேச ரீதியாகப் பல தங்கப் பதக்கங்களை இவர் வென்றவர் என்றாலும், மிகச் சிறுவயதினனான இவர் 2012 ஒலிம்பிக் போட்டிகளில் என்ன செய்யப்போகிறார் என்பதே இப்போதுள்ள கேள்வி. லண்டனிலும் உசைன் போல்ட்டுடன் போட்டியிட வேண்டும். ஆனால் என்ன இருந்தாலும் யொகானைவிட போல்ட் மிக வேகமான மனிதர்.





# சகலகலா வல்லவன்

இலங்கை அணியின் தற்போதைய பயிற்றுனர் றெமேஸ் ரட்நாயக்க திறமையானவர்தான். ஆனால் இவரை இடைக்கால தற்காலப் பயிற்றுனராகவே இலங்கை கிரிக்கெட் சபை நியமித்தது. இதேவேளை இலங்கை அணிக்கான நிரந்தரப் பயிற்றுனர் ஒருவரை இலங்கை கண்டுபிடித்துவிட்டது போலவே தெரிகிறது. இவரது தாயகம் தென்ஆபிரிக்கா. பெயர் கிரஹம் போர்ட். வயது ஐம்பதாகிறது. இவரை ஒரு சகல-கலா வல்லவன் என்று கூறுவது ஒன்றும் மிகையாக இருக்கப்போவதில்லை.



தென்னாபிரிக்காவின் நேட்டால் மாகாணப் பயிற்றுனராகக் கடமையாற்றியபோது, ஒரு சில வருடங்களிலேயே அதாவது 1996 இல் இந்த மாகாணத்தை ஒருநாள் மற்றும், முதல்தர கிரிக்கெட் சுற்றுப் போட்டிகளில் சம்பியன் கிண்ணம் பெறவைத்தார்.

1998இல் தென்னாபிரிக்க 'A' கிரிக்கெட் அணியின் பயிற்றுனராக இலங்கை வந்தார. 1999 இல் தென்னாபிரிக்க அணியின் பயிற்றுனராக பொப் வூல்மர் இருந்தபோது இவரே உதவிப் பயிற்றுனர். அதன்பின் இன்றுவரை இங்கிலாந்தின் கென்ட் அணியின் முக்கிய கிரிக்கெட் பணியில் நியமிக்கப்பட்டுள்ளார்.

ஒரு வேடிக்கை என்னவென்றால் எங்கள் நட்சத்திரம் சனத் ஜயசூரியா தென்னாபிரிக்க டொல்பின் கழக அணிக்காக விளையாடிய போது இவரே அந்தக் கழகத்தின் பயிற்றுனர். இதனால் தானோ என்னவோ கிரகம் போர்ட் இலங்கையின் பயிற்றுனராக வந்தால் மிகவிரைவில் உலகின் முதன்மை நிலைக்கு இலங்கையைக் கொண்டு வந்துவிடுவார் என்று சனத் பாராட்டியுள்ளார். அதோடு இளைஞர்களைப் புடம்போட்டு எடுப்பதில் கிரஹம் போர்ட் ஒரு வல்லுனர் என்றும கூறியுள்ளார். சனத் ஜயசூரியா ஒரு முறை சொன்னால் நூறு முறை சொன்னமாதிரி. அதோடு புதிய கிரிக்கெட் நிர்வாகமும் சரியான பாதை யில் செல்கிறது என்பது அவர்கள் வலை வீசிக் கண்டுபிடித்த திறமைசாலி கிரஹம் போர்ட் என்பதில் இருந்து தெரிகிறது.

இறுதியாக இவரை ஆரம்பத்திலேயே சகல-கலா வல்லவன் என்று குறிப்பிட்டிருந்தோம். இவர் தென்னாபிரிக்காவில் நேட்டால் மாகாணத்துக்காக முதல்தர கிரிக்கெட் ஆட்டங்களில் சில வருடங்கள் விளையாடியவர். மாகாணமட்டத்தின் ரென்னிஸ் போட்டிகளில் சம்பியன் கிண்ணம் வென்றார் மற்றும் நேட்டல் மாகாண உதைபந்தாட்ட அணியின் முக்கிய வீரராகத் திகழ்ந்தார். அதுமட்டுமல்ல அங்கீகரிக்கப்பட்டதொரு ரகர் விளையாட்டின் மத்தியஸ்தரும் ஆவார். இவரை சகலகலாவல்லவன் என்று சொல்லலாம், வேறென்ன சொல்வது.


இறுதியாக ஒரு செய்தி சில வருடங்களுக்கு முன் இந்திய அணி பயிற்றுனராக கிரெக் செப்பல் இருந்ததை அறிவோம். அந்தப் பதவி முதலில் இவருக்குத்தான் கிடைத்ததாம். ஆனால் சில காரணங்களால் இவர் மறுத்ததால் கிரெக் செப்பல் பதவியைப் பெற்றார். என்ன செய்வது அந்த காலம் களகூலிக்கு அட்டமத்திய சனி இருந்திருக்கும் போலத் தெரிகிறது.

## விளையாட்டு

ஜோசப் கிருஸ்ணா

# தரத்தில் தங்கம் தங்கம் தான்

IPL போட்டிகள் நடைபெற்றுக் கொண்டிருந்தவேளை, இலங்கைக்கு இங்கிலாந்துத் தொடர் குறுக்கிட கிரிக்கெட் நிர்வாகிகளுக்கும் இலங்கை வீரர்களுக்கும் இடையில் ஒரு தள்ளுமுள்ளு நடைபெற்றதை எல்லோரும் அறிவார்கள். அதிலும் லசித்மலிங்க மிகவும் பாதிக்கப்பட்டவர் என்பதும், அவர் மீது சேறு பூசப்பட்டது என்பதும் அதனால் அவர் மிகவும் மனம்நொந்து போனதென்பதும் பழைய விடயங்கள். அதோடு இலங்கை அணியில் இனிமேல் லசித்மாலிங்கவைக் காணமுடியுமோ என்ற சந்தேகமும் ஏற்பட்டது. ஆனால் அவுஸ்திரேலியாவிற்கு எதிரான போட்டியில் இவர் Hattrick சாதனை புரிய அதுவே உலக சாதனையாக மாற ஒரே லசித் புராணமாக இப்போது இருக்கிறது. அதோடு அவுஸ்திரேலியாவிற்கு எதிரான இரண்டாவது டெஸ்ட் போட்டியில் இவர் விளையாடுவது தொடர்பாகவும் பேச்சுவார்த்தைகள் நடப்பதாக இலங்கை கிரிக்கெட் அதிகாரிகள் கூறுகிறார்கள். இப்படித் திடீரென்று லசித் மலிங்க பிரகாசிக்க என்ன காரணம்.




ஒரு நாள் போட்டிகளில் 25 வீரர்கள் Hat trick சாதனை புரிந்திருக்கிறார்கள். அதிலும், இரண்டுமுறை இச்சாதனையைப் புரிந்தவர்கள் வசீம் அக்ரம், சக்லெய்ன், முஷ்டாக் மற்றும் சமிந்தவாஸ். ஆனால் லசித் எல்லோரையும் பின்தள்ளி மூன்று முறை ஒருநாள் போட்டிகளில் Hattrick பெற்ற ஒரே வீரர் என்ற பெருமையைப் பெற்றுவிட்டார்.



தென்ஆபிரிக்காவிற்கு எதிராக 2007 இல் முதல்முறை, அடுத்து கென்யாவிற்கு எதிராக 2011 இல் இரண்டாவது முறை மீண்டும் 2011 இல் அவுஸ்திரேலியாவிற்கு எதிராக மூன்றாவது முறை Hat-trick சாதனை புரிந்துள்ளார். அதுவும் கடந்த வாரம்தான் இச்சாதனையைப் புரிந்தார். இதுமட்டுமன்றி 4 பந்துகளில் 4 விக்கெட்டுக்கள் சரித்த ஒரே-யொரு வீரர் இவர் மட்டுமே என்ற பெருமைக்கும் உரியவர். எனவே என்னதான் புறஞ்சொன்னாலும் தன் நாடு என்று வரும்போது உயிரைக் கொடுத்து விளையாடி இருக்கிறார் என்று தயக்கமின்றி கூறலாம் அல்லவா.மேலும் 30 டெஸ்ட் போட்டிகளில் விளையாடியுள்ள இவர் 101 விக்கெட்டுக்களைத் தன்வசம் வைத்திருக்கிறார். அதோடு இவரது சிறந்த பந்துவீச்சுப் பெறு பேறு 50 ஓட்டங்களுக்கு ஐந்து விக்கெட்டுக்கள். மேலும் IPL ஆட்டங்களில் இவரது திறமை என்ன வென்பதை மும்பாய் இன்டியன் அணியினரைக் கேட்டால் தெரியும். எனவே எந்தத் தராசில் நிறுத்தாலும் லசித் நிறைந்த கனதியான தங்கம்தான். எனவே இலங்கைக்கான அவுஸ்திரேலியாவுடனான இரண்டாவது டெஸ்ட் போட்டியில் லசித் மலிங்க பிரகாசிக்க வாழ்த்துவோம்.

# ஊடகவியலாளர்களுடன் இணைந்து பிரதேச அபிவிருத்தி

# உலக வங்கி திட்டம்





**ஊடகவிலாளர்களுடன்** இணைந்து மட்டக்களப்பு மாநகர அபிவிருத்தியை மேற்கொள்ளத் திட்டமிடப்பட்டுள்ளது. மாநகரசபை அதிகாரிகள் உள்ளூ ராட்சி உறுப்பினர்கள் உள்ளிட்ட நிர்வாகம், சிவில் சமூகம் என்போருடன் ஊடகவியலாளர்களையும் இணைத்துக் கொண்டு மாநகரசபைப் பிரதேசத்தை அபிவிருத்தி செய்யும் பரீட்சார்த்த திட்டம் தொடக்கப்பட்டுள்ளது.

உலகவங்கியின் அனுசரணையுடன் மார்கா நிறுவனம் கிழக்குப் பல்கலைக் கழகத்துடன் இணைந்து மட்டக்களப்பு மாநகரசபை நிர்வாகத்துக்கு இந்தத் திட்டத்தை அறிமுகப்படுத்துகிறது.

வெளிப்பாட்டுத்தன்மையும், சகல தரப்பாரினதும் பங்குபற்றுதலும் பங்களிப்புடனுமே பிரதேசத்தின் நிலையான அபிவிருத்தியை மேற்கொள்ள முடியும் என்ற சமகாலத் தேவை உணரப்பட்டுள்ளதால் இந்த முயற்சி ஆரம்பிக்கப்பட்டுள்ளதாக இந்தத் திட்டத்தின் இணைப்பாளரும் கிழக்குப் பல்கலைக்கழக விரிவுரையாளருமான திரு.ஏ.அன்ரூ தெரிவித்தார்.

இது விடயமான கருத்தரங்கு மட்டக்களப்பு மாநகரசபையில் சமீபத்தில் இடம்பெற்றது. இதில் உலக வங்கிப் பிரதிநிதிகளான சந்தியா சல்காடோ, டிலினிகா பீரிஸ், மாநகரசபை பிரதி மேயர் ஜோர்ஜ் பிள்ளை, மாநகர-சபை கணக்காளர் திருமதி ஹெலன் சிவராஜா, உள்ளூராட்சி வளவியலாளர் பி.பீ. ஜயதிலக்க, வளவியலாளர் கலா நிதி எஸ்.ரகுராம் மற்றும் பிராந்திய ஊடகவியலாளர்கள், சிவில் சமூகப் பிரதி நிதிகள், மாநகரசபை அதிகாரிகள் ஆகி-யோர் கலந்து கொண்டனர்.

இந்தக் கருத்தரங்கில் கருத்துத் தெரிவித்த மார்கா நிறுவன நிறைவேற்று ஆளுநர் அசோகா குணவர்தன அவர்கள், "உள்ளூராட்சி மன்றங்கள் முதற்கொண்டு தேசிய ரீதியிலான வரவு செலவுத் திட்டங்கள் வரையில் ஒரு வெளிப்பாட்டுத் தன்மையைப் பேணுவதற்கும், மக்களின் பிரச்சினைகளை இந்த வரவு செலவுத் திட்டங்கள் உள்ளடக்குவதற்கும், மக்கள் தங்களது தேவைகளையும், பிரச்சினைகளையும் அபிவிருத்திகளையும் இந்த வரவுசெலவுத் திட்டங்களில் சமர்ப்பிப்பதற்கும் என்ன செய்யலாம் என்பது பற்றியதே இந்தப் பரீட்சார்த்த திட்டத்தின் நோக்கமாகும். வினைத்திற னுடைய, மக்கள் பங்களிப்புடனான வரவுசெலவுத் திட்டத்தை எவ்வாறு உருவாக்கலாம் என்பது பற்றிய இலக்கை நோக்கியதாகவே இந்தத் திட்டம் வடிவமைக்கப்பட்டுள்ளது.

பிரதேசத்தின் நிலைத்து நிற்கக்கூடிய அபிவிருத்தியை மேற்கொள்வதற்கு ஊடகவியலாளர்கள், சிவில் சமூகம், உள்ளூராட்சி நிர்வாகம் ஆகிய மூன்று பிரிவினரதும் பங்களிப்பு இன்றியமையாதது. இந்த மூன்று சாராரும் கூடுதல் பொறுப்புணர்வுடன் செயலாற்றினால் அபிவிருத்தியின் உச்சக்கட்டப் பயனையும் நல்லாட்சியையும் நிலைநிறுத்த முடியும் என்பதை உறுதிப்படுத்த முடியும் எனக் குறிப்பிட்டார்.

வருடாந்த வரவு செலவுத்திட்டத்தில் மக்களின் பிரச்சினைகளுக்கு எவ்வளவு முன்னுரிமை அளிக்கப்பட்டுள்ளது? மக்களின் பங்குபற்றுதலை உள்ளூராட்சி நிர்வாக வரவு செலவுத் திட்டத்தில் உள்ளடக்குவதற்கு என்ன முயற்சிகளைச் செய்யலாம்? என்ற விடயங்களை உள்ளடக்கியதாக குறித்த இலக்கை நோக்கிச் செல்வதற்குத் திட்டமிடப்பட்டுள்ளது.

இந்த பரீட்சார்த்த திட்டம் ஊடகங்களையும், உள்ளூராட்சி நிர்வாகத்தையும், சிவில் சமூகத்தையும் உள்ளடக்கிய மூன்று தளங்களி னூடாக அமுல்படுத்தப்படவிருக்கிறது. வினைத்திறனுடைய, மக்கள் பங்களிப்புடனான, வரவு செலவுத் திட்டத்தைத் தயாரித்தல் பற்றிய இலக்கை நோக்காகக் கொண்டு இந்தத் திட்டம் வடிவமைக்கப்பட்டுள்ளது.

உள்ளூராட்சிச் சபைகள் யாவும் மக்களோடு மிக நெருக்கமாக வேலை செய்யக்கூடிய அமைப்புக்கள் இதனைப் பாராட்டக்கூடியதாக இருந்தும் கூட, இன்னமும் இந்தப் பணிகளை அதிக வினைத்திறனுடனும், அதிக செயற்திறனுடனும் முன்னெடுப்பதற்கு எவ்வாறு நாட்டம் கொள்ளலாம் என்பது பற்றித்தான் இந்தத் திட்டம் கவனம் செலுத்தவிருக்கிறது.

இதற்காக இந்த மூன்று தளங்களும் மிகக் கூடுதல் பொறுப்புணர்வுடன் செயலாற்றினால் மக்களுக்கு அதிக மான நன்மைகளை அளிக்க முடியும் என்பது திட்டத்தின் எதிர்பார்ப்பு. அதற்காக மக்களின் தேவைகளை கூடுதல் சிரத்தையுடன் இந்த வரவு செலவுத் திட்டங்களுக்குள் உள்வாங்கிக் கொள்வதற்கு இந்த மூன்று தளங்களுமே கலந்துரையாடல்களைச் செய்வதற்கும் விழிப்புணர்வை மேற்கொள்வதற்கும் இந்தத் திட்டம் ஆவலாக உள்ளது.

குறிப்பாக ஊடகங்களைப் பொறுத்தளவில் ஏற்கெனவே அவை நிர்வாகப் பகுதியினர் செய்து வருகின்ற பணிகளை உற்றுநோக்கிக் கண்காணித்து செய்திகளையும் விமர்சனங்களையும் வெளியிட்டு வந்தாலும் கூட, அதற்கும் மேலதிக மாக தங்களுக்குரிய பொறுப்புணர்வுடன் மக்களது பிரச்சினைகளை உள்ளூ ராட்சி நிர்வாகத்திற்கு எடுத்துச் செல்வதற்கும் உள்ளூராட்சி நிர்வாகம் என்ன செய்கின்றது என்பதை மக்களிடம் ஒப்புவிப்பதற்கும் கூடுதல் செயலாற்றலுடன் பணியாற்ற வேண்டும் என்பதையும் இந்தத் திட்டம் கருத்தில் கொண்டுள்ளது.

அதே போல சிவில் சமூகமும் தங்களது பிரச்சினைகளையும் தேவைகளையும் எவ்வாறு உள்ளூராட்சி நிர்வாகத்திற்கு எடுத்துச் செல்லலாம் என்பதையும் அந்தப் பிரச்சினைகளுக்கான தீர்வை எடுப்பதற்கு வரவு செலவுத் திட்டங்கள் மூலம் என்ன வழிவகைகளைக் கண்டு கொள்ளலாம் என்பதையும், அவை எவ்வாறு உள் வாங்கப் படலாம் என்பதையும், சிவில் சமூகம் எவ்வாறு செயற் திறனுடையதா-கப் பணியாற்றலாம் என்பது பற்றியும் இந்தத் திட்டம் கருத்திற் கொண்டுள்ளது.

இந்த ஊடகங்க ளும், சிவில் சமூகமும், உள்ளூராட்சி நிர்வாகம் ஆகிய இந்த மூன்று பகுதியாரும் தனித்தனியே இயங்காமல் ஒன்றுக்கொன்று துணை யாக இயங்கினால் அபிவிருத்தியில் எவ்வாறு ஒரு இணைப்புப் பொறி-முறையை மேற்கொள்ளலாம் என்பது பற்றியும் கிட்டத்தட்ட ஒருவருடத்திற்குள் இந்தத் திட்டத்தின் தகவல் ஆவணங்களைத் தயாரிக்கவும் ஒன்றின் தகவலை மற்றவர்கள் பரிமாறிக் கொள்ளக்கூடியதாக மூன்று தளங்களில் விழிப்புணர்வை ஏற்படுத்தவும் அது சம்பந்தமான கலந்துரையாடல்களைத் தொடர்ந்து நடாத்திக் கொண்டிருக்கவும் திட்டமிடப்பட்டிருக்கிறது.

இதனூடாக உள்ளூ ராட்சி வரவுசெலவுத் திட்டங்கள் கூடுதல் புரிந்துணர்வுடனனும் வெளிப்படைத்தன்மையுடனும் உள்ளூராட்சி மன்றங்களாகிலும் தேசிய மட்டத்திலாகிலும் அதன்மூலம் மக்கள் எவ்வாறு ஆதாயமடைவார்கள் மக்களது பிரச்சினைகளுக்கு எவ்வளவு முக்கியத்துவம் கிடைக்கும், கூடுதலாக இவற்றையெல்லாம் வரவு செலவுத் திட்டங்கள் உள்வாங்க வேண்டும் என்ற இலக்கு நிர்ணயிக்கப்பட்டுள்ளது.

"ஊடகங்கள், சிவில் சமூகம், மற்றும் உள்ளூராட்சி நிர்வாகம் ஆகியோருக்கிடையில் வரவு செலவுத் திட்டம் பற்றிய வெளிப்பாட்டுத் தன்மையினையும் அதன் இயலளவினை யும் கட்டியெழுப்பும் ஒரு பரீட்சார்த்த செயற்திட்டம்தான் இன்று ஒரு பயிற்சிப் பட்டறையாக துவக்கி வைக்கப்பட்டுள் ளது" என்று தனது துவக்க உரையில் குறிப்பிட்டார் மட்டக்களப்பு மாநகர-சபைக் கணக்காளர் திருமதி ஹெலன் சிவராஜா.

**ஏ.எச்.ஏ.ஹுசைன்**

மாநகர சபையின் வருமானம் மக்களிடமிருந்து கிடைக்கும் வரிப்பணத்திலும் ஏனைய நிறுவனங்களிடமிருந்து மூலதனச் செலவுகளுக்காகக் கிடைக்கும் நிதிகளிலும்தான் தங்கியிருக்கின்றது. மக்களிடமிருந்து கிடைக்கும் வரிப்பணத்தைக் கொண்டுதான் கூடுதலான அபிவிருத்திகள் மேற்கொள்ளப்படுகின்றன.

மக்களிடமிருந்து நூறு வீதம் வரிப்பணம் கிடைக்கும் என்ற எதிர்பார்ப்பிலேயே இந்த வரவு செலவுத்திட்டம் தயாரிக்கப் படுகின்றது. ஆயினும், அந்த எதிர்பார்ப்புக்கு மாற்றமாக மக்களிடமிருந்து ஐம்பது வீதம் தான் வரிப்பணமாகக் கிடைக்கின்றது. ஆனால் திட்டமிட்ட செலவுகளை எப்படியேனும் நாம் நிறைவேற்ற வேண்டியிருக்கின்றது. சோலை வரி, கடைகளிலிருந்து கிடைக்கும் வாடகை இந்த இரண்டும்தான் மக்களிடமிருந்து கிடைக்கக்கூடியவை. மக்களிடமிருந்து வரி முழுமையாகக் கிடைக்காமைக்கான காரணம் வரவு செலவுத்திட்டம் சம்பந்தமான வெளிப்பாட்டுத்தன்மை இல்லாமையே ஆகும்.

வரவு செலவுத் திட்டத்தை பொது நிர்வாகம், சுகாதார சேவை, பௌதீகத் திட்டமிடல், பொதுப்பயன்பாட்டுச்சேவை, நலன்புரி என 5 பகுதிகளாக வகுத்து அதற்குள்ளே நாம் செலவுகளை மேற்கொண்டு வருகின்றோம்.

மாநகர சபையின் வேலைத்திட்டங்கள் குறித்த காலப்பகுதிக்குள் நிறைவேற்றப்பட வேண்டும். எமக்கு ஊடகங்களினூ டாக சிவில் சமூகத்தின் ஒத்துழைப்புக் கிடைக்குமாயின் வெற்றிகரமான, வெளிப்படையான ஒரு வரவு செலவுத் திட்டத்தையும் பிரதேசத்தில் நீடித்த அபிவிருத்தியையும் மேற்கொள்ள முடியும் என்பது வருடாவருடம் பல சிரமங்களுக்கும் நெருக்கடிகளுக்கும் மத்தியில் வரவு செலவுத்திட்டத்தை தயாரிப்பதில் ஈடுபடும் மாநகரசபைக் கணக்காளர் திருமதி ஹெலன் சிவராஜாவின் கருத்தாகும்.




ஸ்ரீ ராம ஜெயம்

**உண்மை சேவைக்கு ஒரு எடுத்துக்காட்டாக எமது நிறுவனங்களின் அரசாங்கத்தால் பதிவு செய்யப்பட்ட இலக்கங்கள்**

- எமது வரையறுக்கப்பட்ட கம்பனிப் பதிவு இலக்கம் P.V 8189
- ஸ்ரீ துர்க்கா தேவி ஆலய பதிவு இலக்கம் HA/6/CBO/99
- இந்து பிரீரஸ்ட் பதிவு இலக்கம் HA/4/2/IC/285
- மலையாள மாந்திரிக (CERTIFICATE) பதிவு இலக்கம் W/A 40262
- விளம்பரம் செய்வதற்கான அனுமதி பதிவு இலக்கம் W/A 38324
- அகில இலங்கை சமாதான நீதவான்

எனக்குக் கிடைத்த கௌரவப் பட்டங்கள்: ஜோதிட ஆராய்ச்சி மையம். பங்களாதேஷ் சோதிட தத்துவ ஞானி, தேச பந்து, பேராசிரியர், கலாநிதி.

காதல் கைகூட. கணவன் -மனைவி பிணக்குத் தீர. பிரிந்தவர் ஒன்று சேர. கல்விஞான கவசம் பெற. கடன் தொல்லை தீர. குபேர வாழ்வு பெற. குடிபோதையிலிருந்து விலக. அந்நியோர் உதவிகிட்ட. திடீர் திருமணம் கைகூட. வெளிநாட்டு பிரயாண தடை நீங்க. வெளிநாட்டவருக்கு விஷேட வசிய அச்சரங்கள் பெற. தெட்டத் தெளிவான ஜாதக குறிப்பு கணிக்க.

**இது 48 வருடகாலம் சேவை செய்யும் நிறுவனம்!**

**MALAYALA MANTHIRIKAM**

**UCHADA PEEDAM**

No.23,Mayfield Road, Kotahena-Colombo 13. Tel:0112342463
நுவரெலியா கிளை-No. 33, Daily Fair Complex 052-2222508

C/922




அவரிடம் இருப்பது மிகவும் சக்திவாய்ந்த டிரான்ஸ்மிட்டர். எனவே நாம் அவர் மூலம் தகவல்களை அறிய முடியும்."

"இருக்கட்டும். அதை நாம் மிகவும் தந்திரமாகச் செய்ய வேண்டும். இப்போது அவர், புஷ்பராஜைத் தனது அறைக்கு அழைத்தால், கப்பலில் கங்காபிரசாத்தின் ஆட்கள் சந்தேகப்படலாம்."

"அதுவும் சரிதான்!" கபூர் ஒப்புக்கொண்டார்.

தனது அறைக்குள் வந்த புஷ்பராஜ் மேற்கொண்டு என்ன செய்வது என்பது பற்றி யோசித்தார்.

கடிகாரத்தைப் பார்த்தார். மணி இரண்டு. கட்டிலில் படுத்த புஷ்பராஜ் அப்படியே கண்மூடி உறக்கத்தில் ஆழ்ந்தார்.

கதவைத் தட்டியது கேட்டுக் கண்விழித்தார் புஷ்பராஜ்.

கதவைத் திறந்தபோது ஸெலீனா தேநீர் எதிரே நின்றிருந்தாள்.

"குட்மோர்னிங்"குடன் தேநீர் வழங்கினாள். பதிலுக்கு அவரும் குட்மோர்னிங் கூறினார்.

"நன்றாகத் தூங்கினீர்களா இல்லையா? அசௌகரியங்கள் ஏதாவது?"

"இல்லை. இந்த அசௌகரியங்களே போது மானவை!"

"சிற்றுண்டிக்கு டைனிங் ஹோலுக்கு வருகிறீர்களா அல்லது இங்கு எடுத்துவரவா?" ஸெலீனா கேட்டாள்.

சாப்பாட்டு அறையில் சாப்பிடுவது மட்டுமல்ல, முடிந்த வரை அவர்களுக்கு மத்தியில் முகம்காட்ட வேண்டாம் என்று புஷ்பராஜ் தீர்மானித்தார். ஏதாவது ஒரு சந்தர்ப்பத்தில் தனது வேடத்தை அவர்கள் புரிந்துகொள்ளலாம். அது ஆபத்தை வலிய வரவழைப்பது போலாகி விடும் என்று அவர் நினைத்ததே அதற்குக் காரணம்.

சற்று நேரத்துக்குப் பிறகு சிற்றுண்டியுடன் வந்தாள்.

"ஸெலீனா... நல்ல பெயர்தான்!"

"உங்களுக்குப் பிடித்திருந்தால் அந்தப் பெயரிலேயே என்னை அழைக்கலாம்." அவள் பேசினாள்.

"ஸெலீனா, நீங்கள் இந்தக் கப்பலில் எவ்வளவு நாட்களாக வேலை செய்கிறீர்கள்?" சாப்பிட்டவாறே புஷ்பராஜ் கேட்டார்.

"அதெல்லாம் இங்கு தேவையில்லாத விடயம். நாம் வேறு எதைப்பற்றியாவது பேசலாமே!" அவள் வெடுக்கென்று பேசினாள்.

"நான் அப்படி நினைக்கவில்லை. நாம் எங்கே போகிறோம் என்று தெரியவில்லை. இங்கு எவரும் எதையும் வாய்திறந்து பேசுவதில்லை. இதுதான் சூழ்நிலை என்று தெரிந்திருந்தால், நான் இந்த வேலையையே ஒப்புக்கொண்டிருக்கமாட்டேன்!" புஷ்பராஜ் நெற்றியைச் சுளித்தபடி பேசினார்.

"என்ன செய்வது? கரைப்பகுதி என்றால் ஏதாவது வழி தேடலாம். இந்த நடுக்கடலில் நம்மால் என்ன செய்ய முடியும்?" அவள் இயலாமையுடன் பதிலளித்தாள்.

அந்தக் கப்பல் பயணம் அவளுக்கும் விருப்பம் இல்லாத ஒன்று என்பது விளங்கியத. எனவே, முயன்றால் இவளைத் தன்பக்கம் திருப்பலாம் என்று புஷ்பராஜ் ஒரு தீர்மானத்துக்கு வந்தார்.

மதியச் சாப்பாட்டுக்குப் பிறகு புஷ்பராஜ் சற்றுநேரம் ஓய்வு எடுத்தார்.

இரண்டு மணிக்கு ஒரு தடவை புஷ்பராஜ், டிக்சனின் அறைக்குச் சென்றார்.

இவர்கள் இருவரும் பேசிக்கொண்டிருந்தபோது டிக்சனின் கடிகாரம் 'பீப்...பீப்' என்று குரல் கொடுத்தது.

டிக்சன் தனது கடிகாரத்தைக் காதருகே கொண்டு சென்றார்.

டிக்சன் கடிகாரத்தின் சில பட்டன்களை அழுத்தியபின் கேட்டார்."யார் டயானாதானே இது!"

"ஆமாம்... நான்தான் இப்போது நீங்கள் எங்கு இருக்கிறீர்கள்?"

"தெரியவில்லை. கப்பல் ஓடிக்கொண்டிருப்பது மட்டும் தெரிகிறது."

"சரி... விசாரிக்கிறோம்." என்ற டயானா டிரான்ஸ்மீட்டரை அணைத்தாள்.

"புதுத் தகவல் ஏதாவது மாத்யூ கேட்டார்.

"இல்லை.. அதே நிலைமைதான்!"

என்ன ஒரு சிக்கலான நிலைமை இது. ஒரு கப்பலில் அவர் பயணம் செய்கிறார். அது எந்தக் கப்பல், எந்தத் திசையில் பயணம் செய்கிறது? யாரெல்லாம் அவருடன் இருக்கிறார்கள்?" என்று எதுவுமே தெரியவில்லை.

கூடவே மற்றொரு செய்தியும் அவர்களது படபடப்பை அதிகப் படுத்தியது. "வெடிபொருட்கள் நிறைந்த கப்பல் ஒன்று அரபிக்கடல் பகுதியில் பயணம் செய்து கொண்டிருக்கிறது!" என்ற பத்திரிகைச் செய்திதான் அது. ஒருவேளை அந்தக் கப்பலில் டிக்சன் சிறை வைக்கப்பட்டிருப்பாரோ?

அப்படி ஏதாவது நடந்திருந்தால் டிக்சனுடன் புஷ்பராஜின் உயிருக்கும் ஆபத்துக் காத்திருக்கி றது. உடனடியாக இதற்குப் பரிகாரம் காண முடியாவிட்டால் எல்லாமே தாறுமாறாகிவிடும்.

அப்போது அந்தக் கப்பல் அரபிக் கடலில் மேற்கு நோக்கி விரைவாகப் பயணம் செய்துகொண்டிருந்தது. நேரம் இரவு எட்டுமணி. ஆகாயத்தில் நட்சத்திரங்கள் தெளிவாகத் தெரிந்தன. கிழக்குத் திசையில் நிலா, கடலின் அரைவட்டப் பரப்பில் தலையுயர்த்தி எழும்பியது. சன்னமான அலைகளில் தங்கத்தை வார்த்து ஊற்றிவிட்டிருப்பது போல் கடல் நீர் ஆங்காங்கே பளபளத்தது. மேற்குத் திசையில் கடலின் அடிவானப் பரப்பில் கப்பல் ஒன்று நகர்ந்துகொண்டிருந்தது.

இரவுச் சாப்பாட்டுக்குப் பிறகு புஷ்பராஜ் அறைக்கு வெளியே வந்தார்.

அப்போது அவர் இரவு உணவு அருந்தியது அந்தக் கப்பலின் கப்டனுடன்தான். அன்று அப்படியொரு சூழல் அமைந்தது.

கப்டனுக்குத் தாங்க முடியாத வயிற்றுவலி. அவர் கைவசம் வைத்திருந்த எல்லா மருந்து மாத்திரைகளையும் பயன்படுத்திப் பார்த்தார்.

(தொடரும்...)

---

# மட்டக்களப்பு - திருமலை

# நவீன வீதி நிர்மாணம்

**- வாகரை வாணி -**

**கிண்ணியா** வெருகல், வாகரை ஊடாகச் செல்லும் திருகோணமலை மட்டக்களப்பு வீதி பிரான்ஸ் அரசாங்கத்தின் நிதியுதவியுடன் நவீனமயப்படுத்தப்படுகின்றது. திருகோணமலை சீனன்குடாவிலிருந்து தொடங்கும் இந்த வீதி நிர்மாணம் மட்டக்களப்பு திருக்கொண்டையாமடு வரை செல்லும். சுமார் 96 கிலோமீற்றர் நீளமான இந்த வீதி நிர்மாணத்தில், இடையே வரும் உப்பாறு, கங்கை, இறால்குழி, வெருகல், காயான்கேணி போன்ற ஆறுகள் குறுக்கிடும் இடங்களில் பாரிய பாலங்களும் அமைக்கப்பட்டுக் கொண்டிருப்பதாக வீதி அபிவிருத்தி அதிகார சபையின் பொறியியலாளர் கே.சிவகுமார் தெரிவித்தார். பாலங்களை நிர்மாணிப்பதற்காகவும் மேற்படி வீதியை புனரமைப்பதற் காகவும் 9150 மில்லியன் ரூபாவை பிரெஞ் அரசாங்கம் நிதியுதவியளித்திருப்பதாக அவர் குறிப்பிட்டார். முப்பது மாதங்களில் நிறைவுசெய்யப்பட வேண்டிய இந்த நெடுஞ்சாலை அபிவிருத்தி வேலை களை சைனா (China harbour) ஹாபர் கம்பனி பொறுப் பேற்றுள்ளது. நிர்மாணப்பணிகள் ஏற்கெனவே துவங்கி நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன. பயங்கரவாத வன்முறைகளிலிருந்து கிழக்கு விடுவிக்கப்படும் வரை மட்டக்களப்பிலிருந்து திருகோணமலை பயணிப்பதாயின் பொலன்னறுவை, ஹபறனை, கந்தளாய் ஊடாக சுமார் ஏழு மணித்தியாலயங்களைச் செலவிட வேண்டியிருந்தது. அதேவேளை கிண்ணியா ஊடாகச் செல்லும் பழைய மட்டக்களப்பு வீதி புனரமைக்கப்படுவதால் இரண்டு மணி நேரத்தில் திருகோணமலை மட்டக்களப்பு பயணத்தை மேற் கொள்ள முடியும் என பொறியிய- லாளர் கே.சிவகுமார் தெரிவித்தார். கடற்றொழில், விவசாய உற்பத்திகள் என்பனவும் உல்லாசப் பயணத்துறையின் மூலமும் இப்பிரதேசங்களில் பொருளாதார அபிவிருத்தி ஏற்பட இந்த வீதி அபிவிருத்தி வேலைகள் மிகவும் பயனளிக்குமென்றும் அவர் நம்பிக்கை தெரிவித்தார்.


சுனாமி போன்ற அனர்த்தங்களுக்கு ஈடுகொடுக்கக் கூடியதாக இந்தப் பாலங்கள் நிர்மாணிக்கப்பட்டுக் கொண்டிருக்கின்றன. இதே வேளை 41 கிலோமீற்றர் நீளமான கந்தளாய் சேருவில வீதியும் அகலமாக்கப்பட்டுக் கொண்டு நவீனமயப்படுத்தப்பட்டுள்ளது. இவை வரலாறு காணாத அபிவிருத்தியென உள்ளூர்வாசிகள் பெருமைப்பட்டுக் கொள்கின்றார்கள். சேறும், சகதியுமான பாதையில் சதாகாலமும் பயணித்த மக்கள் தற்போது அமைக்கப்பட்டுள்ள நவீன தார் வீதியில் போக்குவரத்து செய்து கொண்டிருக்கின்றார்கள். தற்போதைய வீதி அபிவிருத்தியும் பழங்கால போக்குவரத்து நிலைமைகளையும் வாகரையைச் சேர்ந்த மூதாட்டி சீனித்தம்பி அன்னம்மா (77வயது) ஒப்பிட்டுப் பார்க்கின்றார். 1948ஆம் ஆண்டு காணப்பட்ட மட்டக்களப்பு திருகோணமலை வீதி கரடுமுரடானதாக இருந்ததுடன் அப்போது பாலங்கள் எதுவும் அமைக்கப்பட்டிருக்கவில்லை. பனிச்சங்கேணி உப்பாறு, வெருகல் கங்கை வீதியை குறுக்கிடுவதனால் பாலம் இல்லாததால் தோணி, பாதை, போன்றவற்றில் தான் நாம் ஆற்றைக் கடப்பது. சிலவேளைகளில் பலமான காற்று வீசும்போது ஆற்றைக் கடப்பது மிகவும் சிரமம் எதிர்பாராத விதமாக தோணி நீரில் மூழ்கடிக்கப்பட்டு அதில் பயணிப்பவர்கள் நீரில் மூழ்கடிக்கப் பட்டு மரணமடைந்துமுள்ளார்கள். அவசரத் தேவைகளுக்கு போக்குவரத்து செய்ய முடியாது. இப்போதிருப்பதைப் போன்று வாகன வசதிகளும் இல்லை. அதிகமாக இந்த வீதியில் மாட்டு வண்டில்களை பயன்படுத்த முடியுமென்பதால் எங்களது விவசாய நடவடிக்கைகளுக்கு மாட்டு வண்டில்தான் உகந்ததாக இருந்தது. பாம்பு தீண்டியவர்களையோ அல்லது ஆபத்தான நிலைமையில் உள்ள நோயாளிகளையோ வாழைச்சேனை ஆஸ்பத்திரிக்கு அல்லது எடுத்துச் செல்வதற்கு கிட்டத்தட்ட மூன்று மணித்தியாலம் போகும். அவர்கள் போகும் வழி யிலேயோ எதுவித சிகிச்சைகளும் செய்ய முடியாமல் சிலவேளைகளில் இறந்தும்விடுவார்கள். 1975ஆம் ஆண்டு காலப்பகுதியில், பனிச்சங்கேணி பாலம் செய்யப்பட்டது. 2004ஆம் ஆண்டில் ஏற்பட்ட சுனாமியின் போது இப் பாலம் உடைந்து போயிற்று. அதனால் பாலத்தினுடாக பயணிக் முடியாமல் இருந்தது. இப் பிரதேசத்திற்கு பொறுப்பான பிரதேச செயலாளர் திரு. ஆ.உதயகுமார் உட்பட ஏனைய அரச, அரச சார்பற்ற நிறுவனங்களைச் சேர்ந்த உத்தியோகத்தர்களும், மக்களும் இரண்டு மாதகாலமாக அச்சத்துடன் பயணித்தனர்.

**கிண்ணியா ஊடாகச் செல்லும் பழைய மட்டக்களப்பு வீதி புனரமைக்கப்படுவதால் இரண்டு மணி நேரத்தில் திருகோணமலை மட்டக்களப்பு பயணத்தை மேற் கொள்ள முடியும். கடற்றொழில், விவசாய உற்பத்திகள் என்பனவும் உல்லாசப் பயணத்துறையின் மூலமும் இப்பிரதேசங்களில் பொருளாதார அபிவிருத்தி ஏற்பட இந்த வீதி அபிவிருத்தி வேலைகள் மிகவும் பயனளிக்கும்**

அதன்பின்பு வெளிநாட்டவரின் உதவியுடன் பாலம் திருத்தப்பட்டு மீண்டும் பாலத்தினூடாக அனை- வரும் பயணிக்க முடிகிறது.

(தொடர்ச்சி 22ஆம் பக்கம்)

# மனதுக்கு நிம்மதி



சக்கர நாற்காலியில் அமர்ந்திருந்தாள் அந்த ஐந்து வயதுச் சிறுமி கேய் லீ ஹேரியட்.

இடம் அமெரிக்காவின் பாஸ்டன் நகர நீதிமன்றம். 2003ஆம் ஆண்டில் அவளுக்கு மூன்று வயதாக இருக்கும் போதுதான் அந்தத் துயரம் நடந்தது.

ஒரு நாள் கேய் தனது சகோதரியுடன் உற்சாகமாய்ப் பாட்டுப் பாடிக் கொண்டிருந்தபோது மூன்று இரக்கமற்ற துப்பாக்கிக் குண்டுகள் எங்கிருந்தோ பறந்து வந்தன. அவளுடைய முதுகெலும்பை உடைத்தன. உற்சாகப் பறவைக்கு சக்கர நாற்காலி வாழ்க்கையானது.

நீதிமன்றத்தில் அவளுக்கு முன்னால் நின்றிருந்தான் இருபத்து ஒன்பது வயதான ஆண்டனி வாரன். நீதிமன்றம் அவனைக் குற்றவாளி எனத் தீர்ப்பிட்டது.

சிறுமி கேய் அவனருகில் சென்றாள். திடீரென தேம்பித் தேம்பி அழ ஆரம்பித்தாள். பார்த்தவர்களெல்லாம் கலங்கினார்கள். பின் சிறுமி அவனிடம் சொன்னாள், "நீங்கள் செய்தது தவறு. ஆனாலும் உங்களை நான் மன்னிக்கிறேன்."

ஐந்து வயதுச் சிறுமியின் அச்செயல் அந்த நீதிமன்றத்தையே நிலைகுலைய வைத்தது. பார்த்துக் கொண்டிருந்தவர்களெல்லாம் நெகிழ்ந்தார்கள். அதுவரை சுட்டவன் மீது கொடும் பகையுடன் இருந்த அவளுடைய தாயும் உடனடியாக அந்த நபரை மன்னித்தார்!

இந்த நிகழ்வு அமெரிக்காவின் அனைத்துத் தொலைக்காட்சிகளிலும் ஒளிபரப்பாகி பலரையும் தொட்டது.

மன்னிப்பு எனும் வார்த்தை மனிதகுலத்துக்கே உரிய மகத்துவமானது. மிகவும் எளிதாகச் செய்யக் கூடிய இந்தச் செயலைச் செய்வதில்தான் இன்று பலருக்கும் உலக மகா தயக்கம்.

**மன்னிப்பு கடந்த காலத்தின் நிகழ்வுகளை மாற்றாது. ஆனால் அது எதிர்காலத்தின் பாதைகளில் ஆனந்தமான பூக்களைச் சொரியும். வாழ்க்கை பணத்தினாலோ, செல்வத்தினாலோ கட்டப்படுவதல்ல. அது அன்பின் இழைகளால் பின்னப்படுவது. உண்மையான அன்பு இருக்கும் இடத்தில் மன்னிக்கும் மனம் தானே முளைவிடும்.**

அதனால்தான் நமது வாழ்க்கை சண்டை, அடிதடி, வெறுப்பு, கோபம், நோய்கள் என துயரத்தின் தெருக்களில் நொண்டியடிக்கிறது.

ஒருவர் உங்களைப் பற்றி ஏதோ தவறாகச் சொல்லிவிட்டார் என்று வைத்துக் கொள்ளுங்கள். அந்த நபர் மீது நீங்கள் கோபம் கொள்ளும் போது உங்களுடைய மனதில் ஒரு கல்லை வைக்கிறீர்கள். அது கனக்கிறது. அந்தக் கோபத்தை மீண்டும் மீண்டும் நினைக்க நினைக்க ஒவ்வொரு கல்லாய் அடுக்குகிறீர்கள். பாரம் கூடுகிறது, உடல் நிலை பாதிக்கிறது. இரத்த அழுத்தம் எகிறுகிறது. எல்லை மீறினால் மாரடைப்பே வந்து விடுகிறது.

ஆனால் இந்த நிகழ்வின் துவக்கத்திலேயே நீங்கள் அந்த நபரை மன்னித்துவிட்டால் அத்துடன் சிக்கல்கள் எல்லாம் முடிந்துவிடும்.

"மன்னிப்பது கோழைகளின் செயல் என பலரும் நினைக்கிறார்கள். எதிரி நாட்டு மன்னனைப் போரிட்டு அழிக்கும் பரம்பரை நாம்'' என மீசை முறுக்குகிறார்கள். உண்மையில் மன்னிப்பது தான் போரை விட வீரமானது. போர் உடல்களைத்தான் வெற்றி கொள்ளும், மன்னிப்பு மனதையே வெற்றி கொள்ளும். இதைத்தான் மகாத்மா சொன்னார், "மன்னிப்பு பலவான்களின் செயல், பலவீனர்களால் மன்னிக்க முடியாது."

# மன்னிப்பு மகத்துவமானது!

பல வேளைகளில் தவறிழைக்கும் நபர்கள் தவறை உணர்ந்து தட்டுத் தடுமாறி மன்னிப்புக் கேட்பதுண்டு. அப்படிப்பட்டவர்களை நிபந்தனையற்று மன்னியுங்கள். "சே... இதுல மன்னிப்பு கேக்க என்ன இருக்கு" என்பது போன்ற வார்த்தைகள் நட்பையும், உறவையும் பலமடங்கு இறுக்கமாக்கும்.

சிலர் மன்னிப்புக் கேட்க தயங்குவார்கள். அப்படிப்பட்டவர்களுடன் பழகும்போது எந்த வித்தியாசமும் இல்லாமல் பழகுங்கள். அவர்களை மனதார மன்னித்துவிட்டதைச் செயல்களில் காட்டுங்கள். மன்னிப்புக் கேட்கும் முன்னாலேயே மன்னிப்பது உயர்ந்த நிலை!

மன்னிப்பைப் பற்றி மருத்துவம் சொல்வது கதிகலங்க வைக்கிறது. "நீங்கள் ஒரு நபர் மீது எரிச்சலும், கோபமும் கொள்ளும்போது உங்கள் மூளையில் ஒரு வடிவம் உருவாகிறது. உங்கள் எரிச்சலும், கோபமும் அதிகரிக்க அதிகரிக்க அந்த வடிவம் ரொம்ப வலுவாக மாறிவிடுகிறது. அந்த வலுவான நிலைமை பின்னர் உங்கள் இயல்பாகவே மாறிப் போகிறது. அதன் பின் கோபமும், எரிச்சலும் இல்லாமல் வாழ்வது உங்களுக்கு குதிரைக் கொம்பாகி விடும்'' என்கின்றன மருத்துவ ஆராய்ச்சிகள்.

"மன்னிக்கும் பழக்கமுடைய மனிதர்கள் ஆனந்தமாகவும், ஆரோக்கியமாகவும் இருக்கிறார்கள்'' என்கின்றன பல்வேறு ஆராய்ச்சி முடிவுகள். 'கேம்பைன் பார் பர்கிவ்னஸ் ரிசர்ச்' சுமார் 48 ஆராய்ச்சிகளின் முடிவை விலாவரியாக எடுத்துரைக்கிறது. எல்லா ஆராய்ச்சிகளுமே மன்னிக்கும் மனிதர்கள் உடலிலும், உள்ளத்திலும் ஆரோக்கியமாகவும் ஆனந்தமாகவும் இருப்பதாக அடித்துச் சொல்கின்றன.

ஒரு மனிதன் தேவ நிலையை அடையவேண்டுமெனில் மன்னிப்பும் அவனிடம் இருக்க வேண்டும் என்கிறது பகவத் கீதை.

ஆனால் மதங்களைப் பின்பற்றும் நமது நாட்டில் மன்னிப்பு எவ்வளவு தூரம் ஆரோக்கியமாக இருக்கிறது?

மன்னிப்பு கடந்த காலத்தின் நிகழ்வுகளை மாற்றாது. ஆனால் அது எதிர்காலத்தின் பாதைகளில் ஆனந்தமான பூக்களைச் சொரியும். வாழ்க்கை பணத்தினாலோ, செல்வத்தினாலோ கட்டப்படுவதல்ல. அது அன்பின் இழைகளால் பின்னப்படுவது.

உண்மையான அன்பு இருக்கும் இடத்தில் மன்னிக்கும் மனம் தானே முளைவிடும். மன்னிப்புக் கேட்கும் எவருக்கும், மன்னிப்பை மறுக்காதீர்கள். மன்னிப்புக் கேட்காதவர்களையும் மன்னிக்க மறக்காதீர்கள்.

# முரசு குறுக்கெழுத்துப் போட்டி

வாசக நெஞ்சங்களே! உங்கள் சிந்தனைக்குத் தீனி போடும் வினாக்கள் அடங்கிய இப் போட்டியிலே ஆர்வமுடன் பங்குகொண்டு பரிசுகளையும், பாராட்டுக்களையும் பெற வாழ்த்துகின்றோம்.

**குறுக்கெழுத்துப் போட்டி இல.433 இற்கான சரியான விடைகளை அனுப்பி 250 ரூபா பரிசு பெறும் அதிர்ஷ்டசாலி.**

**எஸ்.சந்தியா, தென்னாங்கும்புர, கண்டி.**

**பாராட்டுப் பெறும் 10 அதிர்ஷ்டசாலிகள்.**

01. K.S.ரமணலோஜன், தாளையூற்று, திருகோணமலை.
02. ம.இலக்கியா, இரத்தினபுரம், கிளிநொச்சி.
03. ப.இந்திரா, நாவலடி, கொக்கட்டிச்சோலை, மட்டக்களப்பு.
04. P.டனிஸ்ரன், நுவரெலியா வீதி, புசல்லாவை.
05 ரா.செந்தூரன், கெய்சர் வீதி, கொழும்பு-11.
06 க.செல்வராணி,கற்கோவளம். பருத்தித்துறை.
07. சி.மாறன், தாழ்வுபாடு, மன்னார்.
08. பு.சி.வரதராஜா, புன்னைநீராவி. விசுவமடு.
09. ம.வைகுந்தன், கடற்கரைவீதி, நீர்கொழும்பு.
10. எஸ்.அமலன், கச்சேரியடி, நல்லூர்.

## குறுக்கெழுத்துப் போட்டி - 435

| | | | | | |
|---|---|---|---|---|---|
| 1 | 2 | 3 | 4 | 5 | |
| 7 | 8 | 9 | 10 | | 12 |
| 13 | 14 | 15 | 16 | | 18 |
| 19 | | | 22 | 23 | 24 |
| | 26 | | | 29 | |
| 31 | 32 | | 34 | 35 | 36 |

**போட்டி விதிகள்:**

இதற்குரிய விடையைக் கூப்பனில் நிரப்பி அஞ்சலட்டையில் ஒட்டி 18.09.2011 க்கு முன்னர் எமக்குக் கிடைக்கும்படி அனுப்புங்கள். அனுப்ப வேண்டிய முகவரி:

குறுக்கெழுத்துப் போட்டி இல-435
தினமுரசு வாரமலர்,
த.பெ. இல.: - 1772, கொழும்பு. – த.பெ.இல. :-167, யாழ்ப்பாணம்

தங்கள் சரியான முகவரியையும் காசுக் கட்டளையை மாற்றக்கூடிய அண்மித்த தபாலகத்தின் பெயரையும் குறிப்பிடுக.
சரியான விடையை அனுப்புவோரில் முதல் அதிர்ஷ்டசாலிக்கு 250 ரூபா பரிசுண்டு. அடுத்த பத்து அதிர்ஷ்டசாலிகளின் பெயர்கள் தினமுரசில் பிரசுரமாகும்.

**இடமிருந்து வலம்**

01.சுபகாரியங்களில் ஒன்று.

07.எட்டு என்ற தொகையையும் குறிக்கும். (குழம்பியுள்ளது)

13.காரியம் என்றும் பொருள்படும். (குழம்பியுள்ளது)

22.காசு.

31.சேனை என்றும் கூறலாம்.

34.விசும்பு என்பதன் ஒத்த சொல். (குழம்பியுள்ளது)

**மேலிருந்து கீழ்**

01.அழகு என்றும் பொருள்படும்.

02.நீரூற்று அல்லது சிற்றாறு எனலாம். (குழம்பியுள்ளது)

03.அபுகு என்றும் பொருள்படும்.

04.அழகு அல்லது ஈடாக வைத்திருக்கும் பொருள். (குழம்பியுள்ளது)

12.வீரம், வெற்றி எனப் பொருள்படும்.

23.அம்பு. (குழம்பியுள்ளது)

26.நீரணை என்றும் பொருள்படும்.

## குறுக்கெழுத்துப் போட்டி 433- விடைகள்

| | | | | | |
|---|---|---|---|---|---|
| 1 ர | 2 ம் | 3 ழா | 4 ன் | ■ | 6 ண் |
| 7 கூ | 8 னி | ■ | 10 ம் | 11 ண | 12 நா |
| 13 டா | 14 த | 15 ம் | 16 க | ■ | ■ |
| 19 ம் | 20 ன் | 21 சி | 22 ன | ■ | 24 ஷ |
| ■ | ■ | 27 ர | ■ | 29 டி | 30 தோ |
| 31 ம் | 32 க | 33 க | 34 ர | ■ | 36 ம் |

# வடக்கு நோக்கி ஓடும் உயிரினங்கள்!



அதிகரித்துவரும் உலக வெப்பநிலை காரணமாக உயிரினங்கள் வடதிசை நோக்கி விரைந்து வருதாக விஞ்ஞானிகள் கூறுகின்றனர்.

இதுதொடர்பாக ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளப்பட்ட 2 ஆயிரம் உயிரின வகைகள், வருடத்துக்கு ஒரு மைல் என்ற வேகத்தில் நிலநடுக்கோட்டில் இருந்து வடக்குப் பகுதி நோக்கி நகர்வது தெரியவந்துள்ளது. இந்த உயிரினங்களில் பெரும்பாலானவை பூமியின் வடகோளத்தைச் சேர்ந்தவை. பல்லாண்டு காலமாகவே இப்படி நகர்ந்து வருகின்றன என்றபோதும் தற்போது அவற்றின் வேகம் கூடியிருப்பது குறிப்பிடத்தக்கது. தற்போது மணிக்கு எட்டு அங்குலங்கள் என்ற வேகத்தில் நகர்ந்து வருகின்றன.

"உயிரினங்கள் வடக்கு நோக்கி நகரும்வேகம் ஒரு முக்கியமான விடயம். அது நாம் நினைத்ததை விட அதிகமாக இருக்கிறது'' என்கிறார், இந்த ஆய்வை மேற்கொண்ட யார்க் பல்கலைக்கழகத்தின் கிறிஸ் தோமஸ். குளிரான காலநிலையை நாடியே உயிரினங்கள் இவ்வாறு இடம்பெயர்கின்றன.

பதிவுகளின்படி பார்த்தால், கடந்த பத்தாண்டுகள்தான் பூமியின் மிக வெப்பமான பத்தாண்டுகளாகும். இதில் 2005ஆம், 2010ஆம் அதிகபட்ச வெப்பநிலை ஆண்டுகளாக இருந்திருக்கின்றன.

2000 ஆண்டுகளில் வெப்பநிலை உயரத் தொடங்கியதுமே உயிரினங்கள் குளிரான இடத்தை நோக்கி நகரத் தொடங்கிவிட்டன. இவ்வாறு நகரும் உயிரினங்களில் ஐரோப்பாவின் 'சிட்டி காப்பர்' வண்ணத்துப்பூச்சியும், ஸ்வீடனின் 'பேர்ப்பிள் எம்பரர்' வண்ணத்துப்பூச்சியும் குறிப்பிடத்தக்கவை. இங்கிலாந்தின் 'காமா' பட்டாம்பூச்சி, கடந்த 21 ஆண்டுகளில் 135 மைல்கள் தூரம் நகர்ந்துள்ளது.

வெப்பநிலை காரணமாக மிக வேகமாக இடம்பெயரும் உயிரினங் களில் ஒன்று, 'சிலோமெட்டபஸ்' என்ற இங்கிலாந்து சிலந்தி. இந்தச் சிறிய சிலந்தி கடந்த 25 ஆண்டுகளில் 200 மைல்கள் வடக்கு நோக்கித் தனது இருப்பிடத்தை நகர்த்திக் கொண்டுள்ளது. அதாவது ஆண்டு ஒன்றுக்குச் சராசரியாக 8 மைல்கள்.




"நீ யாரும்மா?"

"எம்பேரு அகல்யா."

"உன்னைப் பற்றி சீது சொல்லியிருந்தான். நல்லாப்பாடுவியாமே..."

"சேர்! உங்க பையன் விபத்துல சாகலை!" என்றார் சாந்தகுமார் தினவாணி நிருபர்.

"என்ன சொல்றே?"

" சேர் நீங்க என்ன பண்ணுறீங்க. உங்க பையன் செத்தது சந்தேகத்துக்குரிய விபத்தில்லை என்று முன்னுக்கிருக்கிற பொலிஸ் ஸ்ரேசனில ஒரு வாக்குமூலம் பதிவுசெய்திடுங்க. அதுவரைக்கும் எதிலயும் கையெழுத்துப் போடவேண்டாம். உடலையும் எடுக்காதீங்க."

"கையெழுத்துப் போட்டாச்சு"

"மரணச் சான்றிதழ் கொடுத்திட்டாங்களா?"

"ஏதோகொடுத்தாங்க"

சாந்தகுமார் அதை வாங்கிப் பார்த்துவிட்டு 'பாவியள் செத்ததுக்குக் காரணம் விபத்து எண்ட கொடுத்திருக்கிறாங்க. நீங்க என்ன செய்யிறீங்க... உங்க பையன் இங்கு ஒரு விடுதிக்கு யாரையோ பார்க்க வந்தான். இரண்டு பையங்கள் சேர்ந்து அவனை எங்கேயோ அழைச்சுக்கொண்டு போயிருக்கிறாங்க. வேளச்சேரிக்குப் பக்கத்தில உங்களுக்கு யாரும் உறவுக்காரங்கள் யாராவது இருக்காங்களா?"

"வேளச்சேரியா... அது எங்க இருக்கு? விசா வாங்க வந்தான். அவ்வளவுதான் தெரியும்.

"மாமா உங்க பையன் அதுக்கப்புறம் என்னைப் பார்க்க வந்தார். இங்கிருந்து ப்ரமோத் என்பவன் ஆண் மாணவர்கள் விடுதிக்குப் போகச்சொன்னான். அதுக்கப்புறம்தான்...." என்றாள் அகல்யா.

சாந்தகுமார் , "நீங்க எதுக்கும் ஒரு ரிப்போர்ட் எழுதிக்கொடுத்திடுங்க. அதுக்கப்புறம் பொடியை எடுத்துக்குங்க.

"ஏம்ப்பா, எதுக்கப்பா போட்டுக் குழப்பறே? அது விபத்துப்பா" என்றார் அருகே நின்ற பொலிஸ் அதிகாரி.

**ஸ்ரீதரின் சாவுக்குக் காரணமான ப்ரமோத், ரகு, சீனு ஆகிய மூவரையும் அவள் பொலிசில் இனம் காட்டத் தயாரானாள். ஆனால் அதை ப்ரமோத் ஏற்றுக்கொள்ளவில்லை. வைத்தியசாலையில் ஸ்ரீதரின் தந்தை வந்திருந்தார். துக்கத்தால் வாயைப் பொத்திக்கொண்டு அழுதார். அவர் தனது மகனின் இழப்பைத் தாங்க முடியாமல் அழுவதை வைத்தியாசலைக்கு வந்திருந்த அனைவரும் வேடிக்கை பார்த்துக்கொண்டிருந்தனர். அிதனால் அவர் மேல் அகல்யாவுக்குப் பரிசும் பாசமும் எழுந்தது.**

"உங்களையெல்லாம் நிக்க வைச்சுச் சுடணும்."

"இதைப்போய் அரசியல் பண்ணதே. பாரு. பையன் உடல் ரோட்டில கிடக்குது."

"வேளச்சேரிக்குப் அவன் போக காரணமே இல்லை!"

ஸ்ரீதரின் அப்பா சங்கடப்பட்டார். 'எதுக்காக சிக்கல்பா. மகனே போய்ட்டான். இப்ப மறுபடியும் அவன் உடலைத் துண்டுதுண்டாக்கணுமா ஏற்கெனவே ஒரு பக்கம் தெரியாதபடி துணியால மூடியிருக்குது. நாங்கள் எல்லாம் சண்டைபோடுற ஜாதி இல்லை. ஒதுங்கிற ஜாதி. இவனுக்குக் காரியங்கள் பண்ணணும். காவேரிக்கரையில கொண்டுபோய் எரிக்கணும். எப்படியாவது எனக்குப் பொடியை மீட்டுக் கொடுத்திடு. எங்க கையெழுத்துப் போடணுமோ போடுறேன்."

"அதைச் செய்யும் முதல்ல. அகல்யா நீங்களும் கையெழுத்து போடறீங்களா?"

"தாராளமாப் போடறேன்" என்றாள் அவள். "அந்த ரகு, பரமோத், சீனு மூணு பேரும் ஜெயிலுக்குப் போகணும்..."

"உன்னைப் பத்தி சீது நிறையவே சொல்லியிருக்கான். உன்னைத்தான் பார்க்க வந்தான்."

"இப்ப என்ன பண்ணப்போறீங்க?"

"வேனுக்கு ஏற்பாடு பண்ணியிருக்கு. அது வந்ததும் திருச்சி எடுத்துண்டு போய்டறேன். ஐயோ, இவம்மாவை எப்படிச் சமாளிக்கப்போறனோ.. எதுக்கடா சீது இந்தப் படிப்பு படிச்சே. எதுக்கடா அலுமாரி நிறைய கப்பா அடுக்கி வைச்சே, எதுக்கடா இப்படி உருக உருகப் பாடினே. தினமும் பதினெட்டு மைல் சைக்கிள்ள போவான் சேர் பாட்டுக் கத்துக்க. எல்லாத்திலையும் சிறப்பா இருந்தான். 'வாடினேன் வாடி' அவ்வளவு அருமையா பாடுவான். பக்கத்தில வைச்சுக்கொண்டு கேக்கிறதுக்கு ரங்கநாதர் அழைச்சிட்டார். பொறுக்கலை."

"அவரு போட்டோ இருக்குதா?"

"திருச்சியில இருக்கு."

அந்தத் தந்தையை பொலிசில புகார் கொடுக்கச் சொல்லிவிட்டு அந்த நிருபர் அகல்யாவிடம் வந்தார்.

"இதோட இது நிக்காதுங்கள். தமிழ்நாட்டையே கலக்கப்போவுது பாருங்கள். இப்பவே தலைப்புச் செய்தி கோர்த்துக்கொண்டு இருப்பாங்க... 'மாண-வனை மாணவர்கள் அடித்துக்கொலை' மற்றொரு நவரசு என்று பார்லிமெண்டு வரை போகும். கவலைப்படாதையம்மா."

"என் கவலை வேறையுங்க. பெரியவரைக் கொஞ்சம் பத்திரமா அழைச்சுக்கொண்டு போக ஏற்பாடு செய்யுங்க. ரொம்ப ஒடைஞ்சு போயிருக்கார்."

"அவர் உங்க உறவா?"

"ஆமாம்" என்றாள்.

அகல்யாவுக்கு இந்த அமர்க்களங்கள் எல்லாம் முடிந்ததும் தான் தன் உடம்பைப் பற்றிய பிரக்ஞையே வந்தது. நாளைக்கு ஒப்பரேஷன். டாக்டர் காத்திருக்கிறார். அங்கிருந்து நடைதூரம்தான் சுபாஷினி மேத்தாவின் கிளினிக்.

அங்கே போனபோது டாக்டர் மிகுந்த கோபத்தில் இருந்தார்.

"என்ன அகல்யா நீ .. இந்த பொன்னான பணத்தை வைச்சுக்கொண்டு இத்தனைநேரம் காத்திருந்து காலைல வர்றேன்னு சொல்லிட்டு போயிருச்சு..."

"ஸொரி டாக்டர். தெரிஞ்ச பையன் ஒருத்தன் ராயப்பேட்டை வைத்தியசாலையில செத்துப் போயிட்டான்.

"அதுக்காக? உன் உடம்பு முக்கியமில்லையா."

"அந்தப் பையன்தான் குழந்தைக்குத் தகப்பன்."

"அப்படியா?" என்றாள் திகைத்துப்போய்.

"என்ன ஆச்சு? எதுக்காகச் செத்துப்போனான்?"

"ஏதோ யாரோ கொலை செய்திருக்கிறாங்க டாக்டர். நாளைக்குப் பேப்பர்ல கூட வரும்."

"பாரும்மா... இத்தனை அலைச்சல், பதற்றம் இதெல்லாம் உனக்குக் கூடாது."

'நான் இந்தக் குழந்தையை அழிக்கப் போறதில்லை டாக்டர்" என்றாள் அகல்யா.

டாக்டரின் முகம் மாறியது.

"அப்ப பிள்ளையைச் சுமக்கப் போறியா?"

"ஆமாம்.." என்றாள் அகல்யா அழுத்தமாக.

"பைத்தியமே, உனக்கு எத்தனை வயசு...? இத்தனை சின்ன வயசுல பிள்ளையைப் பெற்றெடுக்கிறதில உள்ள அபாயங்கள் சொல்லட்டுமா?

"எல்லாம் எனக்குப் பல்லாவரத்தில நிறையவே சொன்னாங்க. என் உடல்வாகு சரியா இருக்கிறதாவும்..."

"இன்னும் இல்லை..."

எப்படித் திடீர்த் தீர்மானம்...? எங்களால பிள்ளை பெத்துக்க உதவிதான் செய்ய முடியும்.. யார் பிள்ளையை வளர்ப்பாங்க...? உன் படிப்பு என்ன ஆகிறது... பரீட்சை என்ன ஆகிறது...?"

**இன்பம் தொடரும்**

இவ்வாரச் சிறுகதை

# கற்பனைக் கோலங்கள்

இ.தேனுஜா, நல்லூர்.



பட்டாம்பூச்சியாய் சுற்றித்திரிந்த அவள் முகத்தில் சில நாட்களாக ஓர் அமைதி.. அடக்கம் குடிகொண்டிருந்தது. காரணம் யசோவைப் பெண்பார்க்கும் படலம் வீட்டில் ஆரம்பமாகியிருந்தது. அவர்களுடைய பரம்பரையில் பிறந்த முதல் பெண் குழந்தை அவள்தான். யசோ வீட்டிற்குச் செல்லப்பிள்ளை. உறவு-களின் குட்டி தேவதை அவள். அவளுடைய பேச்சுக்களைக் கேட்டுக் கொண்டே இருக்கலாம். அவளுடைய குறும்புகள் யாவும் பார்ப்போரை வயிறு குலுங்க சிரிக்க வைக்கும் அளவிற்கு அற்புதமானவை. சிவந்த நிறம், கவர்ந்து இழுக்கக் கூடிய ஈர விழிகள், காதோரமாக சுருண்டு கிடக்கும் முடி, கபடமில்லாத புன்னகை, முழங்கால் தெரியும் வண்ணம் குட்டைப்பாவாடை, பஞ்சுக்கால்களால் ஒரு கெந்தல் நடை, என்று அவளுடைய அழகோடு... இரக்க குணம், பயந்த சுபாவம் போன்றவற்றையும் ஒருங்கே இணைத்து பிரம்மன் அவளைப் பூமிக்கு அனுப்பி வைத்திருந்தான். ஒரு தூய நிலாவாக...!

யசோவினுடைய தந்தை ஒரு ஆங்கில ஆசிரியர். அதே சமயம் அவருடைய குடிப்பழக்கமும் நாளுக்கு நாள் அதிகரித்து வந்தது. அதைப் பார்த்து பார்த்து வளர்ந்த அவள் குடிப்பவர்களைக் கண்டாலே அடியோடு வெறுத்தாள். தாயார் ஒரு குடும்பப் பெண். கிராமத்தில் இருந்து வந்த தாயினுடைய அப்பாவித்தனம் தந்தைக்குச் சாதகமாக அமைந்தது. தந்தை விடும் தவறுகளைத் தட்டிக் கேட்கக் கூட துணிவில்லாத அம்மா.. அண்ணன், தம்பி, தங்கை என்று உடன்பிறப்புக்களுடன் பிறந்த அவள் சந்தோஷமான ஒரு சாராசரி வாழ்க்கையே வாழ்ந்தாள். நேசித்தாள். விரும்பினாள். எதிர்பார்த்தாள். அவள் பாசத்துக்குமட்டும் கட்டுப்பட்டு இருந்தாள். அவர்களுக்கு சேமிப்புக்கள் என்று ஏதுமில்லை. தாயினுடைய தாலியை தவிர தங்கம் என்று எதுவும் இல்லை. இப்படி இவர்களின் குடும்ப சூழ்நிலையிலும் தேடி வந்த சம்மந்தம் தான் இது. அவளுக்கென்று வந்த சம்பந்தத்தை விட தாய்க்கு துளிகூட விருப்பமில்லை.

இலண்டன் பிரஜா உரிமை பெற்றவன்தான் ஜெயன். சிவந்தநிறம, எடுப்பான அழகிய தோற்றம்,அவளுக்கேற்ற உயரம், அவளுக்கென்றே பிறந்தவன் போல ஜெயன் இருந்தான். அவனின் குடும்பம் யாழ்ப்பாணத்தில்தான் வாழ்ந்து வந்தது. குறிப்பும் 85 வீதம் பொருந்திவிட்டது. புகைப்படங்கள் கைமாறியது. படிப்பதற்காக இலண்டன் சென்ற ஜெயனின் சகோதரிக்கு அங்கேயே ஒரு நல்ல மாப்பிள்ளையாய் பார்த்து திருமணம் முடித்து விட்டு சித்திரைக்கு கல்யாணத்தை வைக்கலாம் என்று மாப்பிள்ளை வீட்டாரிடம் இருந்து புரோக்கர் மூலமாக தகவல் வந்தது. இருப்பினும் சீதனம். நகைகள் பற்றிய பேச்சுக்கள் ஆரம்பிக்கப்படாதது யசோவின் தாயாருக்கு ஒரு நெருடராகவே இருந்தது. என்ன கேட்பார்களோ? என்ற ஏக்கம் தாயின் மனதில் குடி கொண்டது. இருப்பினும் தன் தலையை அடமா-னம் வைத்தாவது இந்தக் கல்யாணத்தை முடிச்சிடணும் என்ற முடிவோடு யசோவின் அறைக்குள் நுழைந்தாள்.

சித்திரைப் பதுமை போல தன் கட்டில் மேல் இருந்தபடி எதையோ தீவிரமாக படித்துக் கொண்டிருந்தாள். தாயின் காலடி ஓசை கேட்ட யசோ திரும்பிப் பார்த்துவிட்டு எழுந்து தாயருகில் வந்தாள். தாய் மெல்ல விடயத்தை ஆரம்பிக்க பெரிய ஆர்ப்பாட்டத்தில் இறங்கிவிட்டாள். 22 வயதில் எனக்குத் திருமணம் வேண்டாம். நான் படிக்கணும்... லண்டன் மாப்பிள்ளை எனக்கு வேண்டாம்... நான் உங்கள் எல்லாரையும் விட்டுட்டுத் தனிய போகமாட்டன். எனக்குச் சமைக்கத் தெரியாது. அங்கே கூட்டிக்கொண்டு போய் வீட்டுக்குள்ள என்னைத் தனிய விட்டிட்டு பூட்டிப்போட்டுப போய்க் குடிப்பாங்கள். நான் வேலைக்காரி போல இருக்கவேணும். அங்கிருந்து காதில கடுக்கன் குத்திக்கொண்டு வாறவன் கையைப் பிடிச்சுக்கொண்டு என்னால போக முடியாது. போய் அடிவாங்க முடியாது.. என்னைப் போகச் சொல்லி கட்டாயப்படுத்தினால் நான் செத்துப்போயிடுவன் என்று ஏதேதோ காரணம் சொல்லிவிட்டு அழுதுகொண்டே போய்விட்டாள். இதற்கெல்லாம் அடிப்படைக் காரணம் சிறு வயது முதலே குடிப்பவர்களையும் ஆடம்பர வாழ்க்கையையும், தனிமையையும் வெறுத்தமைதான். அதனால் இதையும் யசோவின் மனம் ஏற்க மறுத்தது... தன்னுடைய மகள் இன்னும் குழந்தையாக இருப்பதை எண்ணித் தாயின் மனம் தவித்தது. எப்படி அவளைச் சம்மதிக்க வைக்கலாம் என்ற எண்ண அலைகள் தாயின் மனதை அரித்தது.

யசோவை பொறுத்தவரையில் தனக்கு வரவிருக்கும் கணவனைப் பற்றிய கனவுகள் பல இருந்தது. தன் கணவன் ஒரு குழந்தையைப் போல இருக்கவேணும். தன்னையும் ஒரு குழந்தையைப் போல பார்த்துக்கொள்ள வேணும்.. பணத்தை நேசிக்கக் கூடாது. பாசமாக இருக்க வேணும். தன்னுடைய குடும்பத்தைப்போல பிறரையும் நேசிக்கவேணும், எப்படிவும் என் கூடவே இருக்கவேணும். உணவு ஊட்டி விடணும், கையைப் பிடிச்சுக்கொண்டு கோவிலுகுப் போகணும், கணவனுடைய எல்லா வேலைகளையும் தானே செய்ய வேணும். கணவன் மடியில் தூங்க வேணும், இப்படி ஏராளமான ஆசைகள். சாகும்போது கூட ஒன்றாகவே சாகவேணும்... இவ்வாறு சொல்லெணாக் கற்பனைகளுடன் இருந்த அவளுக்கு இந்தச் சம்மந்தம் பேரிடியாக இருந்தமை ஆச்சரியம் இல்லை. இந்தத் திருமணம் மூலம் தன்னுடைய கனவுகள் யாவும் கலையப் போகின்றன என்று வருந்தினாள். தான் கற்பனையில் கண்ட கணவனாக ஜெயனால் இருக்க முடியுமா? தன் கனவுகள் நனவாகுமா? என்று வினாக்களை தனக்குள்ளே எழுப்பினாள். விடையின்றித் தவித்தாள்.

கண்ணால் வழிந்தேடிய கண்ணீர்த்துளிகளைத் துடைத்துவிட்டு எழுந்து தாயை நோக்கி நடக்க ஆரம்பித்தாள்.. சிறு வயது முதலே தன்னில் உயிராக இருந்த தாயிடம் அவ்வாறு கோபமாக நடந்து கொண்டதை எண்ணி மனம் வருந்தினாள். திருமணம் என்றால் பிரிவும் உண்டு என எண்ணிக்கொண்டு தன் சம்மதத்தைக் கூறினாள். அந்த விநாடி தாயின் வழிந்த நீரோடு தன் கனவுகளையும் சேர்த்து துடைத்துவிட்டாள் தன் பஞ்சுக் கரங்களால்...

# பொன்மொழி



இயற்கை என்றும், விதி என்றும் எதுவும் கிடையாது. கடவுள் என்ன நினைக்கிறாரோ அதுவே நடக்கும்.

சுவாமி விவேகானந்தர்

# இலக்கிய நயம்

## 43

கே.வி. குணசேகரம்

# கொல்லும் சினம்

**"தன்னைத் தான் காக்கின் சினம் காக்க; காவாக்கால் தன்னையே கொல்லும் சினம்"**

ஒருவர் தன்னைக் காத்துக் கொள்ளவேண்டு மானால் அவர் தன் சினத்தை அடக்குதல் வேண்டும். அடக்கா விட்டால் அச்சினம் அவரை அழித்துவிடும் என்கிறது திருக்குறள்.

பகவத்கீதையின் சாங்கிய யோகத்தில் உள்ள 62 ஆவது, 63 ஆவது சுலோகங்கள் சினத்தைப் பற்றி பின்வருமாறு கூறுகின்றன.

இந்திரிய விடயங் களைக் கட்டுப்படுத்த முடியாத மனிதனுக்குப் பற்று உண்டாகிறது. பற்று ஆசையாக மாறும். பின் அது அவாவாக மாறும். அதன் பின் அவா சினமாக வடிவெடுக்கும்.

சினத்தால் மனக் குழப்பமும், மனக் குழப்பத்தால் ஞாபக மின்மையும், ஞாபகமின்மையால் புத்திநாசமும், புத்திநாசத் தால் அழிவும் உண்டாகும்.

வள்ளுவர் வேதங்களையும் உபநிடதங்களையும் நீதி நூல்களை யும் எல்லாச் சமயங் களினதும் சாத்திர நூல்களையும் நன்கு ஆராய்ந்து அறிந்தபின்பே திருக்குறளை எழுதி-னார். அதனால் அவர் எழுதியவை யாவும் முக்காலத்திற்கும், முழு உலகத் தினருக்கும் பொருத்தமுள்ளதாக உள்ளன.

பாசிக்கிற இடத் திலும் கோபம் வராமல் காப்பவனே இனத்தைக் காப்பவனாகிறான். சினமானது முக மலர்ச்சியையும் பெருமதிப்பையும் இல்லாமற்செய்வ தோடு சம்பந்தப்பட்ட வனையும் அவனது குடும்பத்தையும் அழித்துவிடும். கோபப்படுபவர்களின் முன்னால் அவர்களின் குடும்பம் அழியும்.

மன உறுதியில்லாதவர்களும், பலவீனர்களும்தான் கோபப்படுகின்றனர். கோபம் அறிவை மறைத்து சம்பந்தப்பட்டவர்களை மன நோயாளியாக்கிவிடும். ஆகை யால் மனதை அடக்கிப் பொறுமையைக் காக்கப் பயிற்சி எடுத்தால் கோபத்தை இல்லாமல் செய்யலாம்.

ஆதவன் பட்டதாரி ஆசிரி யன். அறிவுதரும் நூல்களையெல்லாம தேடிக் கற்பவன். நல்ல பிரசங்கி. யார் எந்தக் கேள்வியைக் கேட்டாலும் விளக்கமாக விடைகூறக் கூடியவன். ஆனால் முன்கோபி. அதனால் மாணவர்களோ அல்லது பெரியவர்களோ திருப்பிக்கேட்டால் கோபத்துடன் ஏசுவான். மாணவர்களைத் தண்டிப்பான். மாணவர்கள் அவனைக் கண்டால் நடுங்குவார்கள். அதனால் அவன் கற்பிக்கும் பாடசாலையில் கற்பிக்கும் மாணவர்களது பெற்றோர் அடிக்கடி அவன் மீது புகாரிடுவார்கள். அதைப் பொறுக்க முடியாத அதிபர் ஆதவனை அழைத்துச் சொன்னார். " நீங்கள் ஒரு ஆசிரியர். ஆசிரி யர் என்பவர் மாணவனது தாய். ஒரு தாய் தனது அன்பான பிள்ளையின் மீது கொள்ளும் அன்பைவிட மடங்கு அன்பை ஆசிரி யர் தனது மாணவர்கள் மீது வைத்தல் வேண்டும். அன்பாலும் கருணையா லும் பாசத்தாலும்தான் மனங்களை ஆட்கொள்ளல் வேண்டும். உங்களது நடத்தையால் பிள்ளைகள் படிப்பை வெறுக்கிறார்கள். பாடசாலையை வெறுக்கி றார்கள். உங்களுக்குப் பல முறை இதைக் கூறியும் நீங்கள் கேட்பதாக இல்லை. அதனால் உங்களை இடமாற்றும்படி கூறிவிட்டேன். இடமாற்றம் வரும்வரை நீங்கள் ஓய்வு அறையில் இருங்கள். நீங்கள் ஏனைய ஆசிரியர்களையும், சமூகத்தவர்களையும் மதிக்காததால் அவர்கள் உங்களை மதிப்பதில்லை. அத்துடன் உங்களுக்குத் திருமண வயது வந்தும் யாரும் பெண்தர விரும்புகிறார்களில்லை. நீர் இப்பாடசாலைக்கு வந்தபோது உமது அறி வையும், அழகையும், உடலுறுதியையும் கண்டு விரும்பி எனது மகளுக்கு உம்மைத் திருமணம் செய்து வைக்கலாமென நினைத்தேன். எப்போதும் முற்கோபம் கொள்வோர் காலப்போக்கில் மனம் குழம்பி தன்நிலை அறியாதவர்களாகிவி டுவார்கள். உம்மைப் பார்க்கும் போது அந்த நிலைக்கு நீர் வந்துவிட்டதாக மக்களும் அதிகாரிகளும் கூறுகின்றனர். எனவே இனியாவது திருந்தப்பாரும்" என்றார் அதிபர். முற்கோபம் கொள்வோரைப் பற்றி வள்ளுவர் மிக அருமை யாகக் கூறியுள்ளார்.

# சிந்தியா ✉ பதில்கள்

✉ சிந்தியா! அவசரகாலச் சட்டம் நீக்கப்பட்டதால் மக்களுக்கு ஏற்படப்போகும் நன்மை தீமைகள் என்ன?

**எம்.ரணதீஸ்வரா, கொழும்பு.**

● இலங்கையில் அவசர காலச்சட்டம், பயங்கர வாதத் தடைச்சட்டங்களுக்கு முகங்கொடுத்த மக்களை இருக்கின்ற சட்டங்கள் தமக்காகப் பாதுகாக்கும் நியாயமும், தம்மால் எந்தளவிற்கு அனுபவிக்கப்படுகின்றது என்பது தெளிவற்றதாகவே உள்ளது.

இது மக்களைப் பொறுத்தவரை சின்னச் சின்ன விடயங்கள் கூட பெரிய பாதிப்புக்களாக வருகின்ற நிலைமையே உள்ளது. அவசரகாலச்சட்டம் நீக்கப்பட்டுள்ள நிலையில் அதனால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு விமோசனம் ஏதும் கிடைப்பதாக நம்புவதற்கு இல்லை. ஆகவே கத்திபோய் வாள் வந்த கதைதான்.

✉ சிந்தியா! கிறீஸ் மனித ர்கள் மனநோயாளிகளாமே?

**எஸ்.சுமி, சாவகச்சேரி.**

● அவர்கள் மன நோயாளிகளா? இவர்கள் மனநோயாளிகளா என்ற சிந்தனையே நம்மை மனநோயாளிகளாக்கி விடுமோ என்ற அச்சம் ஏற்படுகின்றது.

நான் அவர்கள் இவர்கள் என்று குறிப்பிட்டது யார் என்பதை நீங்கள் புரிந்துகொண்டால் இந்த மனநோயாளிச் சம்பவத் திலிருந்து நீங்கள் காப்பாற்றப்பட்டுவிட்டீர்கள் என்று நம்புகின்றோம்.

✉ சிந்தியா! முதியோரை மதிக்கும் பண்பு இன்றைய இளம் சந்ததியினரிடையே இல்லாமல் இருப்பது ஏன்?

**க.பிரதாபன், வவுனியா.**

● உங்களது கேள்வியில் இல்லாமல் இருப்பது என்று குறிப்பிடும் போது இல்லாமை என்கிறீர்களா? இருக்கின்றது என்கிறீர்களா?

ஆக இளம் சமுதாயத் தின் மீது குற்றங்களைச் சுமத்துகின்றது. ஒரு ஒழுக்கம் வளர்ச் சியடைவதைக் காணக் கூடியதாகவுள்ளது.

அன்று - இன்று என்று பார்ப்பதைவிடவும், இன்றைய பொழுதில் இளமையையும், முதுமை யையும் ஒப்பிடுகின்றபோது இளமையை விட முது மையே பொறுப்பற்று முன்னுதாரணம் தொலைத்து முட்டிமோதி நிற்கின்றது. இந்த இயலாமையே இளமை மீது குற்றச்சாட்டுக்களாக விழுகின்றதோ என்று எண்ணத் தோன்றகின்றது.

✉ சிந்தியா! ஆன்மீக வாதிகளின் உண்மையான அடையாளங்கள் எப்படி இருக்கும்?

**எச்.எம்.எம்.மஸ்னவி, புத்தளம்.**

● அடையாளங்களைத் தேடுகின்றவர்கள் ஆன்மீக வாதிகளாக இருக்க முடியாது. உங்களுக்கு வழிகாட்டுகின்ற ஒருவர் தன்னை மறந்துவிடுகின்றவராக மாறுகின்றபோது தனது அடையாளங்களையும், இழந்துவிடுகின்றார். ஆகவே உங்களுக்குள் இருக்கும் ஆன்மீக அடையாளத்தை உங்களால் பற்றிப் பிடிக்கின்ற போது நீங்கள் எவ்வாறு இருப்பீர்களோ, அதையே நீங்கள் தேடுகின்ற அடை யாளமாகக் காண்பீர்கள். உங்களுக்குள் தேட முடியாததை இன்னொருவரிடம் எதிர்பார்ப்பது சரியானதல்லதே!

✉ சிந்தியா! கூட்டுக் குடும்ப வாழ்க்கையானது அருகி தனிக்குடும்ப வாழ்வை விரும்புவதற்குக் காரணம் என்ன?

**ந.பகீரதா, திருகோணமலை.**

● இங்கு பொருளாதாரச் சுமையை சுமக்கின்றவர்கள் யார் என்ற கேள்விக்கு விடை காணப்பட வேண்டியதாக இருக்கின்றது. கூட்டுக் குடும்பத்தில் கூட்டுப் பொறுப்பிருந்தால் அது சாத்தியமாகும். பொறுப்புக்களைத் தட்டிக் கழிக்கும் கூட்டுக் குடும்ப உறுப்பினர்களும் கூட்டுக் குடும்ப வாழ்வும் சாத்தியமில்லை.

பொருளாதாரச் சுமை உதைத்துத் தள்ளும்போது அன்பு, உறவு, விருப்பம் எல்லாமே கேள்விக் கணைகளாகிவிடுகின்றது. ஆகவே கூட்டுக் குடும்பத்தில் இருந்து விடுதலை பெறுகின்ற குடும்பங்களே தனிக் குடும்பங்கள் என்றாகிவிட்டது.


✉ சிந்தியா! அண்மையில் உங்களை அதிர வைத்த சம்பவம் எது?

**ம.வாணி, நீர்கொழும்பு**

● பால்வெளியில் நான்காயிரம் ஒளியாண்டுத் தூரத்துக்கு அப்பால் வைரத்தினாலான உலகம் ஒன்று இருப்பதாக வானி யல் ஆராய்ச்சியாளர்கள் தெரிவித்த செய்தியைக் குறிப்பிடலாம்.

ஏனென்றால் பூமியில் எண்ணெய் வளத்துக்காக எத்தனையோ அழிவுகளை நடத்திக்கொண்டிருக்கின் றார்கள். வளங்களை அபகரிக்கும் மாபியாக்களாக வலிமையுடைய சக்திகள் உலகத்தை விரட்டிப் போட எத்தனிக்கின்றார்கள். இந்தத் திரைளயங்களிலிருந்து உலகம் விடுபட வேண்டுமாக இருந்தால் எண்ணெய் வளம் மிக்க ஒரு பூமி அல்லது தங்கம், வைரம் நிறைந்த ஒரு பூமி அல்லது புனித நீரும், பணமும் தாமே உற்பத்தியாகும் ஒரு உலகம் நமக்கு அண்மையில் உருவாக வேண்டுமென நான் நினைத்தேன். இப்போது வைரத்தினாலான உலகம் இருப்பதாகக் கூறுகிறார்களே. அங்கே சென்று உடைத்துக்கொண்டு வருவதற்கு அல்லது உரிமை கொண்டாடுவதற்கு இவர்கள் முயற்சிப்பார்கள். ஆனால் நான்காயிரம் ஒளியாண்டுகள் தூரம் என்பது அதை சாத்தியப்படுத்தாது.

அடுத்த சுற்றிலாவது நமக்கு நிலவு இருக்கும் தூரத்தில் அந்த வைர உலகம் வந்து நிற்கட்டும். அப்போதாவது இந்தப் பூமி அமைதியாகட்டும்.



**04 ஆம் பக்கத் தொடர்ச்சி... மர்மமனிதர்கள்...**

எனவே அரசு மீதான குற்றச்சாட்டும், மர்மமனிதர்களைப் படையினர் பாதுகாக்கின்றனர் என்ற குற்றச்சாட்டும் அநாவசியமானது. உண்மைக்குப் புறம்பானது என்றும், இது எதிர்க்கட்சிகளின் அரசியல் காழ்ப்புணர்ச்சியின் குற்றச்சாட்டு என்று அரசபக்க நியாயங்களும் கவனத்தில் கொள்ளப்படவேண்டியதால் அதை நிராகரிக்கவும் முடியாது.

அப்படியானால் அரசும் இல்லை, எதிர்க்கட்சிகளும் இல்லை. மக்கள் மத்தியிலும் இப்படி அரசுக்குச் சவாலாக செயற்படக்கூடிய தரப்புக்களும் இல்லை என்றால் இந்த மர்ம மனிதர்கள் யார், அந்நிய சக்திகளா என்ற கேள்வி எழுகின்றது. அப்படியென்றால் அவர்களுக்கு படையினர் ஏன் அடைக்கலம் கொடுக்கின்றனர்.

இரண்டு மாதத்துக்கும் மேலாக அட்டகாசம் புரியும் மர்மமனிதர்கள் விடயத்தில் பொலிசாரோ, இராணுவமோ ஒருவரைக் கூட பிடித்து மக்களுக்கு நம்பிக்கையை ஏற்படுத்தாதது ஏன்? மக்கள் பிடிக்கும் சந்தேக நபர்கள், மனநோயாளிகள் என்று கூறுவோர் அவர்கள் எந்த பகுதியைச் சேர்ந்தவர்கள், அவர்கள் மன நோயாளிகளாக இருந்தால் குறிப்பிட்ட பகுதிக்கு ஏன், எப்படி வந்தார்கள். அவர்களது உறவினர்கள், தெரிந்தவர்கள் யார் என்பது பற்றி மக்களுக்குத் தெளிவுபடுத்தாதது ஏன்? இந்தக் கேள்விகளுக்கெல்லாம் விடைதெரியவில்லை.

ஆசியாவில் மனநோயாளிகள் அதிகம் நடமாடும் அல்லது நடமாடிய நாடு இலங்கை என்று சொல்லுமளவுக்கு நிலைமை சென்றுகொண்டிருக்கின்றது. ஆகவே வெறுக்கத்தக்க சூழலைத் தடுத்து உண்மையை நாட்டு மக்களுக்கு தெளிவுபடுத்தி பிரச்சினைக்கு முற்றுப்புள்ளியிடும் பொறுப்பு இந்த அரசுக்கே உண்டு.

இதை ஜனாதிபதி செய்ய வேண்டும். ஜனாதிபதி நினைத்தால் இந்தப் பிரச்சினையை ஒரு இரவில் முடிவுக்குக் கொண்டு வரமுடியும் என்று இந்த நாட்டு மக்கள் நம்புகின்றனர்.

அவ்வாறான சூழலிலேயே மக்கள் மத்தியில் எற்பட்டிருக்கும் அச்சத்தையும் சந்தேகங்களையும் இல்லாதொழித்து அரசு-படையினர்-மக்கள் ஆகியோரிடையே மீண்டும் நல்லுறவை ஏற்படுத்த முடியும். வடக்கு-கிழக்குப் பகுதிகளில் ஜனாதிபதியால் பெற்றுக்கொடுக்கப்பட்ட அமைதியைப் பாதுகாப்பது அவசியமாகும்.

**18 ஆம் பக்கத் தொடர்ச்சி... மட்டக்களப்பு..**

தற்போது, பாலங்களும், வீதிகளும் அபிவிருத்தி செய்யப்பட்டுக் கொண்டு வருகின்றது. போக்குவரத்து செய்வதில் எந்தவொரு தடைகளுமில்லை. மட்டக்களப்பிலிருந்து திருகோணமலைக்கு கடந்த காலங்களில் பயணத்தினை மேற்கொள்வதற்கு ஏழு, எட்டு மணித்தியாலங்கள் எடுக்கும். தற்சமயம் வெருகல் பாலமும் கட்டப்பட்டு நிறை வடையும் நிலைமையில் உள்ளது. கங்கையினை கடப்பதற்கு அதிக நேரம் காத்திருக்க வேண்டிய அவசியமில்லை. கஷ்ரங்களை அனுபவிக்காமல் இரண்டு மணித்தியாலத்தில் நிம்மதியாக பயணத்தினை மேற்கொள்ளலாம். இப்போது எங்களுக்கு மிகவும் சந்தோசமாக இருக்கின்றது என்கிறார் அந்த மூதாட்டி.

கணபதிப்பிள்ளை தங்கராசா இலங்கை போக்குவரத்து சபையின் சாரதி. அவர் சமகால வீதி அபிவிருத்தி பற்றிக் கூறுகை யில், நான் 1978ஆம் ஆண்டு சாரதியாக வேலைக்குச் சேர்ந்தேன். அந்தக் காலப் பகுதியில் வீதிகள் மிகவும் பழுதடைந்த நிலையில் காணப்பட்டதுடன், இவ்வீதிகள் கால்நடைகள் கூட பயன்படுத்தக் கூடிய நிலையில் இருக்கவில்லை.

மட்டக்களப்பிலிருந்து வெருகல் வரை பஸ்சில் மக்களை ஏற்றி மிகவும் குறைந்த வேகத்தில் தான் ஓட்ட முடியும். திருகோணமலை செல்லும் மக்கள் வெருகல் கங்கையை கடப்பதாயின் முதலையின் பிடியில் அகப்படாமல் பயந்து, பயந்து பாதையினூடான கடந்து கால் நடையாக மூதூர் பகுதிக்குச் செல்வார்கள்.

மட்டக்களப்பு வீதி மட்டுமல்ல ஈச்சிலம்பற்று, கிளிவெட்டி, புடவைக்கட்டு, சேருநுவர, கந்தளாய், கிண்ணியா, திருகோணமலை போன்ற வீதிகள் அனைத்தும் உடைந்து தகர்ந்த நிலைமையைத்தான் காணக்கூடியதாக இருந்தது.

அடர்ந்த காட்டுப் பகுதிகளில் யானைகளின் நடமாட்டமும் இவ்வீதிகளில் (கிருமிச்சை வாகரை போன்ற இடங்களில்) காணப்படும். இப்படியான வீதிகளில் மாலை வேளையில் வாகனங்கள் பழுதடைந்தால் சொல்ல முடியாத துன்பத்தை அனுபவிக்கவேண்டி இருக்கும்.

வாகனங்கள் இவ்வீதிகளில் அடிக்கடி பழுதடைவதனால் சாரதிகளாகிய நாங்கள் பெரும் கஷ்ரங்களையும், இன்னல்களையும் பயணத்தின்போது எதிர்கொண்டுள்ளோம்.

இப்போது, புதிய வேலைத்திட்டத்தின் கீழ் அனைத்து பிரதான வீதிகளும் அபிவிருத்தி செய்யப்பட்டுக் கொண்டு வருவதுடன், வீட்டின் தரைகளுக்கு சீமெந்து பூசப்பட்டிருப்பது போன்று மிகவும் அழகான முறையில் காப்பெற் வீதிகளாக மாற்றம் செய்து கொண்டிருக்கின்றார்கள். எதிர்வரும் காலங்களில் மட்டு நகரிலிருந்து திருமலைக்கு சொகுசு பஸ்களில் உல்லாசமாக பயணிக்கலாம். வீதி அபிவிருத்தி செய்து கொண்டிருக்கும் போதே மட்டக்களப்பு வெருகல் ஊடாக இன, மத, பேதமின்றி லங்கா பட்டணம் செல்லும் சுற்றுலாப் பயணிகளின் வருகை அதிகரித்துக் காணப்படுகின்றது. இன்றைய கால கட்டத்தில் கிண்ணியா வெருகல் ஊடாக மட்டக்களப்பு திருமலை நவீன வீதியில் அதிக எண்ணிக்கையான வாகனங்கள் பயணிக்கின்றன என்பதை பார்க்கும் போது மிகவும் மகிழ்ச்சியாகவுள்ளது என்றார்.

**08 ஆம் பக்கத் தொடர்ச்சி... தூக்குக்கயிற்றை...**

ஆக முருகன்,சாந்தன், பேரறிவாளன் ஆகிய மூவரும் குற்றவாளிகளே என்பதற்கு அப்பால் ஆழமான அரசியல் நோக்கங்களே இவர்களின் தூக்கு நிறைவேற்றத் திகதி அறிவிப்புக்கு காரணமாயுள்ளது என்பது முற்றிலும் உண்மையே.

1990ஆம் ஆண்டு சென்னை சூளைமேட்டில் வைத்து புலிகளால் சுட்டுக் கொல்லப்பட்ட ஈ.பி.ஆர்.எல்.எப் செயலாளர் நாயகம் தோழர்.பத்மநாபா உட்பட்ட 16 முக்கியஸதர்களின் கொலையை திட்டமிட்டு நடாத்திய புலிகளின் குழுவினரே ராஜீவ் காந்தியின் கொலைக்கும் திட்டம் தீட்டி நிகழ்த்தியவர்கள் என்பது ராஜீவ் காந்தியின் கொலை விசாரணையின் போது தெரிய வந்ததாக, அப்போது இந்த விசாரணையை நடாத்திய அன்றைய சி.பி.ஐ. தலைவர் கார்த்திகேசன் தெரிவித்திருந்தார். அதேவேளை பத்மநாபா உட்பட்ட 16 பேரின் கொலையை செய்தவர்கள் அங்கிருந்து தப்பிச்சென்று தங்கியிருந்த வீட்டை சென்னை பொலீசார் சுற்றிவளைழத்து அவர்களை கைது செய்ய முனைந்தபோது மேலிடத்தின் உத்தரவின் பேரில் கைது கைவிடப்பட்டதும் அன்று அவர்கள் கைது செய்யப்பட்டிருந்தால் ராஜீவ் காந்தியின் கொலை நிகழ்ந்திருக்காமல் இருந்திருக்கலாம் என அன்று தகவல்கள் வெளியாகி இருந்ததும் கவனிக்கப்பட வேண்டியது.

இன்று இந்த மூவரின் தூக்குத்தண்டனை நிறைவேற்றத்திற்கு எதிராகக் ஓங்கிக் குரல் கொடுப்பவர்கள் குறிப்பாக தமிழகத்தின் உணர்வாளர்கள் படுகின்ற புலிகளின் ஆதரவாளர்கள் புலிகள் செய்த ஆயிரக்கணக்கான அராஜகக் கொலைகளை கண்டித்து அவற்றை தடுத்து நிறுத்த முயன்றதாக வரலாறு இல்லை. குறிப்பாக இவர்களுக்குத் தெரிந்த அமிர்தலிங்கம், யோகேஸ்வரன், நீலன்.திருச்செல்வம்,லக்ஸ்மன் கதிர்காமர், கேதீஸ்வரன்,அப்துல் மஜீத், மகேஸ்வரி வேலாயுதம்... (இன்னும் பலர்... பலர்...), போன்ற ஜனநாயகவாதிகளின் கொலைகளின் போது கூட இவர்கள், இப்படி எதிர்த்துக் குரல் எழுப்பவில்லை. அனைத்திற்கும் மேலாக வன்னி இறுதி யுத்தத்தின் போது புலிகளால் மனிதக் கேடயங்களாக்கப்பட்டு போர் முனையில் தடுத்து நிறுத்தப்பட்ட மக்களைக்காப்பாற்றக் கூட இந்தச் சீமான்,வைகோ, நெடுமாறன் போன்றவர்கள் முன்வரவில்லை.

அந்த வேளையிலும் புலிகளுக்கு மேலும் உசுப்பேற்றி அவர்களதும்,மக்களதும் அழிவிற்கு காரணமானவர்கள், அந்த அழிவுகளை வைத்து இன்றும் அரசியல் நடாத்துபவர்கள், இந்த மூவரின் தூக்குக்கு எதிராக ஓங்கிக் குரல் கொடுப்பதை யாரும் கணக்கிலெடுக்கப் போவதில்லை. ஆனால் ராஜீவ்காந்தி கொலையில், பயன்படுத்தப்பட்ட அம்புகளாகி தமது வாழ்வையும் அழித்து இன்று மரணத்தின் விளிம்பில் நிற்கும் முருகன், சாந்தன்,பேரறிவாளன் மற்றும் நளினி போன்றவர்களைப் போல, தன்னையே எரித்துக்கொண்ட அப்பாவி முத்துக்குமாரைப்போல ஏன் இந்த சம்பவத்தின் போது தற்கொலை செய்து கொண்ட இளம் மாணவி செங்கொடிபோல மேலும் இளம் இரத்தங்கள், இவர்களின் உணர்ச்சி வலையில் சிக்கிவிடுமோ என்னபதுதான் யதார்த்தவாதிகளின் கவலை. ராஜீவ் காந்தி உட்பட புலிகளால் திட்டமிட்டு கொல்லப்பட்ட அனைவரும் அவர்களது தலைமையால் தூக்குத்தண்டனை விதிக்கப்பட்டே பின்னர் கொல்லப்பட்டவர்கள் என அவர்களது இயக்க வரலாறு சொல்கிறது. ஆக தூக்குத்தண்டனை விதிக்கப்பட்டவர்கள் எல்லாம் கொல்லப்பட வேண்டியவர்களே என்கின்ற அந்தப் புலிசித்தாந்தத்தை அவர்களது ஆதரவாளர்கள் என்று சொல்பவர்கள் இன்று மறந்துவிட்டாலும், இவர்களது இந்த மறப்பு நிரந்தர மறப்பாக இருந்தால் மகிழ்ச்சியே.

முருகன்,சாந்தன்,பேரறிவாளன் மூவரும் குற்றம் செய்துள்ளார்களா.....? இல்லையா......? என்பதை எல்லாம் ஒதுக்கி வைத்துவிட்டு, அவர்களது 21 ஆண்டு கால சிறைவாசம் கணக்கில் கொள்ளப்பட வேண்டும். அத்துடன் எந்தக் குற்றத்துக்கும் மரண தண்டனை கூடாது என்பது நாகரிக சமுதாயத்தின் இலட்சியமாக்கப்பட்டு, அதன் அடிப்படையில் இவர்களது தண்டனை நீக்கப்பட்டால், இந்தியா கற்கால காட்டுமிராண்டித்தனச் சிந்தனையின் பிடியில் சிக்கி கிடக்கும் நாடு அல்ல என்பது உலகிற்கு உணர்த்தப்படும்.

**05 ஆம் பக்கத் தொடர்ச்சி... தமிழகத்தின்...**

குஜராத் முதல்வர் நரேந்திர மோடி முன்னிலையில் தலைமைச் செயலர் மகேஷ்வர் சாகுவும் பேர்ஜோ சித்ரோ நிறு வன துணைத் தலைவர் பிரடிக் ::ப்ரேயும் ஒப்பந்தத்தில் கையொப்பமிட்டனர்.

ஒப்பந்தப்படி பிரெஞ்ச் நிறுவனம் குஜராத்தில் 4000 கோடி ரூபா முதலீட்டைச் செய்கிறது. தொழிற்சாலை அமைப்பதற்காக குஜராத் அரசு 584 ஏக்கர் நிலத்தை லீஸ் அடிப்படையில் வழங்குகிறது. அகமதாபாத் நகரிலிருந்து சுமார் 40 கி.மீ. தொலைவில் அமைந்துள்ள சனாந்த் என்ற இடத்தில் தொழிற்சாலை அமையவுள்ளது. ஆரம்ப கட்ட உற்பத்தியாக வருடத்துக்கு ஒரு இலட்சத்து அறுபத்தையாயிரம் கார்கள் தயாரிக்கப்படவுள்ளன.

பேர்ஜோ சித்ரோ நிறுவன தலைவர் Philippe Varin, தொழில் முயற்சிகளுக்குத் தேவையான உதவிகளை மிகத் துரிதமாகச் செய்து கொடுப்பதில் குஜராத் அரசு முதலிடத்தில் உள்ளது. இங்குள்ள நிர்வாக உட்கட்டமைப்பு ஏற்பாடுகள் அணுகுவதற்கு ஏற்ற வகையில் மிகவும் எளிமையாக உள்ளன என்று தெரிவித்துள்ளார்.

புதிய அரசில் தமிழக முதல்வரின் முதலாவது சறுக்கலாகக் கூறப்படுவது சமச்சீர் கல்வி விவகாரம்தான். ஆனால் அதை அவரால் சரிப்படுத்தி விடமுடியும். (ஓரளவுக்கு சரிப்படுத்தியும் விட்டார்.) ஆனால், இந்தத் தொழிற்சாலை விடயம் அப்படியல்ல. சறுக்கல் சறுக்கல்தான்! இதை மீண்டும் கொண்டுவர முடியாது! (குஜராத் அரசு சொதப்பினால்தான் சான்ஸ் உண்டு)

தமிழக அரசு நாலைந்து அமைச்சர்களையாவது லபக்கென்று பிடித்து குஜராத் பக்கம் ட்ரெயினிங்குக்கு அனுப்பி வைக்கலாமே.

# இந்தவாரம் உங்கள் பலன்

(08.09.2011 தொடக்கம் 14.09.2011 வரை **ஸ்ரீதர்**

## மேடம்

இந்த வாரம் உங்களுக்கு சுமாரான பலன்களே உண்டு. செலவுத்தானம் அதிகமாக இருக்கும். எதிலும் ஊக்கமும் உற்சாகமும் இருந்தாலும் வேலைப்பளு அதிகமாகவே இருக்கும். வீட்டைச் சீராக்குவதில் அக்கறை காட்டுவீர்கள். எதிர்பாராத வகையில் சில உதவிகள் கிடைக்கலாம். முடியாத சில வேலைகளால் கவலைகள் அதிகரிக்கும். தொழில் ஸ்தானத்தில் பதவி, பூமி, இயந்திரங்கள் தொடர்பான விடயங்கள் சாதகமாக அமையும். நீங்கள் ஒன்று நினைக்க நடந்தது இன்னொன்றாகவே இருக்கும். போட்டி மனப்பான்மையும் எதிர்ப்புக்களும் நிறையவே உண்டு. பணவரவுகள் பற்றாக்குறையாகவே இருக்கும். மாணவர்கள் கல்வியில் நாட்டமுறுவர். கலைஞர்கள், வர்த்தகர்கள் இலாபம் பெறுவர்.

அதிர்ஷ்ட நாள்: வெள்ளி.

## இடபம்

இந்த வாரம் உங்களுக்கு நல்ல பலன்கள் நடைபெறவுள்ளன. எக்காரியத்தையும் பொறுப்போடு செய்வீர்கள். பல வழிகளிலும் தேவையில்லாத செலவுகள் ஏற்படும். எதிர்பார்த்தபடியே காரியங்கள் சுலபமாக நிறைவேறும். பெண்களால் நன்மையுண்டு. தொழில் ஸ்தானத்தில் பொறுப்புடன் நடந்துகொண்டாலும் நல்லபெயர் எடுக்கமுடியாது. பாராட்டும் வெகுமதியும் கிடையவே கிடையாது. அடிக்கடி பொறுமை இழந்து காணப்படுவீர்கள். வீணான அவப்பெயர் கேட்க வாய்ப்புண்டு. மற்றவர்களை விமர்சிக்க வேண்டாம். வீட்டிலுள்ளவர்களுக்கு ஆடை ஆபரணங்களைக் காட்டுவீர்கள். சுபகாரியங்கள் அனுகூலமாகும். அதிர்ஷ்ட நாள்: புதன்.

## மிதுனம்

இந்த வாரம் உங்களுக்கு மங்களகரமான வாரமாகும். மிகுந்த இலாபத்துடன் பணவரவுகள் உண்டு. கடன் மீதிகள் வசூலாகம். அதிக செலவுவருமென நனைத்த ஒரு காரியம் குறைந்த செலவுடன் முடிவுறும். ஆனால் வீண் செலவுகள் ஏற்படும். தொழில் ஸ்தானத்திலே நல்ல பெயர் கிடைக்கும். மேலதிகாரிகள் பாராட்டுவர். சில வேளைகள் நெருக்கடி கொடுத்தாலும் நன்மையிலும் முடியும். மனதில் மகிழ்ச்சி குடிகொள்ளும். இல்லத்தில் சுபகாரியங்களுக்கான பேச்சுக்கால் இடம்பெறும். மாணவர்கள் கல்வியில் நாட்டமுறுவர். எந்தக்காரியமும் நினைத்ததைவிட நன்றாகவே நடக்கும். எட்டிக்குப் போட்டியாக நடந்தவர்கள் வெட்கித் தலைகுனிவர். உறவினர்கள் உங்களைப் பார்த்துப் பொறாமைப்படுவர். அதிர்ஷ்ட நாள் புதன்.

## கடகம்

இந்தவாரம் உங்களுக்கு நல்ல பலன்கள் நடக்கும். இல்லத்தில் மங்களகரமான காரியங்கள் இடம்பெறும். பொது நிகழ்வொன்றில் மதிப்பு மரியாதைகள் உயரும். நண்பர்கள், உறவினர்கள் மத்தியில் செல்வாக்கு அதிகரிக்கும். பிள்ளைகளால் நல்ல பெயர் கிடைக்கும். தொழில் ஸ்தானத்தில் திட்ட மிட்டவாறே எல்லாம் நடக்கும். எதிர்பாராத வகையில் பணவரவு-கள் கிடைக்கும். தொழில்ரீதியாகப் பயணங்களும் நிகழும். உங்களுக்கு வரவேண்டிய காசு வீடு தேடிவரும். ஆனால் உங்களது ஞாபகமறதியால் அவலப்படவும் நேரிடும். என்றாலும் பாதிப்பில்லை. மாணவர்கள் கொஞ்சம் கவனக்குறைவாக இருந்தாலும் படிப்பில் ஆர்வம் இருக்கும். கலைஞர்கள், வர்த்தகர்கள் கௌரவம் பெறுவர். அதிர்ஷ்ட நாள்: சனி.

## சிங்கம்

இந்தவாரம் உங்களுக்கு நன்மையான வாரமாகும். எதிர்பாராத வகையில் பண-வரவுகள் உண்டு. திட்டமிட்டபடியே காரியங்கள் நடந்து நன்மையளிக்கும். உடல்ரீதியான உபாதைகள் சிறிதாக இருக்கும். எனினும் பாதிப்புக்கள் இல்லை. எண்ணிய காரியங்கள் அனைத்தும் சுலபமாக நிறைவேறும். நீண்டநாள் வராது. இழுத்தடித்த காசு வந்து சேரும். தூரத்திலிருந்து நல்ல சேதி பறந்துவரும். வருமானம் அதிகரிப்பால் கையில் காசு புரளும். கடன் பிரச்சினைகள் முடிவுக்குவரும். குடும்பத்தில் சுபகாரியங்களுக்கான பேச்சுக்கால் ஆரம்பமாகும். சரித்திரப் பிரசித்திபெற்ற கோயில் திருவிழாவுக்குப் போய்வருவீர்கள். நிலம் பூமி சேரும். அதிர்ஷ்ட நாள் ஞாயிறு.

## கன்னி

இந்தவாரம் உங்களுக்குச் சங்கடமான வாரம். பொறுமை, விட்டுக்கொடுக்கும் தன்மை, நேர்மை, நீதி, நியாயம் இவற்றைக் கடைப்பிடித்தால் கொஞ்சம் நல்லது நடக்கும். மிக நீண்ட யோசனைக்குப் பின்பே காரியங்களைச் செய்ய வேண்டும். அவசரப்படக் கூடாது. வீண் அலைச்சல்கள் ஏற்படும். அடிக்கடி தலைச்சுற்று, மயக்கம் வரப்பார்க்கும். தொழில் ஸ்தானத்தில் அனுமானம் ஏற்பட வாய்ப்புண்டு. ஓய்வு கிடைப்பது அருமையாகவே இருக்கும். ஒரு வேலையும் முடியாமல் எல்லாம் பாதியிலேயே முடிந்துவிடும். எதிர்பாராத விதத்தில் கொஞ்சம் பணம் வந்து சேரும். ஆனால் அதற்கு உடனே செலவும் வந்துவிடும். புதிதாக எதுவும் தொடங்க வேண்டாம்.

அதிர்ஷ்ட நாள் வெள்ளி.

## துலாம்

இந்த வாரம் உங்களுக்கு மங்களகரமான வாரம். நீங்கள் நினைத்தது நிறைவேறும். திட்டமிட்டபடியே எல்லாம் நடக்கும். குடும்ப உறுப்பினர்களிடையே எல்லாம் நடக்கும். குடும்ப உறுப்பினர்களிடையே மதிப்பு உயரும். ஊக்கமும் உற்சாகமும் உங்கள் சொத்தாகும். தொழில் ஸ்தானத்தில் மேலதிகாரிகளின் நன்மதிப்பையும் பெறுவீர்கள். ஆனால் பாதிப்பில்லை. தகப்பனார் வழியில் உதவி கிடைக்கவிருக்கிறது. அரசாங்க அலுவல்கள் சாதகமாக முடிவுக்கு வரும். சமூகத்தில் உங்களுக்கு மதிப்பு மரியாதை கிடைக்கும். மாணவர்கள் நன்கு படிப்பார்கள். இல்லத்தில் சுபகாரியங்களின் பேச்சுக்கால் கிடைக்கும். கலைஞர்கள், வர்த்தகர்கள் பெரும் இலாபமீட்டுவர். அதிர்ஷ்ட நாள்: செவ்வாய்

## விருச்சிகம்

இந்த வாரம் உங்களுக்கு நல்ல சிறப்பான வாரமாகும். கையில் தாராள-மாகப் பணம் புரளும். சமூகத்தில் மதிப்புடன் உயர்ந்தவராகக் கணிக்கப்படுவீர்கள். தெய்வ தரிசனம் உண்டு. வீணான செலவுகளால் கோபப்படுவீர்கள். ஆனால் குடும்ப அங்கத்தவர்களால் மகிழ்ச்சி கிடைக்கும். ஒருவருக்கொருவர் பிணை நிற்க வேண்டாம். விபத்து வரப்பார்க்கும். தொழில் ஸ்தானத்தில் பாராட்டும் கிடைக்கும். நிலம் சம்பந்தமான வழக்கு முடிவுக்கு வரும் வாய் சாதுரியத்தினால் வெற்றியடைவீர்கள். நீங்கள் திட்டமிட்டபடியே எல்லாம் நிகழும். நாக்குக்கு ருசியாகச் சாப்பிட விரும்பவீர்கள். கலைஞர்கள், வர்த்தகர்கள் பெரிய அளவில் இலாபமீட்டுவர். அதிர்ஷ்ட நாள்: வியாழன்.

## தனுசு

இந்த வாரம் உங்களுக்கு சுபீட்சமான வாரமாகும். எதிர்பார்த்ததைவிடக் கூடுதல் பணம் கையில் கிடைக்கும். புதிய வேலைகளால் இலாபமும் அதிகரிக்கும். வியாழபகவான் நல்ல பலன்களை அளிக்க தட்சணாமூர்த்தியைக் கும்பிடவேண்டும். தொழில் ஸ்தானத்தில் குழப்பங்கள் வரப்பார்க்கும். புத்தியாக நடந்துகொள்ளவும். செய்காரியங்கள் எல்லாம் சுலப-மாக முடியும். திட்டமிட்டவாறே யாவும் நடைபெ-றும். தொழில்ரீதியாக நிறையப் பணம் வந்து சேரும். யாத்திரை போகும் பலனும் கிடைக்கும். எதிர்பாராமல் யாவும் கிடைக்கும். வெளிநாட்டிலிருந்து வரும் நற்செய்தி கிடைக்கும். மாணவர்கள் கல்வியில் நாட்டமுறுவர். வர்த்தகர்களுக்கு நல்ல இலாபம் கிட்டும். அதிர்ஷ்ட நாள்: செவ்வாய்.

## மகரம்

இந்த வாரம் கொஞ்சம் கஷ்டமான வாரமாகும். வீண் அலைச்சல் நம்பிக்கையின்மை, இலாபமில்லாத வேலைகள். ஆட்டிப்படைக்கும். சேமிப்புப் பணம் கரையப்போகிறது. கவனமாகச் செலவு செய்யவும். செய்காரியங்கள் அனைத்தும் தாமதமாகும். தொழில் ஸ்தானத்தில் கெடுபிடிகள் உருவாகும். வீணாகக் கெட்ட பெயர் வாங்க வேண்டிய சூழ்நிலைவரும். அடிக்கடி கோபமும் வரும். நண்பர்கள் உதவிசெய்ய மாட்டார்கள். உபத்திரமே கொடுப்பர். சிறிது சிறிதாகச் சேமித்த பணம் கையைவிட்டுப் போகலாம். குடும்ப உறுப்பினர்கள் தொல்லை கொடுப்பர். மாணவர்கள் படிப்பிற் கவனஞ் செலுத்த மாட்டார்கள். நீண்டநாள் ஆசை நிறைவேறுவது போல் வந்து கடைசியில் குழம்பிவிடும்.

அதிர்ஷ்ட நாள்: வெள்ளி.

## கும்பம்

இந்த வாரம் உங்களுக்கு நன்மை தரும் வாரமாகும். நினைத்தது நடக்கட்டும். மனம் மகிழ்ச்சியால் நிரம்பி வழியும். குடும்ப உறுப்பினர்கள் ஒத்துழைப்பு நல்குவர். மற்றவர்களின் பேச்சைக் கேட்க வேண்டாம். தொழில் ஸ்தானத்தில் குறை கேட்கவேண்டி வரும். திட்டமிட்டவாறே எல்லாம் நிகழும். மேலதிகாரிகளின் கோபத்துக்கு ஏட்டிக்குப் போட்டியாகச் செயற்பட்டவர்கள் செயலிழந்து நிற்பர். காரியங்கள் எல்லாமே சிறப்பாக முடிவடையும். நண்பர்கள், உறவினர்களின் உதவி கிடைக்கும். மாணவர்கள் கல்வியில் கவனமாகவே இருப்பர். பெண்களுடன் அளவாகப் பேசவும் எதிலும் அவசரம் வேண்டாம். அதிர்ஷ்ட நாள்: வியாழன்.

## மீனம்

இந்த வாரம் உங்களுக்குச் சிறிது சங்கடமான வாரம். செலவுகள் அதிகமாகிக் கடன்பட நேரிடும். நம்பியவர்கள் உற்ற நேரத்தில் கைவிட்டு விடுவார்கள். முன்னேறவே இடமில்லை. தடைகள், தாமதங்களால் பணவரவும் மிகக் குறைந்தே காணப்படும். தொழில் ஸ்தானத்தில் மறைமுக எதிரிகளால் ஆபத்து வரும். மேலதிகாரிகள் இரக்கமின்றி அரக்கத்தனமாக நடந்துகொள்வார்கள். நண்பர்களும் உறவினர்களும் உதவுமாப் போல் நடிப்பர். மாணவர்கள் கேளிக்கைகளில் ஈடுபடுவர். தெய்வ தரிசனம் மட்டுமே அமைதி தரும். புதிய முயற்சிகள் வெற்றியைத் தரும். வாழ்க்கையில் அதிருப்தி ஏற்பட்டு விரக்தி உண்டாகும். பெற்ற தாயை வணங்கிக் கொள்ளவும்.

அதிர்ஷ்ட நாள்: ஞாயிறு.

# காதிலை பூ கந்தசாமி



## நோட்டீஸ் பலகை

நான் சொல்வதெல்லாம் பொய்
பொய்யைத் தவிர வேறொன்றுமில்லை
— காதில பூ கந்தசாமி —

**வணக்கமுங்கோ! உங்களுக்காக கிறீஸ் மனிதனைப் பற்றிச் சொல்ல வேணும் எண்டு நானும் தேடினேனுங்கோ. என் பிடியிலையும் அவன் பிடிபடயில்லையுங்கோ. 'கழுதை கெட்டால் குட்டிச்சுவர்' எண்ட மாதிரி முத்தண்ணாவையே போய் பிடிச்சிட்டேனுங்கோ.**

**நான்:-** என்ன முத்தண்ணா என்ன இந்த கிறீஸ் மேன்களின்ர தொல்லை ஓய்ந்தபாடாக இல்லையே.

**முத்து:-** எப்படி ஓயும். எல்லாப்பேரும் யாரிட்டையும் பிடிபடக்கூடாதெண்டுதானே கிறீஸ் பூசிக்கொண்டு திரியினம்.

**நான்:-** நீங்கள் பலபேரைச் சொல்லுறியள் போல விளக்கமாகச் சொல்லுங்கோவன்.

**முத்து:-** பரவாயில்லையே டக்கெண்டு பிடிச்சிட்டீர். உந்த கிறீஸ்மேன் இரவில வாறான் வீட்டைத் தட்டுறன். பொம்பிளையளைப் பிடிக்கிறான், மார்பில கீறுறான், ஓடுறான் எண்டு ஊரே அல்லோலகல்லோலப்படுகினம். கிறீஸ்மேனைச் சொல்லிக்கொண்டு ஊரில இருக்கிற கள்ளரும், காவாலியும் இரவில தங்கட கைவரிசையைக் காட்டினம். உதுகள் என்னைப் பொறுத்தவரை பெரிய விஷயமில்லை தெரியுமோ. உந்த கிறீஸ்மேன், மர்மமனிதன் எண்டவையெல்லாம் நீண்டகாலத்துக்கு நிக்கமாட்டினம். அவையை ஒரு நோக்கத்துக்காக உலவவிடப்பட்டிருக்கினம். உதைத் தொடர்ந்து செய்யமுடியாது. நான் சொல்லுறது எங்கட வெள்ளை வேட்டிக்கள்ளரை ஓ... சொரி மன்னிக்கவேணும், வெள்ளிவேட்டிக் கிறீஸ் மனிதர்களைத்தானுங்கோ. அவைதான் சமூகத்தின்ர, இனத்தின்ர மிக ஆபத்தானவர்கள் புரியுதோ. தற்கால கிறீஸ்மேன் இரவிலதான் அட்டகாசம். உந்த வெள்ளைவேட்டி கிறீஸ் மேன்கள் முக்காலமும் அட்டகாசம்தானே.. என்ன விளங்குதோ.

**நான்:-** விளங்குது... விளங்குது... ஒவ்வொரு இனத்துக்கும் அவைதான் கிறீஸ்மேன்கள். தேர்தல் நேரத்தில வந்து பிச்சைக்காரர் மாதிரி வாசலில முகம் காட்டுறதுக்குப் பிறகு தங்கட உடம்பில கிறீசைப் பூசிக்கொண்டிச்சினமெண்டால் அடுத்த தேர்தலுக்குத்தானே தேச்சுக் குளிக்கினம் எண்டு சொல்லுறியள்.

**முத்து:-** பின்ன என்னண்டு சொல்லுறது. இந்தக் கிறீஸ் மனிதர்களைச் சனம் காணுதுகளாம், ஸ்பிறிங் சப்பாத்துப் போட்டிருக்கினமாம். பாஞ்சு பாஞ்சு ஓடுறானாம். ஆமி கேம்புக்குள்ள ஓடுறானாம் எண்டெல்லாம் சொல்லினம். எங்கட வெள்ளை வேட்டிகளை சனம் காணவே முடியுதில்லையே அதை நீர் கவனிச்சனீரோ?

**நான்:-** ஓம்... முத்தண்ணை. நீங்கள் உதைச் சொல்லவும்தான் எனக்கு எங்கட வெள்ளை வேட்டி கிறீஸ் மனிதர்கள் அண்மையில இந்தியா போனகதை ஞாபகம் வருகுது. இந்தியாவுக்குப் போன கிறீஸ் மனிதர்களின்ர கதையைக் கேள்விப்பட்டீங்களோ?

**முத்து:-** அதையேன் கேப்பான் பாருங்கோ. அது கிறீஸ் மனிதர்களின்ர கிரிசுகெட்ட கதையாம். இந்தியாவில இருந்து அழைப்பு எண்டவுடன யார் அழைக்கினம், ஏன் அழைக்கினம் எண்டதையெல்லாம் யோசிக்காமல், தொங்கடா, தூக்கடா எண்டு வெளிக்கிட்டவங்கள். உங்க போனால் ஒற்றுமையையும், ஒருமித்த கருத்தையும் காட்டுங்கோ எண்டதும், அப்புடியோ... அப்புடியெண்டால் என்ன? அது உங்க, பாண்டிபசாரில கிடைக்குமோ எண்டு பேந்தப் பேந்த முழிச்சுக்கொண்டு நிண்டிச்சினமுங்கோ. பிறகு நீ யார் தெரியுமோ நான் யார் தெரியுமோ எண்டு கோவணங்களையும் உயர்த்திக் கட்டிக்கொண்டிருக்கினமாம். எங்கட உந்த கிறீஸ் மனிதர்களின்ர சீத்துவம் தெரிஞ்சும் தமிழ் ஊடகங்கள் மூச்சுக்காட்டாமல் இருந்திச்சினம்.

**நான்:-** அதுசரி. அவைதான் எங்கட தமிழ் தேசிய மீட்பர்கள் எண்டு புகழ் பாடினவைக்கு அவையின்ர ஊதாரித்தனங்களை எழுதிறதெண்டால் கூச்சமாகத்தானே இருக்கும்.

**யாவும் கலப்படமற்ற கற்பனை**

# மின்சாரத்துக்குக் கடிவாளமிட்டவர்



பணத்தைச் சேமித்துக்கொள்ளாதே என்ற கொள்கையைக் கொண்ட ஸாண்டி மேனியன் வகுப்பைச் சேர்ந்தவர் அல்லவா. ஃபரடே? ஆகவே, இவர் தம் கண்டுபிடிப்பை உரிமைப் பதிவு செய்து கொள்ளவில்லை. தம் கண்டுபிடிப்பைப் பொது உடைமையாக்கி விட்டார். ஆராய்ச்சிகளைச் செய்து புதியவைகளைக் கண்டுபிடிப்பவர் மனித குலத்தின் சேமிப்பாளர்களே தவிர, செல்வந்தர்களாகக் கூடாது' என்ற மனப்பான்மை கொண்டவர் ஃபரடே. மின்சாரத்துக்குக் கடிவாளமிட்டதைத் தவிர ஃபரடே ஏராளமான ஆராய்ச்சிகளில் ஈடுபட்டிருக்கிறார். தம்முடைய பல்வேறு ஆராய்ச்சிகளின் மூலம் 450 புதிய செயல்முறைகளை அறிவித்திருக்கிறார். ஃபரடே கலப்பு உலோகங்களைக் கண்டார். பாதரசத்தில் இவர் செய்த ஆராய்ச்சி புகைப்படக் கலைக்கு வழிவகுத்துக் கொடுத்தது. சுரங்கங்களின் நவீன அமைப்புக்குத் திட்டமிட்டார். மனித குலத்தின் நல்வாழ்வுக்காகவே உழைத்த ஃபரடே, கடைசிவரை ஒன்றை மட்டும் மறக்கவேயில்லை.

உலகை வியக்க வைத்தவர்கள்


(வியப்புக்கள் தொடரும்...)

Regd. as a News paper at the G.P.O.(QD/129/NEWS/2011)




# பரிணாமம்

**காலத்துக்கு** காலம் உயிரினங்களிடம் ஏற்பட்ட பரிணாம வளர்ச்சியே மனிதன் என்று சொல்கிறது கூர்ப்புக் கொள்கை. அந்த மனிதனின் விடாமுயற்சியினாலும் தீராத ஆர்வத்தினாலும் மனித வாழ்வியலும் தொழில்நுட்பமும் பரிணாம வளர்ச்சியடைந்து கொண்டே இருக்கின்றது. அந்தவகையில் உலகின் முதலாவது 17 அங்குல எல்.ஈ.டி, எச்.டி இரட்டைத் திரைகளுடன் கூடிய மடிக்கணினியை அலஸ்காவைச் சேர்ந்த ஜி ஸ்கிரீன் நிறுவனம் உருவாக்கியுள்ளது. 'ஸ்பேஸ்புக்' என இம்மடிக்கணினி பெயரிடப்பட்டுள்ளது. இக் கணினியானது விண்டோஸ் 7 இயங்குதளத்தின் மூலம் இயங்கவுள்ளது. வருட இறுதியில் இது சந்தைக்கு வரவுள்ளது. இதை உருவாக்கியவர் ஜி ஸ்கிரீன் நிறுவனத்தின் பிரதான நிறைவேற்று இயக்குனரும் வடிவமைப்பாளருமான அலன் ஸ்டுவெர்ட் ஆவார். மற்றைய மடிக் கணினிகளை விட, இதில் 50% மேலதிக பணிகளை ஆற்ற முடியுமெனவும் தெரிவிக்கப் படுகின்றது. இதன் ஆரம்ப விலை 1899 அமெரிக்க டொலர்கள் என அறிவிக்கப்படுகிறது. ஏசர் நிறுவனமும் இரட்டைத் திரைகளைக் கொண்ட மடிக் கணினிகளை அறிமுகப்படுத்தியுள்ளமை குறிப்பிடத்தக்கது.




# பார்வை

**ரொரன்ரோவைச்** சேர்ந்த விவரணப்படத் தயாரிப்பாளரான றொப் ஸ்பென்ஸ் என்பவர் தனது மற்றைய கண்ணினால் காட்சிகளைப் பதிகின்றார். இது மூளையுடனோ அவரது பார்வையுடனோ தொடர்புபடுத்தப்படவில்லை. புதிய வீடியோ விளையாட்டுத் தயாரிப்பாளர்களான Deus Ex எனும் நிறுவனத்தினருடன் இணைந்து செயற்பட்டு இப்புதிய கமெராக் கண்ணைப் பொருத்தியுள்ளார். 2027 இல் உலகில் இவ்வாறான இயந்திரக் கண்களுடன் பலர் வீதிகளில் திரியலாம் என்றும் எதிர்பார்க்கப் படுகின்றது. இக்கருவியில் ஒரு கமெரா, கம்பியற்ற மாற்றி, மின்கலம் என்பன உள்ளடங்குகின்றன. இவை றொப்பின் கட்கழிக்குள் வைக்கப்பட்டுள்ளன. இதற்கு 9மி.மீ. மட்டுமே தேவைப்பட்டது. சிறுவயதில் ஒரு விளையாட்டின்போது தனது கண்ணை இழந்த றொப் 5 வருடங்களுக்கு முன்னர் கண்ணையும் அகற்றியிருந்தார். இவரது கண்ணில் பொருத்தப்பட்டுள்ள கமெராவிலிருந்து காட்சிகள் ஒரு கையடக்கமான திரைக்கு மாற்றப்படுகின்றன. 3.2மி.மீ. சதுர அடியும் 328×250 பிக்செல் கொண்டதுமான சிறியதொரு கமெரா கலிபோர்னியாவின் OmniVision நிறுவனத்தினால் அன்பளிப்பாகக் கொடுக்கப்பட்டது.






# பயணம்



**நீண்ட** தூரம் பயணம் செல்பவர்கள் ஓய்வெடுப்பதற்கும் தங்குவதற்கும் ஏராளமான வசதிகள் உண்டு. ஆனால், மலையேறுபவர்கள் பற்றி நீங்கள் ரொம்பவே அறிந்திருப்பீர்கள். மிகப்பெரிய செங்குத்தான மலைகளில் ஏறுபவர்கள் அதன் உச்சியை தொடுவதற்கு பல நாட்கள் தேவைப்படுவதுண்டு. இவ்வாறான சந்தர்ப்பங்களில் அவர்கள் ஓய்வெடுக்க அல்லது தூங்குவதற்கு என்ன செய்வார்கள் என நீங்கள் சிந்தித்துப் பார்த்ததுண்டா? இந்த படங்களை பாருங்கள். அப்போது புரியும் செங்குத்தான மலைகளில் நாட்கணக்காக ஏறுபவர்கள் எங்கே எப்படி தூங்குவார்கள் என்பது.

# கலை அம்சம்

**சிறந்த கட்டட கலையமைப்புக்கு முன்னுதாரணமாய் இருந்த தாஜ்மகாலுக்கு போட்டியாக புதிதாய் நிர்மாணிக்கப்படவுள்ள Monument of Love எனப்படும் அமைப்பு தலைதூக்கவுள்ளது! அதனுடைய திட்ட வரைபையே இங்கு படத்தில் காண்கிறீர்கள். பார்ப்பதற்கு கண்ணுக்கு விருந்தளிக்கும் வகையில் இருக்கும் போல்தான் தோன்றுகின்றது. ஆனால் தாஜ்மகாலை விஞ்சுமா என்பதைப் பொறுத்திருந்துதான் பார்க்க வேண்டும்.**





# பணமழை





**நெதர்லாந்தில்** தெற்கு லிம்பெர்க் மாகாணத்தில் எல்ஸ்லூ நகரில் உள்ள பெருந்தெரு ஒன்றால் பாரிய கொன்டெய்னர் லொறி மூலம் யூரோ நாணயத் தாள்கள் பரிமாற்றத்துக்காக கொண்டுசெல்லப்பட்டது. அதன்போது தவறுதலாக கொன்டெய்னரின் கதவு திறந்துகொள்ள, உள்ளிருந்த பணம் காற்றில் கிளம்பி, தெருவில் மழைபோல் பொழிந்தது. வீதியால் சென்றுகொண்டிருந்தவர்கள் அப்படி அப்படியே வாகனங்களை நிறுத்திவிட்டு பணம் பொறுக்குவதில் மும்முரமானார்கள். தெரு முழுவதும் பணம் நிறைந்து காணப்பட்டது. 10, 20 மற்றும் 50 யூரோ நாணயத்தாள்களே இவ்வாறு வீணாக்கப்பட்டன. இதுபற்றி அதிகாரமளிக்கப்பட்ட அதிகாரியொருவர் தொலைக்காட்சிக்கு வழங்கிய செவ்வியில், மேற்படி தொலைந்து போன நாணயங்களை செல்லுபடியற்றன வாக்கப்பட இருப்பதாக தெரிவித்தார்.

